॥ श्रीः ॥

॥ श्रीराधाकृष्णपरब्रह्मणे नमः ॥

ब्रह्मसूत्रशाङ्करभाष्यम् ॥

चतुर्थः फलाध्यायः ॥

ப்ரம்ஹஸூத்ர சாங்கர பாஷ்யம்.

நான்காவது பலாத்தியாயம்

தமிழுரையுடன்.

இச்சிறந்த உரை
மஹாமஹோபாத்தியாய
வேதாந்தகேஸரி பங்காளுடு ப்ரம்ஹஸ்ரீ
கணபதி சாஸ்திரிகள் அவர்களின் முக்கிய சிஷ்யரும்,
வியாகரண வேதாந்த சாஸ்திர பாரங்கதரும், பாகவத
பகவத்கீதோபன்யாஸகரும், சோதிட மந்திர சாஸ்திர வித்வானும்,
'ஆர்யமத ஸம்வர்த்தனீ' பத்திராதிபருமான
ப்ரம்ஹஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள்

அவர்களால் இயற்றித் தமது "ஆர்யமத ஸம்வர்த்தனீ"
அச்சுக்கூடத்தில் அச்சிட்டு சென்னையில்
பிரசுரஞ் செய்யப்பட்டது.

காபிரைட்.]
1932.   [விலை ரூ 2-8-0

ஆர்யமதஸம்வர்த்தனீ பிரஸ்,
72, பெரியதெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

இப்புஸ்தகம் கிடைக்குமிடங்கள்.
கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,
72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.
அல்லது :—
கஸ்தூரிரங்கவிலாஸ், நடேசய்யர் தெரு, மாம்பலம், சென்னை.

ப்ரம்ஹ ஸூத்ர சாங்கரபாஷ்யம்.

நான்காவது அத்தியாயம்.

முகவுரை.

இந்த நான்காவது அத்தியாயத்தில் ஜீவன்முக்தியும், சரீரத்தினின்றும் உபாஸகஜீவன் வெளிக்கிளம்பி உத்தராயணமார்க்கப்வழியாக ஸகுணப்ரம்ஹத்தையடையும் முறையும், ப்ரம்ஹலோகமின்னதென்பதும் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. மற்றுமுள்ளவிசேஷங்களை அந்தந்தப்பாதங்களிலுள்ள அதிகரணங்களின் அவதாரிகைகளில் எழுதியிருப்பதால் அவ்விடத்தில் அவற்றைக்கண்டுகொள்க.

இதுவரை இம்முறையில் தமிழில் பெயர்த்து வெளியிடப்படாத இந்தச் சாங்கர பாஷ்யத்தைத் தமிழில் பெயர்த்து வெளியிட ஆரம்பித்தபொழுது சுளுவில் இதை முடித்து் விடலாமெனநான் எண்ணினதுண்டு. அவ்விதம் எண்ணினதற்கேற்ப இடையிடையே சில மஹான்கள் செய்த பொருளுதவியானது எனக்குச் சற்று ஆறுதலையளித்திருந்தபோதிலும் போகப்போக அகழந் தெரியாமல் இதில் ஏன் இரங்கினேமென இரவுபகலாய் கவலை கொண்டு ஏங்கி இதை முடித்துக் கண்ணால் பார்ப்போமா எனப் பல ஸமயங்களில் பலவிதமான துக்கத்தை யடைந்ததுண்டு. இவ்விதம் நானடைந்த கவலையைப் போக்கி இதைமுடிக்கும்படி அருள்புரிந்த ஸர்வேஸ்வரனும் பக்தபக்ஷபாதியுமான ஸ்ரீகோபாலனை இடைவிடாது ஸ்துதித்துக் கொண்டிருக்கிறேன்.

பொதுவாய் உலகில் இதுபோன்ற வேதாந்தசாஸ்திரத்தைப்படித்து அதிலுள்ள விஷயத்தை யறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலுள்ள ஜனங்கள் வெகுசிலரே என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை. அதிலும் படிக்க விரும்புபவர்க்குப் போதியபடி உபதேசிக்கும் குரு கிடைப்பதில்லை. தக்கபடி உபதேசிக்கும் திறமையுடையவர்க்கு அவரது ஸமயம் பார்த்து படிக்கும் சிஷ்யர் கிடைப்பதில்லை. இவ்விரண்டும் நேர்ந்தாலும் வடமொழியிலுள்ள இந்த பாஷ்யத்தைத் தமது தாய் பாஷையான தமிழில் ஆசிரியர் பாடம் சொன்ன போதிலும் வேறு சாஸ்திர பாண்டித்யமில்லாது வேதாந்த சாஸ்திராப்யாஸம் செய்பவர்க்கு அவர்செய்யும் உபதேசம் மனதில் நன்கு பதிவதில்லை. அப்பொழுது அவர் தாமறிந்த பாஷையில் பாஷ்யத்தின் கருத்தை வெளியிட்டிருந்தால் தமக்கு மிக்க உபகாரமாக இருக்குமே என எண்ணுவர். அப்படியே எண்ணினர் என்பது எனக்குத் தெரியும். அத்தகைய மஹா ஜனங்களுக்கு இம்மொழிபெயர்ப்பு அவரது இஷ்டத்தைப் பூர்த்தி செய்யக் கூடும் என்பதை நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. மேலும் ஏதோ ஜீவனார்த்தம் பல வழிகளிலும் வேலை செய்யும்படி நேர்ந்த சில ஆஸ்திகர்கள் தமது இஷ்டத்தைப் பூர்த்தி செய்துவைக்கக் கூடிய உத்தம குருக்களிருக்

குமிடம் போய் அவர்களது ஸ்பயத்தை எதிர்பார்த்து வேதாந்த சாஸ்திராப்யாஸம் செய்ய மனமிருந்தும் போதிய அவகாசமும் ஸவுகரியமு மில்லாமையால் இந்த ஜன்மாவில் சங்கர பாஷ்யத்தின் பொருளை ஸ்தூலமாகவாவது நாம் எப்படி அறிந்துகொள்ளுவது என வெண்ணுகின்றவராய் போதிய ஸாதனமின்மையால் ஆங்கில பாஷையில் பெயர்க்கப்பட்ட புஸ்தகத்தைக்கொண்டு அதன் பொருளை யறிய வெண்ணங்கொண்டவராய் பாஷ்யத்தின் பொருள் கஷ்ட மொருபுரமிருக்க ஆங்கில பாஷையின் பொருளுக்காக அகராதிப் புஸ்தகங்களை வைத்துக்கொண்டு பாடும்படுகின்றனர். எனது மொழிபெயர்ப்பானது அவரறிந்த தாய் பாஷையான தமிழிலேயே ஏற்பட்டிருப்பதுடன் ஆங்காங்கு குறிப்பெழுதி விளக்கப் பட்டுமிருப்பதால் இவ்விதம் பாடுபடும் இம்மாதிரியான மஹான்களுக்கு இது மிக்கவுதவியாகவே தானிருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும்.

ஆனால் இந்த பாஷ்யத்தைத் தமிழில் பெயர்த்து வெளியிட்டது முற்றிலும் தவறான காரியமெனச் சிலப் போலிபண்டிதரும், அவரைப் பின்பற்றும் சிலப்ரபுக் களும் எண்ணுகின்றனர் என்பது எனக்குத் தெரியும். ஆயினும் அதில் எனக்கு அணுவும் கவலையில்லை. ஆங்கில மொழிபெயர்ப்பைக் கொண்டு படிப்பதை ஆக்ஷேபிக்காத இவர் தமிழில் வெளியிட்டதை ஏன் ஆக்ஷேபிக்க வேண்டுமோ தெரியவில்லை. ஆங்கிலத்தில் வெளியிட்டதும் அதைப்படிப்பதும் தப்புத்தான் அதுபோலவே தானிதுவுமாகுமென்கிறோம் என்பாரேல், இவரிடம் வந்து நாம் தர்ம சாஸ்திரம் கேட்கும் போதல்லவா இவர் நமக்கு உபதேசிக்க வேண்டும். ஆகவே நாம் கேட்டால் இவர் அப்பொழுது உபதேசிக்கட்டும. ஆனால் தமிழில் பெயர்த்து வெளியிட்டது நியாயந்தானோ எனின்? நியாயமென்பதில் யாதும் தடையில்லை என்றே நாம் எண்ணுகிறோம். ஏன்? தக்க குருவினிடம் சாந்தி சொல்லி தக்ஷிணாமூர்த்தி அஷ்டகஞ்சொல்லி வந்தன வழிபாடுகளெல்லாம் செய்து விட்டுப் பாஷ்யபாடம் கேட்கும் பொழுது அந்த ஆசிரியர் எந்தப் பாஷையில் பாஷ்பத்தை உபதேசிக்கிறார் என்பதைக் கவனிப்போம். அவர் தமிழராகவிருந் தால் தமிழிலேயே தானுபதேசிக்கிறார். அவ்விதமவர் தமிழிலுபதேசிப்பதைக் கொண்டு பாஷ்யத்தின் பொருளை யறிவது நியாயமாகுமானால் பாடஞ் சொல்லுங் காலத்தில் சொல்லப்படும் தமிழ் பாஷையிலேயே பெயர்த்து வெளியிட்டதில் தவறு என்ன இருக்கிறது என்பதை ஏன் இவர் உணரக் கூடாது? என்றும். மேலும் வேறு சாஸ்திர க்ஞானமில்லாதவர் எவ்வளவு ஸாவதானமாகப் பாடம் கேட்டபோதிலும் அவர்க்கு எமது மொழிபெயர்ப்பு மூலம் எவ்வளவு அறிவேற் படுமோ அவ்வளவு அறிவு பாடம்கேட்பதால் மட்டும் ஏற்படாது என்பது எனது எண்ணமாயினும் ஆசிரியர் மூலம் கிடைத்த பொருளை இதனுதவியால் மனனம் செய்து கொண்டு தமது இஷ்டபூர்த்தி செய்து கொள்ளலாம் என நாமெண்ணு வதில் தவறுஎதவுமில்லை என்பதே எமது கருத்தாகும். இதுவரை தமிழில்பெ யர்த்து வெளியிடப்படாத அபூர்வமான பலசாஸ்திரக்கிரந்தங்களை சுமார் 10-வருஷ காலமாக நான் தமிழில் பெயர்த்து வெளியிட்டுவருவதில் இன்றுவரை சுமார் 8000 எட்டாயிரம்பக்கங்கள்வரைவெளிவந்திருக்கிறது. இதற்கு எவ்வளவுரூபாய்செல

வாகிஇருக்கும்· எவ்வளவு பாடுபட்டிருக்கவேண்டும் என்பது நான் சொல்லாமலே விளங்கக்கூடும். அவற்றுள் இந்தச் சூத்ரபாஷ்யவிஷயமாக எனக்கேற்பட்ட பொருள் நஷ்டமும் சரீரக்கஷ்டமும் தான் அதிகம். இவ்விஷயமாக இன்றுவரை சில மஹான்களுதவியதுபோகச் சுமார் 5000 ஐந்து ஆயிரம் ரூபாய்வரை வெளியில் நான் கொடுக்கவேண்டியதாக பாக்கியிருக்கிறது. இப்புஸ்தகமோ பொதுவாய் நாவல்கள் போல யாவரும் சுளுவில் படிக்கக்கூடியதன்று. அவ்விதமிதில் சிரத்தை கொண்டு படிக்க விரும்புகின்றவரில் பலர் பணங்கொடுத்துப் புஸ்தகத்தை வாங்கிப் படிக்கப் போதிய சக்தியற்றவராக இருக்கின்றனர். பணங்கொடுத்துவாங்கச் சக்தியுள்ளவர்களோ இப்பொழுது என்ன வேதாந்தம் வேண்டியிருக்கிறது. எல்லாம் பின்னால் பார்த்துக் கொள்வோம் எனச் சாக்குப்போக்குச் சொல்லிவிடுகின்றனர். இந்நிலையில் எவரைநம்பி நாமிந்தவேலையி லிரங்கினேமோ அவரின் ஆதரவு இல்லாமல் போகவே அச்சிட்ட புஸ்தகங்கள் அப்படியே வைக்க இடமில்லாமல் ஓரேகுப்பலாய் குவிந்து கிடக்கின்றன. ஆகவே மீதம் வெளியார்க்குக் கொடுக்கவேண்டிய தொகையை எப்படி கொடுப்பது என்று ஏக்கமுமுள்ளவனாக இருந்து வருகிறேன் ஆகவே ஸத்வித்யா ப்ரியர்களும் ஸத்வித்யாப்ரசாரத்தில் ஆவலுள்ளவர்களுமான மஹான்கள் எனது ஶ்ரமத்தைப்போக்கி உதவ வேண்டுமாய் அவர்களை ப்ரார்த்திக்கிறேன்.

மற்றுமொரு விஷயத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதாவது:—இந்தச் சாங்கரபாஷ்யத்தை நானே மொழிபெயர்த்தும் நானே அதற்கு வேண்டிய பொருளைத்தேடியும், நானேப்ரூப் பார்த்தும் சொந்தமான அச்சாபீஸில் நானே அச்சிட்டும் வெளியிட்டிருப்பதில் இடையிடையே ஏதேனும் சொற்பிழையோ பொருட்பிழையோஇருக்கலாம். அவற்றை எந்த மஹான்களேனும் எனக்குத் தெரிவித்தால் நியாயமானால் அடுத்தபதிப்பில் அதை த்திருத்திவெளியிட ஒருபொழுதும் பின்வாங்கமாட்டேன் என்றும்—

இங்ஙனம் ஸத்வித்யாப்ரியர்களான மஹான்களின் பரிபூர்ணமானவுதவியை ஆவலுடன் எதிர்பார்க்கும்

கடலங்குடி நடேசசாஸ்திரிகள்,

சங்கரகிங்கரன்,

கஸ்தூரிரங்கவிலாஸ், நடேசய்யர்தெரு, மாம்பலம், சென்னை.

(20–7–1932)

விஷய அட்டவணை

ஆவிருத்யதிகரணம் (1)		**பக்கம்.**
மூன்றுநான்காவது அத்யாயங்களின் ஸம்பந்தம் கூறல்	...	1
"ஆவிருத்திரஸக்ருதுபதேசாத்" என்ற ஸூத்திரார்த்தம்.	...	2
ஶ்ரவணுதிஸாதனங்களை ஆத்மஸாக்ஷாத்காரமுண்டாகும் வரை ஆவிருத்தி செய்யவேண்டும் என்பது	...	3
"லிங்காத்ச" என்ற ஸூத்திரார்த்தம்	...	4
நிர்விசேஷ ப்ரம்ஹவிஷயமான ஸாக்ஷாத்காரமுண்டாவதில் ஆவிருத்திபயனற்றது என்றசங்கை	...	5-6
ஒருதடவை ஶ்ரவணுதிகளைச் செய்வதால் ஸாக்ஷாத்காரமுண்டாகாதவனுக்கு ப்ரதிபந்தத்தைப்போக்கும் வாயிலாக நிர்விசேஷப்ரம்ஹஸாக்ஷாத்காரவிஷயத்திலும் ஆவிருத்தி பயனுள்ளதாகவே ஆகின்றது என்ற ஸமாதானம்	...	7-10
ஆத்மத்வோபாஸனுதிகரணம் (2)	....	11
"ஆத்மேதிதூபகச்சந்தி க்ராஹயந்தி ச" என்ற ஸூத்திரார்த்தம்	....	,,
ப்ரம்ஹமானது தன்னைக்காட்டிலும் வேறாக கிரஹிக்கத்தகுந்தது என்ற பூர்வபக்ஷம்	...	12
ப்ரம்ஹத்தைத் தன்னைவிட வேறுபடாததாகவே கிரஹிக்கவேண்டும் என்ற ஸித்தாந்தம்	...	12-14
ப்ரதீகாதிகரணம் (3)	...	15
"ந ப்ரதீகே நஹி ஸ:" என்ற ஸூத்திரார்த்தம்	...	,,
ப்ரதீகோபாஸனுஸ்தலங்களில் ப்ரதீகத்தினிடத்தில் ஆத்மபுத்தி செய்யவேண்டுவதில்லை என்பது	...	16
ப்ரம்ஹதிருஷ்ட்யதிகரணம் (4)	...	17
"ப்ரம்ஹதிருஷ்டிருத்கர்ஷாத்" என்ற ஸூத்திரார்த்தம்	...	,,
"ஆதித்யோப்ரம்ஹ" என்றதாதி ஸ்தலங்களில் ஆதித்யனிடத்தில் ப்ரம்ஹதிருஷ்டியோ ப்ரம்ஹத்தினிடத்தில் ஆதித்யதிருஷ்டியோ செய்யலாமென்றோ, அல்லது ப்ரம்ஹத்தினிடத்தில் ஆதித்யபுத்தி செய்யவேண்டும் என்றே கொள்ளவேண்டும் என்ற பூர்வபக்ஷம்..		18
ஆதித்யாதிகளிடத்தில் ப்ரம்ஹதிருஷ்டிதான் செய்யவேண்டும் என்ற ஸித்தாந்தம்	...	19
ஆதித்யாதி மத்யதிகரணம் (5)		21
"ஆதித்யாதி மதயஶ்ச அங்க உபபத்தே:" என்ற ஸூத்திரார்த்தம்	...	,,
"ய ஏவாஸௌ தபதி தமுத்கீத முபாஸீத" என்றதாதி ஸ்தலங்களில் ஆதித்யாதிகளில் உத்கீதாதி புத்தி செய்யவேண்டுமென விதிக்கப்		

பக்கம்.

படுகின்றதென்ற பூர்வபக்ஷம் ... 22-23

உத்கீதாதிகளில் ஆதித்யாதிபுத்திகளைத் தான் செய்யவேண்டும் என்ற ஸித்தாந்தம் ... 23-26

ஆஸீனாதிகரணம் (6) 26

"ஆஸீன: ஸம்பவாத்" என்ற ஸூத்திரார்த்தம் ... ,,

உபாஸனங்களை உட்கார்ந்து கொண்டு தான் செய்யவேண்டுமென்பது 27

"த்யானாச்ச" என்ற ஸூத்திரார்த்தம் ... 28

"த்யாயதி" (தியானம் செய்கிறான்) என்ற சப்தமானது உட்கார்ந்திருப்பவனிடமே பிரயோகிக்கப்படுவதாலும் தியானமும் உபாஸனமும் ஒன்றாகையாலும் உபாஸனமும் உட்கார்ந்தே அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்பது .... ,,

"அசலத்வம் சாபேக்ஷ்ய" என்ற ஸூத்திரார்த்தம் ... ,,

"த்யாயதீவ ப்ருதிவீ" என்றதாதி ஸ்தலங்களில் ஸ்தைர்யத்தை முன்னிட்டு த்யாயதி என்ற சப்தம் பிரயோகிக்கப் படுவதாலும், உட்கார்ந்திருப்பவனுக்கே ஸ்தைர்யம் ஸம்பவிக்கு மாதலாலும் தியானம் உட்கார்ந்திருப்பவனாலேயே செய்யத்தக்கது என்பது... ,,

"ஸ்மரந்தி ச" என்ற ஸூத்திரார்த்தம் ... ,,

உபாஸனத்தை உட்கார்ந்து கொண்டே செய்யவேண்டும் என்பதில் ஸ்மிருதியு மிருக்கின்றதென்பது .... ,,

ஏகாக்ரதாதிகரணம் (7) 29

"யத்ரைகாக்ரதா தத்ராவிசேஷாத்" என்ற ஸூத்திரார்த்தம் .... ,,

அங்கத்தை ஆச்ரயிக்காத உபாஸனங்களில் திக், தேசம், காலம் இவற்றின் நியமம் கிடையாது. எந்த இடத்தில் சித்தம் ஒருமுகப்படுமோ அங்கு இருந்துகொண்டு உபாஸனம் செய்யவேண்டும் என்பது 29-30

ஆப்ராயணாதிகரணம் (8) 30

"ஆப்ராயணாத் தத்ராபிஹி த்ருஷ்டம்" என்ற ஸூத்திரார்த்தம் .... ,,

ஸ்வர்க்காதிரூப புருஷார்த்தத்தைப் பயனாக வுடைய உபாஸனங்களை மரணமுண்டாகும் வரை ஆவிருத்திக்கவேண்டும் என்பது ... 31-32

தததிகமாதிகரணம் (9) 32

"தததிகம உத்தர பூர்வாகயோ ரச்லேஷ விநாசௌ தத்வ்யபதேசாத்" என்ற ஸூத்திரார்த்தம் ... 33

ப்ரம்ஹஸாக்ஷாத்காரம் வந்தவனுக்கு பூர்வபாபகர்மங்கள் நாசத்தையும், உத்தரபாபகர்மங்கள் அஸம்பந்தத்தையு மடைகின்றன வென்பது... 33-36

இதராஸம்ச்லேஷாதிகரணம் (10) 37

"இதரஸ்யாப்யேவ மஸம்ச்லேஷ: பாதே து" என்ற ஸூத்திரார்த்தம் ,,

வித்வானுக்கு பூர்வபுண்யங்கள் நாசத்தையும் உத்தரபுண்யங்கள் ஸம்பந்த

பக்கம்.

மின்மையையு மடைகின்றன வென்பது 38

அநாரப்த கார்யாதிகரணம் (11) 39

"அனாரப்த கார்யே எவது பூர்வே ததவதே:" என்ற ஸூத்திரார்த்தம் ”

பலனைக் கொடுக்க வாரப்பிக்காத புண்யபாபகர்மங்களுக்குத் தான் வித்யையின் ஸாமர்த்யத்தினால் க்ஷயமுண்டாகின்றதென்பது ... 40

அக்னிஹோத்ராதிகரணம் (12) 41

"அக்னிஹோத்ராதிது தத்கார்யாயைவ தத்தர்சனாத்" என்ற ஸூத்திரார்த்தம் .... ”

அக்னிஹோத்ராதிகளான நித்ய கர்மங்கள் ஞானோத்பத்திக்குஸாதனமாகும் வாயிலாக மோக்ஷஸாதன மாகின்றனவென்பது ... 42

"அதோங்யாபி ஹ்யேகேஷா முபயோ:" என்ற ஸூத்திரார்த்தம் 43

அக்னிஹோத்திராதிகளான நித்யகர்மங்களைக்காட்டிலும் வேறுபட்டதாயும், பலனில் விருப்பத்துடன் அனுஷ்டிக்கப்பட்டதாயு மிருக்கின்ற கர்மத்துக்கு "ஸுஹிருத: ஸாதுகிருத்யாம்" என்றதால் விநியோகம் சொல்லப்படுகிறது என்பது .... ”

வித்யா ஸாதனத்வாதிகரணம் (13) 44

"யதேவ வித்யயேதிஹி" என்ற ஸூத்திரார்த்தம் ... ”

வித்யையுடன் கூடின கர்மமே ப்ரம்ஹக்ஞானஹேதுவாகும் என்ற பூர்வபக்ஷம் ... 46

வித்யையுடன் கூடினதும், அஃதில்லாததுமான இரண்டு விதமான கர்மமும் ப்ரம்ஹக்ஞானஸாதனம் என்ற ஸித்தாந்தம் ... 47

போகாதிகரணம் (14) 48

"போகேந த்விதரே க்ஷபயித்வா ஸம்பத்யதே" என்ற ஸூத்திரார்த்தம் ”

ப்ராரப்தகர்மம் தேய்ந்தவுடன் வித்வானுக்கு மோக்ஷம் நிஸ்சயமாயுண்டாகின்றதென்பது 49

இரண்டாவது பாதம்.

வாகதிகரணம் (1) 50

"வாங்மனஸி தர்சனாத் சப்தாச்ச" என்ற ஸூத்திரார்த்தம் ... ”

"வாங்மனஸி ஸம்பத்யதே" என்றதாதி சுருதிகளில் வாகாதிகளுக்கு விருத்தியின் உபசமம் மட்டுமே சொல்லப்படுகின்றதென்பது 51-52

"அத ஏவச ஸர்வாண்யநு" என்ற ஸூத்திரார்த்தம் ... 53

வாக்குக்கு ப்போல் மற்ற சக்ஷுராதிகளுக்கும் விருத்திவாயிலாகவே மனத்தில் லயமுண்டாகின்ற தென்பது .... ”

மனோதிகரணம் (2) ”

"தந்மன: ப்ராண உத்தராத்" என்ற ஸூத்திரார்த்தம் .... ”

*

	பக்கம்.
" மன: ப்ராணே " என்ற விடத்தில் மனத்துக்கு ப்ராணனிடத்தில் ஸ்வரூபலயமே செல்லப்படுகின்றதென்ற பூர்வபக்ஷம் ...	54
மனத்துக்கும் ப்ராணனிடத்தில் விருத்தித்வாராவாகவே லயம் சொல்லப்படுகின்றதென்ற ஸித்தாந்தம் ...	55
அத்யக்ஷாதிகரணம் (3)	"
" ஸோத்யக்ஷே ததுபகமாதிப்ய: " என்ற ஸூத்திரார்த்தம் ...	"
ப்ராணனுக்கு விக்ஞானாத்மாவினிடம் விருத்திவாயிலாக ப்ரளயம் ஏற்படுகின்றதென்பது ...	56
" பூதேஷு தத்ஶ்ருதே: " என்ற ஸூத்திரார்த்தம் ...	57
" ப்ராண: தேஜஸி " என்ற ஶ்ருதியினல் ப்ராணனுடன் கூடின ஜீவனுக்கு தேஜஸ்ஸுடன் கூடின பூதங்களில் ஸ்திதிசொல்லப்படுகின்றதென்பது ...	58
" நைகஸ்மிந் தர்சயதோ ஹி " என்ற ஸூத்திரார்த்தம் ...	"
ஜீவன் வேறு சரீரத்தை யடையும் ஸந்தர்ப்பத்தில் ஸூக்ஷ்ம சரீரமும் அநேகபூதாத்மகமாக விருப்பதால் தேஜஸ் ஒன்றில் மட்டு மிருப்பதில்லை மற்ற பூதங்களுடன் கூடின தேஜஸ்ஸிலேயே இருக்கிறன் என்பது ...	59
ஆஸ்ருத்யுபக்ரமாதிகரணம் (4)	60
" ஸமாநா ச ஆஸ்ருத்யுபக்ரமாதம்ருதத்வம் ச அநுபோஷ்ய " என்ற ஸூத்திரார்த்தம்	"
வித்வான் அவித்வான் இருவருக்கும் அர்ச்சிராதி மார்க்கப்ராப்தியுண்டாகும் வரையில் உத்க்ராந்தி ஸமானமென்பது	61-62
ஸம்ஸாரவ்யபதேசாதிகரணம் (5) ...	62
" ததாபீதே: ஸம்ஸார வ்யபதேசாத் " என்ற ஸூத்திரார்த்தம்	"
தேஜஸ் முதலிய பூதஸூக்ஷ்மங்களுக்கு பீஜபாவாவசேஷமாகவே ஸம்பத்தி யுண்டாகின்றதென்பது	63
" ஸூக்ஷ்மம் ப்ரமாணதஶ்ச ததோ பலப்தே: " என்ற ஸூத்திரார்த்தம்	64
இந்தச் சரீரத்தினின்றும் வெளிக்கிளம்புகிற ஜீவனுக்கு ஆதாரமான மற்ற பூதங்களுடன் கூடின தேஜஸ்ஸானது ஸ்வரூபத்தினுலும் ப்ரமாணத்தினுலும் ஸூக்ஷ்மமாகவே இருக்கவேண்டு மென்பது..	"
" நோபமர்த்தேநாத: " என்ற ஸூத்திரார்த்தம் ...	"
லிங்கசரீரமானது ஸூக்ஷ்மமாக இருப்பதால்தான் ஸ்தூலசரீரத்துக்கு தாஹாதிகள் ஏற்பட்டாலும் இது நாசமடைவதில்லை என்பது ...	"
"அஸ்யைவசோபபத்தே ரேஷ ஊஷ்மா" என்ற ஸூத்திரார்த்தம் ...	65
ஸ்தூல சரீரத்தில் அனுபவிக்கப்படும் சுடுகையானது ஸூக்ஷ்ம சரீர ஸம்பந்தத்தாலே யேயுள்ளது என்பது	"

பக்கம்.

ப்ரதிஷேதாதிகரணம் (6) 65

"ப்ரதிஷேதாதிதிசேத் ந சாரீராத்" என்ற ஸூத்திரார்த்தம் .... "

அவித்யாதி கிலேசங்களற்ற மோக்ஷத்தில் கதி உத்க்ராந்தி இவை கிடையாதென யாதொரு ப்ரதிஷேதம் சொல்லப்பட்டதோ அது ஜீவனிடமிருந்துகிடையாதென்றுதான் சொல்லப்படுவதால் ப்ரம்ஹவித்துக்கும் தேஹத்தினின்றும் உத்க்ராந்தி யுண்டு என்ற பூர்வ பக்ஷம் ... 66

"ஸ்பஷ்டோ ஹ்யேகேஷாம்" என்ற ஸூத்திரார்த்தம் ... 67

சில சாகைகளில் ப்ரம்ஹவித்துக்கு தேஹத்தினிடமிருந்தே உத்க்ராந்தி நிஷேதம் நன்ருய்க் காணப்படுவதால் "ந தஸ்மாத் ப்ராணு உத்க்ராமந்தி" என்ற விடத்திலும் தேஹத்தினிடமிருந்தே உத்க்ராந்தி ப்ரதிஷேதம் சொல்லப்படுகின்றதென்பது ... 68

"ஸ்மர்யதேச" என்ற ஸூத்திரார்த்தம் ... 69

மஹாபாரதாதிகளிலும் பரப்ரம்ஹத்தை அறிந்தவனுக்குக் கதி, உத்க்ராந்தி இவற்றின் அபாவம் கூறப்படுகின்றதென்பது ... "

வாகாதிலயாதிகரணம் (7) 70

"தாநி பரே ததாஹ்யாஹ" என்ற ஸூத்திரார்த்தம் ... "

ப்ரம்ஹவித்தினுடைய இந்திரியங்கள் பரமாத்மாவினிடம் லயத்தை யடைகின்றன என்பது ... 71

அவிபாகாதிகரணம் (8) ... 72

"அவிபாகோ வசனுத்" என்ற ஸூத்திரார்த்தம் ... "

வித்வானுடைய இந்திரியாதிகளின் ப்ரளயமானது மீதமின்றியே உண்டாகின்றதென்பது .... "

ததோகோதிகரணம் (9) 73

ததோகோக்ர..........ஸுதாதிகயா" என்ற ஸூத்திரார்த்தம் ... "

வித்வானனவன் தலையிலுள்ள ஸ்தானம் வழியாகவே வெளிக்கிளம்புகிருன். மற்ற ஜீவர்கள் மற்ற சரீரத்வாரத்தினின்றும் வெளிக்கிளம்பு கின்றனர் என்பது ... 74-75

ரஶ்ம்யதிகரணம் (10) 75

"ரஶ்ம்யனுஸாரீ" என்ற ஸூத்திரார்த்தம் 76

உபாஸகன் பகலிலோ இரவிலோ எந்தநேரத்திலிறந்தபோதிலும் ஸூரிய ரஶ்மியை அனுஸரித்து மேல்லோகம் செல்லுகிருன் என்பது ... "

"நிசி நேதிசேத் ந ஸம்பந்தஸ்ய யாவத்தேஹபாவித்வாத் தர்சயதி ச" என்ற ஸூத்திரார்த்தம் 77

இரவில் இறந்தவனுக்கு நாடிக்கும் ஸூரியகிரணத்துக்கும் ஸம்பந்தமில்லாதிருப்பதால் அவனுக்கு ரஶ்ம்யனுஸாரித்வம் கிடையாதென்ற ஆக்ஷேபமும் ஸமாதானமும் ... 77

பக்கம்.

தக்ஷிணாயனாதிகரணம் (11) 78

“ அதச்சாயனேபி தக்ஷிணே ” என்ற ஸூத்திரார்த்தம் ... ”

தக்ஷிணாயனத்தில் மரணமடைந்த வித்வானும் வித்யையின் பலனை யடையவே யடைகிறான் என்பது ... 79

“யோகின: ப்ரதிசஸ்மர்யதே ஸ்மார்த்தேசைதே” என்ற ஸூத்திரார்த்தம்... 80

பகவத்கீதாதி ஸ்மிருதிகளில் உபாஸகனுடைய மரணவிஷயமாய் பகல் உத்தராயணம் முதலிய விசேஷம் கூறியதின் கருத்து ... ”

மூன்றாவது பாதம்.

அர்சிராத்யதிகரணம் (1) 81

“ அர்ச்சிராதிநா தத்ப்ரதிதே:” என்ற ஸூத்திரார்த்தம் .... ”

அர்ச்சிராதிகளான மார்க்கங்கள் பரஸ்பரம் வேறுபட்டவைகள் என்று பூர்வபக்ஷம் ... 82

ஒரே மார்க்கம் பலவிசேஷணங்களுடன் கூடினதாக வாகின்றதென்ற ஸித்தாந்தம் ... 83-84

வாய்வதிகரணம் (2) 85

“ வாயுமப்தாதவிசேஷ விசேஷாப்யாம் ” என்ற ஸூத்திரார்த்தம் .... ”

அர்ச்சிராதி மார்க்கவரிசையில் ஸம்வத்ஸரத்துக்குப் பிறகு தேவலோகத்தையும், அதற்குப் பிறகு வாயுவையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது ... 86-87

தடிததிகரணம் (3) 88

“ தடிதோதி வருண : ஸம்பந்தாத் ” என்ற ஸூத்திரார்த்தம் .... ”

மின்னலுக்குப் பிறகு வருணலோகத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது 89

ஆதிவாஹிகாதிகரணம் (4) 89

“ ஆதிவாஹிகாஸ்தல்லிங்காத் ” என்ற ஸூத்திரார்த்தம் ... ”

அர்ச்சிராதிகள் மார்க்கத்தின் அடையாளங்களாகவோ, போகபூமிகளாகவோ தான் ஆகும் என்ற பூர்வபக்ஷம் 90

அர்ச்சிராதிகள் தேவதாரூபங்களே என்ற ஸித்தாந்தம் ... 91

“ உபயவ்யாமோஹாத் தத்ஸித்தே : ” என்ற ஸூத்திரார்த்தம் ... ”

அர்ச்சிராதிகளை அசேதனமா யங்கீகரித்தால் அவற்றுக்கு நேதிருத்வம் ஸம்பவிக்காதாகையால் உபாஸகனுக்கு ஊர்த்வகமனம் ஸம்பவிக்காதென்பது 92

“ வைத்யுதேனைவதத: தச்ச்ருதே: ” என்ற ஸூத்திரார்த்தம் ... 93

மின்னலை யடைந்தபிறகு அமானவபுருஷனே அழைத்துச் செல்லுகிறான் என்பது ... ”

கார்யாதிகரணம் (5) 94

“ கார்யம் பாதரிரஸ்ய கத்யுபபத்தே : ” என்ற ஸூத்திரார்த்தம் ... ”

அமானவபுருஷன் கார்யப்ரம்ஹத்துக்குமட்டுமே கந்தவ்யத்வம் ஸம்பவிக்குமாதலால் அதையே அடைவிக்கிறான் என்றபாதரியின் மதம். 95

பக்கம்.

"விஶேஷிதத்வாச்ச" என்ற ஸூத்திரார்த்தம் ... 95

"ப்ரம்ஹலோகாந் கமயதி" என்ற விடத்தில் பஹுவசனம், லோக என்ற சப்தம், ஆதாராதேயபாவம் இவைகாணப்படுவதாலும் அமானவபுருஷன் அபரப்ரம்ஹத்தையே அடைவிக்கிறுன் என்பது ... 96

"ஸாமீப்யாத்து தத்வ்யபதேச:" என்ற ஸூத்திரார்த்தம் ... "

பரப்ரம்ஹஸாமீப்ய மிருப்பதால் அபரப்ரம்ஹத்தினிடத்திலும் "ப்ரம்ஹகமயதி" என்ற விடத்தில் ப்ரம்ஹசப்தம் ப்ரயோகிக்கப்படுகிறதென்பது ... "

"கார்யாத்யயே ததத்யக்ஷேண ஸஹாத: பரமபிதானுத்" என்ற ஸூத்திரார்த்தம் ... 97

ப்ரம்ஹலோகமடைந்தவர்கள் கார்யமான ப்ரம்ஹலோகத்துக்கு ப்ரளயம் நேர்ந்தால் அந்த ப்ரம்ஹலோகத்திலேயே உண்டான அபரோக்ஷ ஸாக்ஷாத்காரமுள்ளவர்களாய்க் கொண்டு ஹிரண்யகர்ப்பருடன் கூட பரப்ரம்ஹத்தை அடைகின்றனர் என்பது ... "

"ஸ்ம்ருதேஶ்ச" என்ற ஸூத்திரார்த்தம் ... 98

ஸ்மிருதியிலும் முற்கூறியவிஷயம் கூறப்பட்டிருக்கிறதென்பது ... "

"பரம் ஜைமிநி: முக்யத்வாத்" என்ற ஸூத்திரார்த்தம் ... "

அமானவபுருஷன் பரப்ரம்ஹத்தையே அடைவிக்கிறுன் என்ற ஜைமினி ஆசிரியரின் மதம் ... 99

"தர்சனுச்ச" என்ற ஸூத்திரார்த்தம் ... "

"தயோர்த்வமாயந்நம்ருதத்வமேதி" என்ற சுருதியானது கதியை முன்னிட்டே மோக்ஷலாபத்தைத் தெரிவிக்கிறதென்பது ... "

"நச கார்யேப்ரதிபத்யபிஸந்தி:" என்ற ஸூத்திரார்த்தம் ... 100

"ப்ரஜாபதே: ஸபாம் வேஶ்மப்ரபத்யே" என்றதால் கூறிய ப்ரதிபத்யபிஸந்தியானது பரப்ரம்ஹப்ரகரணமாயிருப்பதுபற்றி கார்யப்ரம்ஹவிஷயத்தில் பொருந்தாதாகையாலும் ப்ரப்ரம்ஹத்தையே அமானவபுருஷன் அடைவிக்கிறுன் என்பது ... "

"கார்யம்பாதரி:" என்றதாதி ஸூத்திரங்கள் ஸித்தாந்தஸூத்திரங்களென்றும், "பரம்ஜைமிநி: முக்யத்வாத்" என்றதாதி ஸூத்திரங்கள் பூர்வபக்ஷ ஸூத்திரங்களென்றும் வியாக்யானம் செய்ய வேண்டும் என்பது ... 101

பரப்ரம்ஹவிஷயமானகதியை எவ்விதத்திலும் ஸாதிக்கமுடியாதென்பது 102

பூப்ரதேச வயோவஸ்தாநியாயத்தால் பரப்ரம்ஹத்துக்கும் அடையப்படுதல் ஸம்பவிக்கலாம் என்ற சங்கையும் ஸமாதானமும் ... "

ஸவிசேஷ நிர்விஶேஷஶ்ருதிகளுள் நிர்விசேஷஶ்ருதிகள் வேறு ப்ரயோஜன மற்றிருப்பதால் ப்ரபலமென்பது ... 103-104

பக்கம்.

ஜீவனுக்கு கதியையங்கீகரித்தால் ஜீவனை ப்ரம்ஹத்தின் அவயவமென்றோ விகாரமென்றோ, அல்லது வேறுபட்டவனென்றோ சொல்லவேண்டும். இவற்றுள் எந்தப்பக்ஷமும் பொருந்தாதென்பதை ஸ்தாபித்தல் 105

நித்யகர்மத்தை அனுஷ்டித்தல், காம்யப்ரதிஷித்த கர்மங்களை விடுத்தல், ப்ராரப்த கர்மங்களை அனுபவத்தால் தேய்த்தல் இவற்றாலேயே மோக்ஷமுண்டாகிவிடுகின்றதென்கிறவர்களின் மதத்தைக் கண்டித்தல் ... 106-109

கதியைப்போதிக்கின்ற சுருதிகள் ஸகுணவித்யாவிஷயங்களென்பதை ஸ்தாபித்தல் ... 110

பராபரப்ரம்ஹங்களின் ஸ்வரூபநிரூபணம் ... 111

அப்ரதீகாலம்பநாதிகரணம் (6) 112

"அப்ரதீகாலம்பநாந் நயதீதிபாதராயண உபயதாதோஷாத்தத்க்ரதுஶ்ச" என்ற ஸூத்திரார்த்தம் ... ”

ப்ரதீகோபாஸகர்களைத் தவிர்த்து மற்ற உபாஸகர்களை மட்டுமே அமாநவ புருஷன் ப்ரம்ஹலோகம் சேர்ப்பிக்கிறான் என்பது ... 113-114

"விஶேஷம் ச தர்சயதி" என்ற ஸூத்திராத்தம் ... 114

ப்ரதீகதாரதம்யத்தை யனுஸரித்துப் பலத்திலும் தாரதம்யம் சொல்லப்படுவதால் ப்ரதீகத்தைத் தியானம் செய்பவர்களுக்கு ப்ரம்ஹலோகப்ராப்தி கிடையாது என்பது ... 115

நான்காவது பாதம்.

ஸம்பத்யாவிர்பாவாதிகரணம் (1) 115

நான்காவது பாதார்த்தத்தை ச்சுருக்கமாய்விளக்கல் ... ”

"ஸம்பத்யாவிர்ப்பாவ: ஸ்வேந சப்தாத்" என்ற ஸூத்திரார்த்தம் ... 116

மோக்ஷ தசையில் புதிதானரூபத்தினால் ஆவிர்ப்பாவத்தை அடைகிறான் என்ற பூர்வபக்ஷம் ... 117

அவித்யாதிகள் விலகிஸ்வந்தரூபத்துடனேயே மோக்ஷதசையில் ப்ரகாசிக்கிறான் என்ற ஸித்தாந்தம் ... 118

"முக்த: ப்ரதிக்ஞானாத்" என்ற ஸூத்திரார்த்தம் ... ”

பந்தங்கள் விலகி சுத்தமான ஆத்மஸ்வரூபத்துடன் இருத்தல் என்ற விசேஷம் மோக்ஷாவஸ்தையில் ஏற்படுகிறது. இதுவே முந்திய அவஸ்தைக்கும் இதற்குமுள்ள வித்தியாஸமாகும் என்பது ... 119

"ஆத்மாப்ரகரணாத்" என்ற ஸூத்திரார்த்தம் ... ”

"பரம்ஜ்யோதிருபஸம்பத்ய" என்ற விடத்திலுள்ள ஜ்யோதி: என்ற பதத்தால் ப்ரகரணத்தையனுஸரித்து ஆத்மாவேசொல்லப்படுகிறது என்பது ... 120

பக்கம்.

அவிபாகாதிகரணம் ... 120

"அவிபாகேந த்ருஷ்டத்வாத்" என்ற ஸூத்திரார்த்தம் ... ”

முக்திதசையில் முக்தன் ப்ரம்ஹத்தைக்காட்டிலும் வேறுபடாதவனாகவே இருக்கிறான் என்பது ... 121

ப்ராம்ஹாதிகரணம் . 122

"ப்ராம்ஹேணஜைமிநிருபந்யாஸாதிப்ய:" என்ற ஸூத்திரார்த்தம் ... ”

முக்திதசையில் ப்ரம்ஹதர்மமான ஸத்யகாமத்வாதிகள் முக்தனுக்கு ஏற்படுகின்றன என்ற ஜைமிநிஆசிரியரின் மதம் ... 123

"சிதிதந்மாத்ரேண........" என்ற ஸூத்திரார்த்தம் ... ”

முக்தன்முக்திதசையில் சைதன்யமாத்திர ரூபத்துடன்மட்டுமே ஆவிர்ப்பாவத்தையடைகிறான், ஸத்யகாமத்வாதிகள் சப்தவிகல்பஜங்களே என்ற ஒளடுலோமி ஆசிரியரின் மதம் ... 124

"ஏவமப்யுபந்யாஸாத்..." என்ற ஸூத்திரார்த்தம் 125

வ்யவஹாரதசையையபேக்ஷித்து ஸத்யகாமத்வாதிகளும், பாரமார்த்திக தசையையபேக்ஷித்து சைதன்யமாத்ரரூபத்வமும் பொருந்தலாம் என்று கூறும் பாதராயணரின் மதம் ... ”

ஸங்கல்பாதிகரணம். 126

"ஸங்கல்பாதேவது தச்ச்ருதே:" என்ற ஸூத்திரார்த்தம் ... ”

அபரவித்யாபலமாகக் கூறப்பட்ட பித்ராதிப்பிராப்தியில் ஸங்கல்பம் தவிரவேறு நிமித்தத்தின் அபேக்ஷையும் உண்டு என்ற பூர்வபக்ஷம் 127

பித்ராதிபிராப்த்தியில் ஸங்கல்பம் தவிரவேறு நிமித்தம் அபேக்ஷிக்கப்படுவதில்லை என்ற ஸித்தாந்தம் ... ”

"அதஏவசாநந்யாதிபதி:" என்ற ஸூத்திரார்த்தம் ... 128

வித்வான்வியர்த்தமாகாத ஸங்கல்பமுடையவனாகவிருப்பதால் தனக்கு வேறு அதிபதியை உடையவனாகவாவதில்லை ... ”

அபாவாதிகரணம் (5) ”

"அபாவம் பாதரிராஹ ஹ்யேவம்" என்ற ஸூத்திரார்த்தம் ... 129

ஐஸ்வர்யத்தையடைந்த வித்வானுக்குசரீரம் முதலியன கிடையாதென்று கூறும் பாதரியின் மதம் .... ”

"பாவம்ஜைமிநி: விகல்பாமனனாத்" என்ற ஸூத்திரார்த்தம் 130

சரீரஸத்பாவத்தைக்கூறும் ஜைமிநி ஆசிரியரின் மதம் .... ”

"த்வாதசாஹவதுபய விதம்பாதராயணோத:" என்ற ஸூத்திரார்த்தம் ”

ஸங்கல்பத்தையனுஸரித்து ஒருஸமயம் சரீரமுள்ளவனாகவும் ஒரு ஸமயம் சரீரமற்றவனாகவும் முக்தனாவான் என்றுகூறும் பாதராயணரின் மதம் 131

"தந்வபாவே ஸந்த்யவதுபபத்தே:" என்ற ஸூத்திரார்த்தம் ... ”

சரீரமில்லாத ஸந்தர்ப்பத்தில் பித்ராதிகாமங்கள் ஸ்வப்பனத்தில்போல ஸம்பவிக்கின்றனவென்பது ... ”

"பாவே ஜாக்ரத்வத்" என்ற ஸூத்திரார்த்தம் ... ”

சரீரமிருந்தால் ஜாக்ரத்தசையில்போல பித்ராதிகாமங்கள் முக்தனுக்கு நேருகின்றனவென்பது ... 132

ப்ரதீபாதிகரணம் (6) பக்கம்.

"ப்ரதீபவதாவேஸ: ததாஹிதர்சயதி" என்ற ஸூத்திரார்த்தம் ... 132

ஐஸ்வர்யமடைந்தவித்வானுல் ஸிருஷ்டிக்கப்படுகின்ற சரீரங்கள் அத்மா வற்றனவாகவே இருக்கின்றன என்ற பூர்வபக்ஷம் ... 133

வித்வானுக்கு தீபம்போல் அநேகசரீரஸம்பந்தம் ஏற்படுவதால் அவனுல் ஸிருஷ்டிக்கப்பட்ட சரீரங்கள்யாவும் ஆத்மாவுடன் கூடினவைகளாகவே இருக்கின்றனவென்ற ஸித்தாந்தம் ... "

"ஸ்வாப்யய ஸம்பத்யோரந்தராபேக்ஷமாவிஷ்க்ருதம்ஹி" என்ற ஸூத்திரார்த்தம் ... 134

ஸம்க்ஞாபாவவசனமானது ஸுஷுப்தி, கைவல்யம் இவற்றை அபேக்ஷித்து ஏற்பட்டதென்பது ... "

ஜகத்வ்யாபாராதிகரணம் (7) ... 135

"ஜகத்வ்யாபாரவர்ஜ்யம் ப்ரகரணுத ஸந்நிஹிதத்வாத்ச" என்ற ஸூத்திரார்த்தம் ... "

ஸகுணப்ரம்ஹோபாஸனத்தினுல் ஈஸ்வரஸாயுஜ்யத்தை யடைந்தவர்களுக்கு ஐஸ்வர்யமானது நிரவக்ரஹமகவே உண்டாகின்றதென்ற பூர்வபக்ஷம் ... 136

ஜகத்ஸ்ருஷ்ட்ருத்வம் தவிர்த்து மற்றவிதமான ஐஸ்வர்யம் மட்டுமே அவர்களுக்குண்டாகின்றதென்ற ஸித்தாந்தம் ... "

"ப்ரத்யக்ஷோபதேசாதிதி சேந்நாதிகாரிகமண்டலஸ்தோக்தே:" என்ற ஸூத்திரார்த்தம் 137

"ஆப்நோதி ஸ்வாராஜ்யம்" என்றதாதி ப்ரத்யக்ஷோபதேசமிருப்பதால் வித்வானுக்கு ஐஸ்வர்யம் நிரவக்ரஹமாகவே உண்டாகின்றதென்ற பூர்வபக்ஷயுக்தியின் கண்டனம் ... 138

"விகாராவர்த்தி சததாஹிஸ்திதிமாஹ" என்ற ஸூத்திரார்த்தம் ... "

ஸகுணேபாஸகர்கள் நிர்க்குணரூபத்தை யடையாமல் ஸகுணரூபத்திலேயே எவ்விதம் நின்றுவிடுகின்றனரோ அவ்விதமே ஸாவக்கிரஹமான ஐஸ்வர்யத்தையே அடைகின்றனர் என்பது ... 139

"தர்சயதஸ்சைவம் ப்ரத்யக்ஷானுமானே" என்ற ஸூத்திரார்த்தம் ... "

பரமேஸ்வரனுக்கு விகாரஸம்பந்தமின்மையை ஸ்ருதிஸ்மிருதிகள் காண்பிக்கின்றன என்பது ... "

"போகமாத்ர ஸாம்யலிங்காத்ச" என்ற ஸூத்திரார்த்தம் ... 140

ஸகுணேபாஸகர்களுக்கு ஈஸ்வரனுடன் போகமாத்ரஸாம்யம் கூறப்பட்டிருப்பதாலும் நிவரவக்கிரஹமான ஐஸ்வர்யம் கிடையாதென்பது. "

"அனுவிருத்தி: சப்தாத் அனுவிருத்தி: சப்தாத்" என்ற ஸூத்திரார்த்தம். "

தேவயானமார்க்கத்தினுல் ப்ரம்ஹலோகம் சென்றவர்கள் மறுபடியும் கீழிறங்குவதில்லே என்பது 141

விஷய அட்டவணே முற்றிற்று.

ओं तत्सद्ब्रह्मणे नमः ॥

ब्रह्मसूत्र शाङ्करभाष्यम् ॥

अथ चतुर्थोऽध्यायः ।

[अस्मिन् फलाध्याये प्रथमपादे जीवन्मुक्तिनिरूपणम्]

१ आवृत्त्यधिकरणम् । सू० १–२

आवृत्तिरसकृदुपदेशात् ॥ १ ॥

ப்ரம்ஹ ஸூத்திர சாங்கரபாஷ்யம்.

நான்காவது பலாத்தியாயம்.

முதற்பாதம். ஆவிருத்யதிகரணம் 1.

यं वेदाः प्रवदन्ति देवनिवहा जाता यतो यद्गताः

ब्रह्माद्याः सनकादियोगिभिरहोरात्रं य आस्वाद्यते ।

यं संश्रित्य शरण्यपादकमलं प्रेम्णाऽञ्जसा संसृते

र्मुक्ता भ्रान्तिमपोह्य, सोऽत्र मधुहा दद्यात्परां मे मतिम् ॥ १ ॥

அவதாரிகை—மூன்றாவது ஸாதனாத்யாயத்தின் முதல் பாதத்தால் வைராக்ய மும், இரண்டாவது பாதத்தால் தத்த்வம் பதார்த்தசோதனமும், மூன்றாவது பாதத் தால் குணோபஸம்ஹாரஞ் சொல்லும்வாயிலாக ஸகுணப்ரம்ஹோபாஸனமும், நான்காவது பாதத்தால் ஆத்மக்ஞானவிஷயத்தில் பஹிரங்க ஸாதனங்களான கர் மங்களும், அந்தரங்க ஸாதனங்களான சமாதிகளும் சொல்லப்பட்டன. இந்நான் காவது பலாத்யாயத்தின் முதற்பாதத்தில் ஜீவன் முக்தியும், இரண்டாவது பாதத் தில் சரீரத்தினின்று முத்க்ராந்தியும், (ஜீவன் வெளிக்கிளம்பும் முறையும்) மூன்று வது பாதத்தில் உத்தராயணமார்க்கப்ராப்த்தியும், நான்காவது பாதத்தில் ப்ரம்ஹ ப்ராப்தி, . ப்ரம்ஹலோகம் இவையும் சொல்லப்படுகின்றன. இந்த நான்காவது அத்தியாயம் முதல்பாதத்தில் 19ஸூத்திரங்கள்கொண்ட 14அதிகரணங்களடங்கி இருக்கின்றன. அவற்றுள் சில அதிகரணங்களில் மூன்றாவது அத்தியாயமுடி விற் சொல்லப்பட்ட ஸாதன விசாரத்தில் எஞ்ஜியுள்ள சிலவிஷயம் விசாரிக்கப்படு கிறது. இரண்டு ஸூத்திரங்கள் கொண்ட முதலாவது ஆவிருத்தி அதிகரணத்தில் ப்ரவணாதி ஸாதனவிஷயத்தை அனுவாதம் செய்து கொண்டு அவ்விஷயமாக வரும் ஸந்தேஹம் நிவிருத்தி செய்யப்படுகிறது. அவற்றுள் முதல் ஸூத்திரம் பின்வருமாறு—

(ஸூ). ஆவிருத்தி: அஸகிருதுபதேசாத் (1)

श्रवणाद्याः सकृत्कार्या आवर्त्या वा सकृद्यतः । शास्त्रार्थस्तावता सिद्ध्येत्प्रयाजादौ सकृत्कृतेः ॥ १ ॥
आवर्त्या दर्शनान्तास्ते तण्डुलान्तावघातवत् । दृष्टेऽत्र संभवत्यर्थे नादृष्टं कल्प्यते बुधैः ॥ २ ॥

तृतीयेऽध्याये परापरासु विद्यासु साधनाश्रयो विचारः प्रायेणात्यगात् । अथेह चतुर्थे फलाश्रय आगमिष्यति । प्रसङ्गागतं चान्यदपि किञ्चिच्चिन्तयिष्यते । प्रथमं तावत्कतिभिश्चिदधिकरणैः साधनाश्रयविचारशेषमेवानुसरामः । 'आत्मा वा अरे द्रष्टव्यः श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यः' (बृ० ४ । ५ । ६), 'तमेव धीरो विज्ञाय प्रज्ञां कुर्वीत' (बृ० ४ । २१), 'सोऽन्वेष्टव्यः स विजिज्ञासितव्यः' (छा० ८ । ७ । १), इति चैवमादिश्रवणेषु संशयः—किं सकृत्प्रत्ययः कर्तव्य आहोस्विदावृत्त्येति । किं तावत्प्राप्तं सकृत्प्रत्ययः

(ப—ரை) **आवृत्तिः**(ஆவிருத்திः)=ப்ரத்யயாவிருத்தியானது [**कर्त्तव्या** (கார்த்தவ்யா)=செய்யத்தகுந்தது.] ஏன்? **असकृदुपदेशात्** (ஆஸகிருதுபதேசாத்)=அடிக்கடி உபதேசம் காணப்படுவதே அதன் காரணமாகும். (1) (எ—று)

வையாஸிக ந்யாயமாலை.

(க—ரை) ஶ்ரவணம் முதலியன ஒரேதடவை செய்யவேண்டுவனவா? அல்லது ஆவிருத்தி (அனேகந்தடவை) செய்யவேண்டுவனவா? என்பது ஸந்தேஹம். ஒரேதடவைதான் செய்யவேண்டும். ஏன்? அவ்வளவினாலேயே சாஸ்திரார்த்தம் ஸித்தித்து விடக்கூடியதாயிருப்பதாலென்க. ப்ரயாஜாதிகள் ஒரேதடவைதான் செய்யப்படுவதைக் காண்கிறோம் என்பது பூர்வபக்ஷம். அரிசி வெளியாகும் வரை நெல்லைக்குத்துவதுபோல ஶ்ரவணாதிகள் அபரோக்ஷஸாக்ஷாத்காரம் வரும் வரை அடிக்கடி செய்யவேண்டுவனவே யாகும், திருஷ்டமான பலன் ஸம்பவிக்கும்பொழுது இவ்விஷயத்தில் அதிருஷ்டமான பலன் வித்வான்களால் கல்பிக்கப்படுவதில்லை என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—மூன்றாவது அத்தியாயத்தில் பரவித்யை, அபரவித்யை இவற்றின் ஸாதனத்தைப்பற்றிய விசாரமானது பெரும்பாலும் செய்யப்பட்டது. பிறகு இந்த நான்காவது அத்தியாயத்தில் பலனைப்பற்றிய விசாரமானது செய்யப்படப் போகிறது. அதையொட்டிவரும் வேறுவிஷயமும் விசாரிக்கப்படப் போகிறது. முதலில் சில அதிகரணங்களால் ஸாதனத்தைப்பற்றிய விசாரத்தின் சேஷத்தையே தொடங்குகிறோம். "ஹேமைத்ரேயி! ஆத்மாவானது ஸாக்ஷாத்கரிக்கத்தகுந்தது. (அதற்கு வேண்டி அது) ஶ்ரவணம் பண்ணத்தகுந்தது. மனனம் பண்ணத்தகுந்தது. நிதித்யாஸனஞ் செய்யத்தகுந்தது" என்றும், "அதையே (ஆத்மாவையே) தீரனுயுள்ளவன்=புத்தியைத் தன்வசமாக்கினவன், நன்கு அறிந்து ப்ரக்ஞையைத் தேடிக்கொள்ளுவானாக" என்றும் இது முதலான சுருதிவாக்கியங்களில் ஸம்சயமுதபமாகிறது. அதாவது: ஶ்ரவணாதிகளை ஒரேதடவை செய்யவேண்டுமா? அல்லது அனேகந்தடவை செய்யவேண்டுமா? என்றும். முதலில் கிடைப்பது யாதென்னில்? ப்ரயாஜாதிகள் போல ஒரேதடவை தான் செய்யவேண்டும் என்றும். அவ்வளவினாலேயே சாஸ்திரம் பயனுள்ளதாக வாகிவிடுவதாலென்க. சாஸ்திரத்

स्यात्प्रयाजादिवत्। तावता शास्त्रस्य कृतार्थत्वात्। अश्रूयमाणायां ह्यावृत्तौ क्रियमाणाया-मशास्त्रार्थः कृतो भवेत्। नन्वसकृदुपदेशा उदाहृताः श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्य इत्येवमादयः। एवमपि यावच्छब्दमावर्तयेत्सकृच्छ्रवणं सकृन्मननं सकृन्निदिध्यासनं चेति नातिरिक्तम्। सकृदुपदेशेषु तु वेदोपासीतेत्येवमादिष्वनावृत्तिरिति। एवं प्राप्ते ब्रूमः— प्रत्ययावृत्तिः कर्तव्या। कुतः— असकृदुपदेशात् 'श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यः' इत्येवञ्जातीयको ह्यसकृदुपदेशः प्रत्ययावृत्तिं सूचयति। ननूक्तं यावच्छब्दमेवावर्तयेन्नाधि-कमिति। न। दर्शनपर्यवसितत्वादेषाम्। दर्शनपर्यवसानानि हि श्रवणादीन्यावर्त्यमानानि-दृष्टार्थानि भवन्ति। यथावघातादीनि तण्डुलादिनिष्पत्तिपर्यवसानानि तद्वत्। अपि चोपा-सनं निदिध्यासनं चेत्यन्तर्णीतावृत्तिगुणैव क्रियाभिधीयते। तथाहि—लोके गुरुमुपास्ते

திற் சொல்லப்படாத ஆவிருத்தியானது செய்யப்படுமாயின் அசாஸ்திரீயமான அர்த்தமானது செய்யப்பட்டதாக வாகிவிடும்.

சங்கை—"ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" என்ற இதுமுதலான பலதடவைசெய்யப்பட்ட உபதேசங்கள் உதாஹரிக்கப்பட்டன வன்றோ எனின்?

உத்தரம்—இவ்விதமிருப்பினும் ஒருதடவை ஶ்ரவணம் ஒருதடவை மனனம் ஒருதடவை நிதித்யாஸனம் என ஶப்தம் எவ்வளவிருக்கிறதோ அவ்வளவுதான் ஆவிருத்தி செய்யவேண்டுமேயொழிய இதற்கு மேல் அதிகமாக ஆவிருத்தி செய்தல் கூடாது. "வேத" "உபாஸீத" என இதுமுதலான ஒரேதடவை உபதேசஞ் செய்துள்ள விடங்களில் ஆவிருத்தி கிடையாது என்க. என இவ்விதம் (பூர்வபக்ஷம்) ப்ராப்த்தமாகவே (ஸித்தாந்தத்தைச்) சொல்லுகிறோம். ப்ரத்யயாவிருத்தியானது செய்யத்தக்கது. ஏன்? பலதடவை உபதேசங்காணப்படுவதாலென்க. "ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" என்ற இம்மாதிரியான பலதடவை செய்துள்ள உபதேசமே ப்ரத்யயாவிருத்தியை ஸூசிப்பிக்கிறது.

சங்கை—சப்தத்தில் எவ்வளவுதடவை சொல்லப்பட்டிருக்கிறதோ அவ்வளவேதான் ஆவிருத்தி செய்யவேண்டுமே யொழிய அதற்குமேல் ஆவிருத்தி செய்தல் கூடாது எனச் சொல்லப்பட்டதன்றோ எனின்?

உத்தரம்—அவ்விதமில்லை. இவை அபரோக்ஷஸாக்ஷாத்காரத்தை முடிவாகவுடையனவாக இருப்பதே அதன் காரணமாகும். ஶ்ரவணாதிகள் அபரோக்ஷஸாக்ஷாத்காரம் வரும்வரை பலதடவை செய்யப்படுவனவாய்க் கொண்டல்லவோ திருஷ்டமான பயனுள்ளனவாக வாகின்றன. அரிசி வெளியாவதை முடிவாகக் கொண்ட நெல்குத்துதல் முதலியன எவ்விதமோ அவ்விதமே இங்கும் காண்க. மேலும் அந்தர்நீதமான (உள்ளடங்கினதான) ஆவிருத்திரூபமான குணத்தையுடைய க்ரியையே உபாஸனமென்றும், நிதித்யாஸனமென்றும் சொல்லப்படும். அதாவது:—உலகில் குருவை உபாஸிக்கிறான் அரசனை உபாஸிக்கிறான் என்றவிடத்தில் எவன் தாத்பரியத்துடன் இடையறாது, குருமுதலியோரை உபாஸிக்

राजानमुपास्त इति च यस्तात्पर्येण गुर्वादीननुवर्तते स एवमुच्यते। तथा ध्यायति प्रोषितनाथा पतिमिति या निरन्तरस्मरणा पतिं प्रति सोत्कण्ठा सैवमभिधीयते। विद्युपास्त्योश्च वेदान्तेष्वव्यतिरेकेण प्रयोगो दृश्यते। क्वचिद्विदिनोपक्रम्योपासिनोपसंहरति यथा—'यस्तद्वेद यत्स वेद स मयैतदुक्तः' (छा० ४। १। ४) इत्यत्र 'अनु म एतां भगवो देवतां शाधि यां देवतामुपास्से' (छा० ४। २। २) इति। क्वचिच्चोपासिनोपक्रम्य विदिनोपसंहरति यथा—'मनो ब्रह्मेत्युपासीत' (छा० ३। १८। १) इत्यत्र 'भाति च तपति च कीर्त्या यशसा ब्रह्मवर्चसेन य एवं वेद' (छा० ३। १८। ३) इति। तस्मात्सकृदुपदेशेष्वप्यावृत्तिसिद्धिः। असकृदुपदेशस्त्वावृत्तेः सूचकः ॥ १ ॥

लिङ्गाच्च ॥ २ ॥

लिङ्गमपि प्रत्ययावृत्तिं प्रत्याययति। तथा ह्युद्गीथविज्ञानं प्रस्तुत्य 'आदित्य उद्गीथः' (छा० १। ५। १) इत्येतदेकपुत्रतादोषेणापोद्य 'रश्मींस्त्वं पर्यावर्तयात्' (छा०

கின்றானோ அவனே இவ்விதம் சொல்லப்படுகிறான். அவ்விதமே 'வெளியிற் சென்ற கணவனையுடைய ஸ்திரீயானவள் கணவனைத்தியானிக்கிறாள்' என்றவிடத்தில் இடையறாதநினைவுள்ளவளும், பர்த்தாவினிடத்தில் மிக்க ஆவலுள்ளவளும் எவளோ அவளே இவ்விதம் சொல்லப்படுகிறாள். வேதாந்தங்களில் "விதி"=வேதனம், "உபாஸ்தி"=உபாஸனம் இரண்டுக்கும் வேற்றுமையில்லாமலே ப்ரயோகமானது காணப்படுகிறது. சிலவிடத்தில் "அந்தரைக்வர் எதை அறிகிறாரோ, அந்தப்ராண தத்துவத்தை ரைக்வரை விட வேறான எவனொருவன் அறிவானோ அவன் இவ்விதம் (ரைக்வரைப்போல எல்லாநற்கர்மங்களும், அதன் பயன்களுமுடையவனென) என்னால் சொல்லப்பட்டான்" என்றவிடத்தில் "ஓ பெரியீர்! உபாஸிக்கப்பட்ட தேவதை எதுவோ அதை எனக்கு உபதேசிப்பீராக" என ஜானஸ்ருதிசொன்னான் எனக் காணப்படுகிறது. சிலவிடத்தில் (உபாஸியினால்) உபாஸ்தியினால் தொடங்கி விதியினால் (வேத என்றதினால்) உபஸம்ஹாரம் காணப்படுகிறது. அதாவது:—"மனஸ்ஸை ப்ரம்ஹமாக உபாஸிப்பாயாக" என்ற விடத்தில் "எவனொருவன் இவ்விதம் வேதனம் செய்வானோ அவன் கீர்த்தியுடனும், யஶஸ்ஸுடனும், ப்ரம்ஹ சரியத்துடனும் ப்ரகாசிக்கிறான். விளங்கவும் செய்கிறான்" என்றும். ஆகவே ஒரேதடவை உபதேசம் காணுமிடங்களிலும் கூட ஆவிருத்தியானது ஏற்படத்தான் செய்கிறது. பலதடவை செய்துள்ள உபதேசமோ ஆவிருத்திக்கு ஸூசகமாகவே தானாகிறது. (1) (எ-று)

(ஸூ) லிங்காத்ச (2)

(ப-ரை) **लिङ्गाच्च** (லிங்காத்ச)=சுருதியில் ப்ரத்யயாவிருத்தியைத் தெரிவிக்கும் அறிகுறி யிருப்பதும் மற்றொரு காரணமாகும். (2) (எ-று)

பாஷ்யம்.—(சுருதியிலுள்ள) லிங்கமும்=அறிகுறியும் ப்ரத்யயத்தினுடைய ஆவிருத்தியைத் திருடப்படுத்திக் காட்டுகிறது. அதாவது:—உத்கீத விக்ஞானத்

१ । ५ । २) इति रश्मिबहुत्वविज्ञानं बहुपुत्रतायै विदधत्सिद्धवत्प्रत्ययावृत्तिं दर्शयति। तस्मात्तत्सामान्यात्सर्वप्रत्ययेष्वावृत्तिसिद्धिः। अत्राह—भवतु नाम साध्यफलेषु प्रत्ययेष्वावृत्तिः। तेष्वावृत्तिसाध्यस्यातिशयस्य संभवात्। यस्तु परब्रह्मविषयः प्रत्ययो नित्यशुद्धबुद्धमुक्तस्वभावमेवात्मभूतं परं ब्रह्म समर्पयति तत्र किमर्थावृत्तिरिति। सकृच्छ्रुतौ च ब्रह्मात्मत्वप्रतीत्यनुपपत्तेरावृत्त्यभ्युपगम इति चेत्। न। आवृत्तावपि तदनुपपत्तेः। यदि हि 'तत्त्वमसि' (छा० ६ । ८ । ७) इत्येवञ्जातीयकं वाक्यं सकृच्छ्रूयमाणं ब्रह्मात्मत्वप्रतीतिं नोत्पादयेत्ततस्तदेवावर्त्यमानमुत्पादयिष्यतीति का प्रत्याशा स्यात्। अथोच्येत न केवलं वाक्यं कश्चिदर्थं साक्षात्कर्तुं शक्नोत्यतो युक्त्यपेक्षं वाक्यमनुभावयिष्यति ब्रह्मात्मत्वमिति। तथाप्यावृत्त्यानर्थक्यमेव। साऽपि हि युक्तिः सकृत्प्रवृत्तैव स्वमर्थमनुभावयिष्यति। अथापि स्याद्युक्त्या वाक्येन च सामान्यविषयमेव विज्ञानं क्रियते न विशेषविषयम्।

தைச் சொல்லத் தொடங்கி "ஆதித்யன் உத்கீதமாகும்" என வுபதேசித்து அவ் வுபாஸனமானது ஒரே புத்திரனைத் தான் தரும் என அதில் தோஷம் கூறி அதை விலக்கி "நீர் கிரணங்களை ஆவிருத்தியுடன் தியானஞ் செய்வீராக" என்பதாய் வெகு கிரணங்களின் விக்ஞானமானது வெகுபுத்திர ப்ராப்த்தியைத் தருகிறது என விதிக்கும்வேதமானது ப்ரத்யயாவிருத்தியை நிலைத்ததாகவே காண்பிக்கிறது. ஆகவே அத்துடன் ஒத்திருப்பதால் எல்லாப்ரத்யயங்களிலும் ஆவிருத்தியானது ஸித்தமாகவே ஏற்படுகிறது.

இவ்விடத்தில் பூர்வபக்ஷி சொல்லுகிறார்.—ஸாத்யமான பலனை யுடைய ப்ரத்யயங்களில்=உபாஸனங்களில் ஆவிருத்தியானது இருக்கட்டும். பரப்ரம்ஹ விஷயமான எந்தப்ரத்யயமானது நித்ய சுத்த புத்த முக்தஸ்வபாவமும், ஆத்மாவாகவுமேயுள்ளதுமான பரப்ரம்ஹத்தையே விஷயமாகக்கொண்டதோ அதில் ஆவிருத்தியானது எதற்கு? என்றும். ஒருதடவை கேட்பதால் ப்ரம்ஹாத்மத்வ ப்ரதீதி யேற்படமாட்டாததலால் ஆவிருத்தி ஒப்பப்படுகிறது என்றாலோ, அது பொருந்தாது ஆவிருத்தி செய்தபோதிலுங் கூட அது ஏற்படமாட்டாதுதான். "தத்த்வமஸி" என்ற இம்மாதிரியான வாக்கியமானது ஒரேதடவை ஶ்ரவணஞ் செய்யப்படுவதாய்க் கொண்டு ப்ரம்ஹாத்மத்வக்ஞானத்தை உண்டுபண்ணாவிடில் அப்பொழுது அந்த வாக்கியமே ஆவிருத்தி செய்யப்படுவதாய்க் கொண்டு உண்டுபண்ணும் என எவ்விதம் நம்பிக்கை ஏற்படும்.

சங்கை—கேவலம் (தனித்த) வாக்கியம்மட்டுமே ஒரு அர்த்தத்தை ஸாக்ஷாத்கரிக்கச் செய்யச் சக்தியுடையதாகவாகமாட்டாது. ஆகவே யுக்தியை யபேக்ஷித்த வாக்கியமானது ப்ரம்ஹாத்மத்வத்தை அனுபவிக்கச் செய்யக்கூடும் எனின்?

உத்தரம்—அவ்விதமாயினுங் கூட ஆவிருத்தியானது பயனற்றதாகவே தானாகிறது. அந்த யுக்தியும் ஒரேதடவை பிரவிருத்தித்ததாய்க்கொண்டு தனது அர்த்தத்தை அனுபவிக்கச் செய்துவிடக்கூடும்.

சங்கை—யுக்தியினாலும் வாக்கியத்தினாலும் பொதுப்படையான பொருளை விஷயமாகக்கொண்ட ஞானம்மட்டும் உண்டுபண்ணப்படுமேயொழிய விசேஷ

यथास्ति मे हृदये शूलमित्यतो वाक्याद्गात्रकम्पादिलिङ्गाच्च शूलसद्भावसामान्यमेव परः प्रतिपद्यते न विशेषमनुभवति यथा स एव शूली। विशेषानुभवश्चाविद्याया निवर्तकस्तस्तदर्थावृत्तिरिति चेत्। न। असकृदपि तावन्मात्रे क्रियमाणे विशेषविज्ञानोत्पत्त्यसंभवात्। नहि सकृत्प्रयुक्ताभ्यां शास्त्रयुक्तिभ्यामनवगतो विशेषः शतकृत्वोऽपि प्रयुज्यमानाभ्यामवगन्तुं शक्यते। तस्माद्यदि शास्त्रयुक्तिभ्यां विशेषः प्रतिपाद्यते यदि वा सामान्यमेवोभयथापि सकृत्प्रवृत्ते एव ते स्वकार्यं कुरुत इत्यावृत्त्यनुपयोगः। नच सकृत्प्रयुक्ते शास्त्रयुक्ती कस्यचिदप्यनुभवं नोत्पादयत इति शक्यते नियन्तुं विचित्रप्रज्ञत्वात्प्रतिपत्तॄणाम्। अपि चानेकांशोपेते लौकिके पदार्थे सामान्यविशेषवत्येकेनावधानेनैकमंशमवधारयत्यपरेणापरमिति स्यादप्यभ्यासोपयोगो यथा दीर्घप्रपाठकग्रहणादिषु। ननु निर्विशेषे ब्रह्मणि सामान्यविशेषरहिते चैतन्यमात्रात्मके प्रमोत्पत्तावभ्यासापेक्षा युक्तेति॥

மானபொருளை விஷயமாகக்கொண்ட க்ஞானம் உண்டுபண்ணப்பட மாட்டாது. "எனது மார்பில்வலி" என்ற இந்தவாக்கியத்தினின்றும், சரீரத்தின் ஆட்டம் முதலிய லிங்கத்தைக்கொண்டும் வலியிருப்பதாகமட்டும் பொதுப்படையாக பிறன் அறிகின்றானேயொழிய அதேவலியுள்ளவன் எவ்விதம் தெளிவாக அனுபவிக்கின்றானோ அவ்விதம் பிறன் அறிவதில்லை என்பது எவ்விதமோ அவ்விதமே இங்குமாகும். விசேஷமான அனுபவமும் அவித்யையை நிவிருத்தி செய்வதாகவாகும். அதற்குவேண்டி ஆவிருத்தி அவஶ்யமாகிறது என்கிறோம் எனின்?

உத்தரம்—அவ்விதமில்லை. அவ்வளவுமட்டும் அனேகந்தடவை செய்யப்படினுங்கூட விசேஷவிக்ஞானம் ஸம்பவிப்பதில்லை. ஒருதடவை உபயோகிக்கப்பட்ட சாஸ்திரயுக்திகளால் அறியப்படாத விசேஷமானது நூறுதடவை உபயோகிக்கப்படினும் அவைகளால் அறியப்படமாட்டாதன்றோ. ஆகவே சாஸ்திரம் யுக்தி இவைகளால் விசேஷமானது ப்ரதிபாதிக்கப்படினும், அல்லது ஸாமான்யமானது ப்ரதிபாதிக்கப்படினும் இரண்டுவிதத்திலும் ஒரேதடவை பிரயோகிக்கப்பட்ட அந்தச்சாஸ்திரம் யுக்தி இவைகள் தனது காரியத்தைச் செய்யும் என்பதுபற்றி ஆவிருத்தியானது உபயோகமற்றதாகவாகிறது. சாஸ்திரம் யுக்தி இவைகள் ஒரேதடவை உபயோகிக்கப்படின் ஒருவனுக்கும் அனுபவத்தை உண்டுபண்ணமாட்டா எனக் கட்டுபடுத்தமுடியாது. அறிந்துகொள்ளுபவர் விசித்ரப்ரக்ஞையுள்ளவராகக் காணப்படுவதாலென்க.

மேலும் பல அம்சங்களுடன் கூடினதும் ஸாமான்ய விசேஷமுள்ளதுமான லௌகிக பதார்த்தத்தில் ஒரு அவதானத்தால் (புத்தியைச்செலுத்தலால்) ஒரு அம்சத்தையும் மற்றொரு அவதானத்தால் மற்றொரு அம்சத்தையும் நிஶ்சயிக்கிறான் என்பது ஸம்பவிக்கலாம். ஆனதுபற்றி அங்கு அப்யாஸம் (ஆவிருத்தி) உபயோகப்படும். நீண்டப்ரபாடகத்தை (இது வேதத்தின் ஒரு பாகத்தினது பெயராகும்) க்கிரஹணம் செய்தல் முதலியவற்றில் இவ்விதமே காணப்படுகிறது. ஸாமான்ய விசேஷமற்றதும் நிர்விசேஷமும் சைதன்யமாத்ரஸ்வரூப முள்ளதுமான

अत्रोच्यते—भवेदावृत्त्यानर्थक्यं तं प्रति यस्तत्त्वमसीति सकृदुक्तमेव ब्रह्मात्मत्वमनुभवितुं शक्नुयात्। यस्तु न शक्नोति तं प्रत्युपयुज्यत एवावृत्तिः। तथाहि छान्दोग्ये 'तत्त्वमसि श्वेतकेतो' (छा० ६। ८। ७) इत्युपदिश्य 'भूय एव मा भगवान्विज्ञापयतु' (छा० ६। ८। ७) इति पुनः पुनः परिचोद्यमानस्तत्तदाशङ्काकारणं निराकृत्य तत्त्वमसीत्येवासकृदुपदिशति। तथाच 'श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यः' (बृ० ४। ५। ६) इत्यादि दर्शितम्। ननूक्तं सकृच्छ्रुतं चेत्तत्त्वमसिवाक्यं स्वमर्थमनुभावयितुं न शक्नोति तत आवर्त्यमानमपि नैव शक्ष्यतीति। नैष दोषः। नहि दृष्टेऽनुपपन्नं नाम। दृश्यन्ते हि सकृच्छ्रुताद्वाक्यान्मन्दप्रतीतं वाक्यार्थमावर्तयन्तस्तत्तदाभासव्युदासेन सम्यक्प्रतिपद्यमानाः। अपिच तत्त्वमसीत्येतद्वाक्यं त्वंपदार्थस्य तत्पदार्थभावमाचष्टे। तत्पदेन च प्रकृतं सद्ब्रह्मेक्षितृ जगतो जन्मादिकारणमभिधीयते 'सत्यं ज्ञानमनन्तं ब्रह्म' (तै० २। १। १), 'वि-

---

ப்ரஹ்மவிஷயத்தில் யதார்த்தக்ஞானத்தையுண்டுபண்ணும் விஷயத்தில் ஆவிருத்திக்கு அபேக்ஷை சொல்லுவது யுக்தமாகவாகாது. எனின்.

உத்தரம்—* இவ்விஷயத்தில் பதில் சொல்லப்படுகிறது. எவன் தத்த்வமஸி என்றதால் ஒரேதடவை சொல்லப்பட்டதும் ப்ரஹ்மாத்மத்வத்தை அநுபவிக்கச் சக்தியுள்ளவனோ அவனுக்கு ஆவிருத்திபயனற்றதுதான். எவன் சக்தியற்றவனோ அவனுக்கு ஆவிருத்தியானது உபயோகப்படவே செய்கிறது. அதாவது:—சாந்தோக்கியத்தில் "ஹேஶ்வேதகேதோ! நீ அதாக இருக்கிறாய்" என உபதேசித்து "பெரியார் திரும்பவுமே எனக்கு உபதேசிக்கட்டும்" எனத்திரும்பவும் திரும்பவும் கேட்கப்படும் ஆசிரியர் அவனுடைய ஆசங்கைக்குரிய காரணத்தை நிராகரணஞ்செய்து "நீஅதாகஇருக்கிறாய்" என்றே அனேகந்தடவை உபதேசிக்கிறார். அவ்விதமே "ஶ்ரோதவ்ய: மந்தவ்ய: நிதித்யாஸிதவ்ய:" என்றதாதியும் காண்பிக்கப்பட்டது.

சங்கை—ஒரேதடவை கேட்கப்பட்ட தத்த்வமஸ்யாதிவாக்கியமானது தனது அர்த்தத்தை நிர்த்தாரணஞ்செய்யாவிடில் அப்பொழுது ஆவிருத்தி செய்யப்படினுங்கூட அதுநிர்த்தாரணஞ் செய்யச் சக்தியுள்ளதாக வாகாதுஎன முன்னர் சொல்லப்பட்டதன்றோ எனின்?

உத்தரம்—இது தோஷமாகாது. கண்கூடாகக் காணப்படும் விஷயத்தில் பொருந்தாதது ஒன்றுமில்லையன்றோ? ஒரேதடவை கேட்கப்பட்ட வாக்கியத்தினின்றும் அற்பமறியப்பட்ட வாக்யார்த்தத்தை ஆவிருத்தி செய்கின்றவர்களாய்க் கொண்டு அந்தந்த ஸந்தேஹத்தைவிலக்கும் வாயிலாக நன்கு அதையறிந்துகொள்ளுகின்றவர் உலகில் காணப்படுகின்றனர் அன்றோ? மேலும் "தத்த்வமஸி" என்ற இந்தவாக்கியமானது த்வம் பதார்த்தத்துக்கு தத்பதார்த்தத்தன்மையை உபதேசிக்கிறது. தத் என்ற பதத்தினாலோ தொடர்ந்துவருவதும் ஈக்ஷிதாவும், ஜகத்தின்

---

* இதுவரைசொன்ன பூர்வபக்ஷத்துக்கு இதுமுதல் ஸித்தாந்தத்தில் பதில் சொல்லப்படுகிறது.

ज्ञानमानन्दं ब्रह्म' (बृ० ३।९।२८), 'अदृष्टं द्रष्टृ' (बृ० ३।८।११), 'अविज्ञातं विज्ञातृ' (बृ० ३।८।११), 'अजमजरममरम्' 'अस्थूलमनण्वह्रस्वमदीर्घम्' (बृ० ३।८।८) इत्यादिशास्त्रप्रसिद्धम्। तत्राजादिशब्दैर्जन्मादयो भावविकारा निवर्तिताः। अस्थूलादिशब्दैश्च स्थौल्यादयो द्रव्यधर्माः। विज्ञानादिशब्दैश्च चैतन्यप्रकाशात्मकत्वमुक्तम्। एष व्यावृत्तसंसारधर्मकोऽनुभवात्मको ब्रह्मसंज्ञकस्तत्पदार्थो वेदान्ताभियुक्तानां प्रसिद्धः। तथा त्वंपदार्थोऽपि प्रत्यगात्मा श्रोता देहादारभ्य प्रत्यगात्मतया संभाव्यमानश्चैतन्यपर्यन्तत्वेनावधारितः। तत्र येषामेतौ पदार्थावज्ञानसंशयविपर्ययप्रतिबद्धौ तेषां तत्त्वमसीत्येतद्वाक्यं स्वार्थे प्रमां नोत्पादयितुं शक्नोति पदार्थज्ञानपूर्वकत्वाद्वाक्यार्थस्येत्यतस्तान्प्रत्येष्टव्यः पदार्थविवेकप्रयोजनः शास्त्रयुक्त्यभ्यासः॥

ஜன்மாதிகளுக்குக் காரணமுமான ஸத்ரூபப்ரம்ஹமானது சொல்லப்படுகிறது. அது "‡ ஸத்யம் க்ஞானம் அனந்தம் ப்ரம்ஹ" "என்றும், விச்ஞானம் ஆனந்தம் ப்ரம்ஹ" "அதிருஷ்டம் த்ரஷ்ட்ரு" என்றும், "அவிக்ஞாதம் விக்ஞாத்ரு" என்றும், அஜம் அஜரம் அமரம்" என்றும், "அஸ்தூலம் அநணு அஹ்ரஸ்வம் அதீர்க்கம்" என்றுமாதிய சாஸ்திரப்ரஸித்தமாகவுமிருக்கிறது. அவற்றுள் அஜ என்றதாதிசப்தங்களால் (1) ஜன்மா முதலிய பொருளுக்குரிய விகாரங்கள் விலக்கப்பட்டன. அஸ்தூலம் முதலியசப்தங்களால் ஸ்தௌல்யம்=பெருத்திருத்தல், முதலிய திரவியதர்மங்கங்களும், விலக்கப்பட்டன. விக்ஞானம் முதலிய சப்தங்களினல் சைதன்ய ப்ரகாசரூபமாக இருத்தலும் சொல்லப்பட்டது. ஸர்வஸம்ஸாரதர்மங்களுமற்றதும், அனுபவரூபமானதும் ப்ரம்ஹம் எனப் பெயருள்ளதுமான தத்பதார்த்தமானது வேதாந்தப்பயிர்ச்சியுள்ள பெரியார்க்குள் ப்ரஸித்தமாக இருக்கிறது. அதுபோலவே த்வம் பதார்த்தமும் ப்ரத்யகாத்மாவாகவும், ஸ்ரோதாவாகவும், தேஹந்தொடங்கி ப்ரத்யகாத்மாவாக இருப்பதாகநன்கு அறியப்படுவதாகவும்,முடிவில் சைதன்யவடிவமாக விருப்பதாகவும் நிர்த்தாரணஞ் செய்யப்பட்டிருக்கிறது. அவற்றுள் எவர்க்கு இந்த தத்பதார்த்தத்வம் பதார்த்தங்கள் அக்ஞான ஸம்சயவிபர்யயங்களால் உள்ளபடி அறியப்படாததாகவிருக்கின்றனவோ அவர்க்கு தத்த்வமஸி என்ற இந்தவாக்கியமானது தனது அர்த்தவிஷயமான உண்மையான க்ஞானத்தை உண்டுபண்ணச் சக்தியுள்ளதாகவாவதில்லை. பதார்த்தக்ஞானத்தை முன்னிட்டு வாக்கியார்த்தக்ஞான மேற்படுவதுபற்றியே என்க. ஆகவே அவர்களைக் குறித்து தத்த்வம் பதார்த்தவிவேகத்தை (பகுத்தறிவை) பிரயோஜனமாக உடையசாஸ்திரம் யுக்தி இவற்றின் ஆவிருத்தியானது எதிர்பார்க்க வேண்டுவதாக வாகிறது. அறியவேண்டுவதான ஆத்மாவானது எவ்வித அம்ச

---

‡ "ஸத்யம்"......என்றதுமுதல் "அதீர்க்கம்" என்றதுவரையுள்ள சுருதியின் பொருள் பலவிடங்களில் எழுதப்பட்டிருப்பதால் இங்கு எழுதப்படவில்லை.

(1) முதலில் மறைந்திருத்தல், வெளிவருதல், ஓங்கிவளர்தல், வளர்தலின் முடிவையடைதல். தேயவாரம்பித்தல், முற்றிலும் தேய்ந்துவிடல் என்பன பொருள்களுக்குரிய 6 விகாரங்களாகும்.

यद्यपि च प्रतिपत्तव्य आत्मा निरंशस्तथाप्यध्यारोपितं तस्मिन्बह्वंशत्वं देहेन्द्रियमनोबुद्धिविषयवेदनादिलक्षणं तत्रैकेनावधानेनैकमंशमपोहत्यापरेणापरमिति युज्यते तत्र क्रमवती प्रतिपत्तिः । तत्तु पूर्वरूपमेवात्मप्रतिपत्तेः। येषां पुनर्निपुणमतीनां नाज्ञानसंशयविपर्ययलक्षणः पदार्थविषयः प्रतिबन्धोऽस्ति ते शक्नुवन्ति सकृदुक्तमेव तत्त्वमसिवाक्यार्थमनुभवितुमिति तान्प्रत्यावृत्त्यानर्थक्यमिष्टमेव। सकृदुत्पन्नैव ह्यात्मप्रतिपत्तिरविद्यां निवर्तयतीति नात्र कश्चिदपि क्रमोऽभ्युपगम्यते। सत्यमेवं युज्येत यदि कस्यचिदेवं प्रतिपत्तिर्भवेत्। बलवती ह्यात्मनो दुःखित्वादिप्रतिपत्तिः । अतो न दुःखित्वाद्यभावं कश्चित्प्रतिपद्यत इति चेत्। न। देहाद्यभिमानवद्दुःखित्वाद्यभिमानस्य मिथ्याभिमानत्वोपपत्तेः। प्रत्यक्षं हि देहे छिद्यमाने दह्यमाने वाऽहं छिद्ये दह्य इति च मिथ्याभिमानो दृष्टः । तथा बाह्यतरेष्वपि पुत्रमित्रादिषु सन्तप्यमानेष्वहमेव सन्तप्य इत्यध्यारोपो दृष्टः। तथा दुःखित्वाभिद्य-

---

மும் (அவயவமும்) அற்றது தானுனாயினும் அந்த ஆத்மாவினிடத்தில் தேஹம் இந்திரியம் மனஸ் புத்தி இவைமூலம் விஷயங்களை அனுபவித்தல் ரூபமான வெகு அம்சமுள்ள தன்மையானது ஆரோபிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆத்மாவினிடத்தில் ஒருதடவை அவதானத்தினுல் (மனப்பற்றினுல்) ஒரு அம்சத்தையும், மற்றொரு அவதானத்தினுல் மற்றொரு அம்சத்தையும் போக்குகிறுன். ஆனதுபற்றி அவ்விஷயத்தில் கிரமமுள்ள அறிவானது பொருத்தமுள்ளதாகவே ஆகிறது. அதுவோ ஆத்மஞானத்துக்குப் பூர்வரூபமே (முந்தினரூபமே) யாகும். நிபுணபுத்தியுள்ளவர்க்கு அஞ்ஞானஸம்சய விபர்யயரூபமாயுள்ள பதார்த்தவிஷயமான ப்ரதிபந்தமானது கிடையாதோ அவர் ஒரேதடவை சொல்லப்பட்ட தத்த்வமஸி என்ற வாக்கியார்த்தத்தை அனுபவிக்கச் சக்தியுள்ளவராகவே ஆகின்றனர் என்பதுபற்றி அவர்களைக்குறித்து ஆவிருத்தியானது பயனற்றதுஎன்பது எங்களுக்கும் இஷ்டமேயாகும். ஒரேதடவையிலுண்டான ஆத்மஞானமானது அவித்யையை விலக்கிவிடுவதுபற்றி இவ்விஷயத்தில் ஒருவிதக்கிரமமும் அங்கீகரிக்கப்படுவதில்லை.

சங்கை—யாதேனுமொருவர்க்கு இவ்வித ஞானம் வருமாயின் இவ்விதம் சொல்லுவது ஸத்தியமாகப் பொருந்தலாம்தான். ஆத்மாவுக்குத் துக்கித்வாதித் தோற்றமானது வலுவாகவன்றோ காணப்படுகின்றது. ஆனதுபற்றி துக்கித்வாதிகளின் அபாவத்தை ஒருவனும் அடையமாட்டான் எனின்?

உத்தரம்—அவ்விதமில்லை. தேஹாதிகளின் அபிமானம்போல துக்கித்வம் முதலிய அபிமானமும் பொய்யானதோற்றமாயிருப்பது பற்றியே என்க. தேஹம் வெட்டப்படினும் பொசுக்கப்படினும் நானேவெட்டப்படுகிறேன், நானே பொசுக்கப்படுகிறேன் என்பதாய் பொய்யான அபிமானமானது கண்கூடாகக்காணப்படுகின்றதன்றோ. அவ்விதமே ஆத்மாவுக்கு வெகுதூரம் வெளியிலுள்ள புத்திரமித்திராதிகள் ஸந்தாபத்தை யடையுங்கால் நானே ஸந்தாபத்தை யடைகிறேன் எனப்பொய்யான ஆரோபமானது காணப்பட்டிருக்கிறது. துக்கித்வம் முதலிய

मानोऽपि स्यात्। देहादिवदेव चैतन्याद्बहिरुपलभ्यमानत्वाद्दुःखित्वादीनां सुषुप्तादिषु चाननुवृत्तेः। चैतन्यस्य तु सुषुप्तेऽप्यनुवृत्तिमामनन्ति 'यद्वै तन्न पश्यति पश्यन्वै तन्न पश्यति' (बृ० ४। ३। २३) इत्यादिना। तस्मात्सर्वदुःखविनिर्मुक्तैकचैतन्यात्मकोऽहमित्येष आत्मानुभवः। नचैवमात्मानमनुभवतः किञ्चिदन्यत्कृत्यमवशिष्यते। तथाच श्रुतिः—'किं प्रजया करिष्यामो येषां नोऽयमात्मायं लोकः' (बृ० ४। ४। २२) इत्यात्मविदः कर्तव्याभावं दर्शयति। स्मृतिरपि—'यस्त्वात्मरतिरेव स्यादात्मतृप्तश्च मानवः। आत्मन्येव च सन्तुष्टस्तस्य कार्यं न विद्यते' (गी० ३। १७) इति। यस्य तु नैषोऽनुभवो द्रागिव जायते तं प्रत्यनुभवार्थ एवावृत्त्यभ्युपगमः। तत्रापि न तत्त्वमसिवाक्यार्थात्प्रच्याव्यावृत्तौ प्रवर्तयेत्। नहि वरघाताय कन्यामुद्वाहयन्ति। नियुक्तस्य चास्मिन्नधिकृतोऽहं कर्ता मयेदं कर्तव्यमित्यवश्यं ब्रह्मप्रत्ययाद्विपरीतप्रत्यय उत्पद्यते। यस्तु स्वयमेव मन्दमतिरप्रतिभानात्तं वाक्यार्थं जिहासेत्तस्यैतस्मिन्नेव वाक्यार्थे स्थिरीकार आवृत्त्यादिवाचोयुक्त्याभ्युपेयते। तस्मात्परब्रह्मविषयेऽपि प्रत्यये तदुपायोपदेशेष्वावृत्तिसिद्धिः॥ २॥

அபிமானமும் அவ்விதமே தானாகும். தேஹாதிகள் போலவே சைதன்னியத்துக்கு வெளியில் அறியப்படுவதாக இருப்பதும், துக்கித்வம் முதலியன ஸுஷுப்தி முதலியவற்றில் தொடர்ந்து வராதிருப்பதுமே அதன் காரணமாகும். சைதன்னியத்துக்கோ ஸுஷுப்தியிலும் அனுவிருத்தியை "அதைப்பார்க்கவில்லை என்பது யாதுண்டோ பார்த்துக்கொண்டேதான் அதைப் பார்க்கவில்லை" என்றதாதியால் உபதேசிக்கின்றனர். ஆகவே ஸர்வதுக்கங்களினின்றும் விடுபட்ட ஒரே சைதன்னியவடிவனே நான் என்ற இதுவே ஆத்மானுபவமாகும். இவ்விதம் ஆத்மாவை அனுபவிப்பவர்க்கு வேறாகச்செய்யவேண்டுவது ஒன்றும் மிச்சப்படுவதில்லை. அவ்விதமே ஶ்ருதியும் "எந்த நமக்கு இதுவே ஆத்மா இதுவே லோகமோ (பயனோ) (அந்தநாம்) ப்ரஜையினால் என்ன செய்யப்போகிறோம்" என்பதாய் ஆத்மாவையறிந்தவர்க்குச் செய்யவேண்டுவது ஒன்றுமில்லை என்பதைத் தெரிவிக்கிறது. ஸ்மிருதியும் "எந்த மனிதன் ஆத்மரதியுள்ளவனாகவும் ஆத்மதிருப்தனாகவும் ஆத்மாவினிடத்திலேயே ஸந்துஷ்டியுள்ளவனாகவுமிருக்கிறானோ அவனுக்குக் கார்த்தவ்யமானதொன்றுமில்லை" எனச் சொல்லுகிறது. எவனுக்கு இந்த அனுபவமானது விரைவில் உண்டாவதில்லையோ அவனைக்குறித்து அனுபவம் வருவதற்கு வேண்டியே ஆவிருத்தியானது ஒப்புக்கொள்ளப்படுகிறது. அவ்விடத்திலுங்கூட தத்த்வமஸி என்ற வாக்கியார்த்தத்தினின்றும் விலக்கி குருவோ பிறரோ ஆவிருத்தியில் பிரவிருத்திக்கச் செய்விக்கமாட்டார். மணமகனைக்கொல்லவேண்டி கன்னிகையை மணஞ்செய்விக்க மாட்டாரன்றோ. அவ்விதம் நியுக்தனுக்குங்கூட இதில் நான் அதிகாரத்தை யடைந்தவன் நான் கர்த்தா என்னால் இது செய்யப்படவேண்டும் என்பதாய் ப்ரம்ஹப்ரத்யயத்தினின்றும் விபரீதப்ரத்யயமானது நிஶ்சயமாய் உண்டாகிறது. எவன் ஸ்வயம் மந்தமதியாயிருப்பதுபற்றி புத்திக்கு ப்ரதிபை இல்லாமை காரணமாக அந்த வாக்கியார்த்தத்தை விடுவதற்கு விரும்புவனோ அவனுக்கு இதேவாக்கியார்த்தத்தில் நிலைத்தலானது ஆவிருத்யாதிகள் சொல்லும்யுக்தி

२ आत्मत्वोपासनाधिकरणम् । सू० ३

आत्मेति तूपगच्छन्ति ग्राहयन्ति च ॥ ३ ॥

ज्ञात्रा स्वान्यतया ब्रह्म ग्राह्यमात्मतयाऽथवा । अन्यत्वेन विजानीयात् दुःख्यदुःखिविरोधतः ॥ १ ॥

औपाधिको विरोधोऽत आत्मत्वेनैव गृह्यताम् । गृह्णन्त्येवं महावाक्यैः स्वशिष्यान् ग्राहयन्ति च ॥ २ ॥

यः शास्त्रोक्तविशेषणः परमात्मा स किमहमिति ग्रहीतव्यः किंवा मदन्य इत्येतद्विचारयति । कथं पुनरात्मशब्दे प्रत्यगात्मविषये श्रूयमाणे संशय इति । उच्यते—अयमात्मशब्दो मुख्यः शक्यतेऽभ्युपगन्तुं सति जीवेश्वरयोरभेदसंभव इतरथा तु गौणोऽयम-

---

வாயிலாக அங்கீகரிக்கப்படுகிறது. ஆகவே பரப்ரம்ஹவிஷயமான ஜ்ஞானத்திலும் கூட அதனுடைய உபாயோபதேசங்களில் அவிருத்தியானது ஸித்திக்கத்தான் செய்கிறது.

ஒன்றுவது அவிருத்யதிகரணம் முற்றிற்று.

ஆத்மத்வோபாஸனுதிகரணம் 2.

(ஸூ) ஆத்மேதிது உபகச்சந்தி க்ராஹயந்தி ச (3)

(ப-ரை) **आत्मेतितु** (ஆத்மேதிது)=ஆத்மாவென்றே பரமேஸ்வரன் எண்ணத் தக்கவர் **उपगच्छन्ति** (உபகச்சந்தி)=ஜாபாலர்கள் அவ்விதமே கிரஹிக்கின்றனர். **ग्राहयन्ति च** (க்ராஹயந்திச)=வேதாந்த வாக்கியங்களும் அவ்விதமே தான் உபதேசிக்கவும் செய்கின்றன. (3) (எ-று)

வையாஸிக நியாயமாலே.

(க-ரை) ப்ரம்ஹத்தைத் தன்னைவிட வேருக அறியவேண்டுமா? அல்லது ப்ரத்யகாத்ம ஸ்வரூபமாக அறியவேண்டுமா? என்பது ஸந்தேஹம். துக்கியாக வுள்ளவனையும் துக்கமற்றவனையும் ஒன்ருக எண்ணுவது விரோதப்படுமாதலால் வேருகத்தான் எண்ணவேண்டும் என்பது பூர்வபக்ஷம். முன்னர் சொன்ன விரோதமானது ஔபாதிகமாக (உபாதிமூலமேற்படுவதாக) இருப்பதால் ப்ரத்யகாத்ம ஸ்வரூபமாகவேதான் எண்ணவேண்டும். இவ்விதமே தான் ஜாபாலர்களும் கிரஹிக்கின்றனர். மஹான்கள் மஹாவாக்கியங்களினல் தமது சிஷ்யர்களே இவ்விதமேதான் கிரஹிக்கவும் செய்கின்றனர். என்பது ஸித்தாந்தம். (எ-று)

(க—ரை) மனதானது ப்ராணனிடத்தில் ஸ்வயம் லயத்தை யடைகிறதா? அல்லது விருத்தியுடன் லயத்தையடைகிறதா? என்பது ஸந்தேஹம். ஸ்வயமாகவேதான் (ஸ்வரூபத்தாலேதான்) லயத்தை யடைவதாகச் சொல்லவேண்டும். ஏன்? காரணமான அன்னம், உதகம் (ஜலம்) இவைவாயிலாக மனத்தைக் குறித்து ப்ராணன் ஹேதுவாகவாவதே அதன் காரணமாகும் என்பது பூர்வபக்ஷம். கார்யமான பொருளானது தனது காரணத்தில் நேரில் லயத்தை யடையுமே யொழிய ஒன்றின் வாயிலாக லயத்தை யடையமாட்டாது. ப்ராணுடிகமான (ஒன்றின் வாயிலாகச் சொல்லப்படுவதான) காரணமானது கௌணமானது. ஆகவே புத்தியினது விருத்திக்கு லயஞ்சொல்லுவதுதான் பொருந்துகிறது என்பது ஸித்தாந்தம்.

பாஷ்யம்.—"வாக் மனஸி ஸம்பத்யதே" என்ற விடத்தில் விருத்திக்கு லயமானது சொல்லவிரும்பப்படுகிறது என்பது அறியப்பட்டது. பிறகு அதற்கு மேலுள்ள "மன: ப்ராணே" என்ற வாக்கியம் யாதுண்டோ இவ்விடத்திலுங் கூட விருத்திலயமே சொல்ல விரும்பப்பட்டதா? அல்லது விருத்தியுடன் கூடினவற்றுக்த் லயம் சொல்லவிரும்பப்பட்டதா? என ஸந்தேஹம் வரவே விருத்தியுடன் கூடினவற்றுக்கேதான் லயஞ் சொல்லப்படுகிறது என ப்ராப்தமாகிறது அவ்விதஞ் சொல்லுவதில் சுருதியினுைத்துமையிருப்பதும் அதை ப்ரகிருதி (காரண) யாகக் கொண்டிருத்தல் பொருந்தக்கூடியதாகவாவதுமே அதன் காரணமாகும். அதாவது:—"ஹே ஸோம்ய! மனது அன்னமயமும், ப்ராணன் ஆபோமயமும் அன்றோ" என்பதாய் மனதை அன்னத்தின் காரியமென்றும். ப்ராணனை அப்பின் (ஜலத்தின்) காரியமென்றும் சுருதிகள் சொல்லுகின்றன. "ஜலங்களும் அன்னத்தை விருஷ்டித்தன" என்ற ஸ்ருதியுமிருக்கிறது. ஆகவே மனஸ் ப்ராணனிடத்தில் லயத்தையடைகிறது என்பது யாதுண்டோஅதனுல் அன்னமே ஜலத்தில் லயமடைகிறது. (என ஏற்படுகிறது.) அன்னமன்றோ மனது, ப்ராணனன்றோ ஜலம். காரணகாரியங்களுக்கு அபேதமிருப்பதே அதன் காரணமாகும். என இவ்விதம் பூர்வபக்ஷம் ப்ராப்த்தமாகவே (ஸித்தாந்தத்தைச்) சொல்லுகிறோம். நாலாபக்கத்திலும் கிரஹிக்கப்பட்ட வெளியிலுள்ள இந்திரியங்களின் விருத்தியையுடையதான அந்த மனதும் கூட விருத்தியின் வாயிலாகவே ப்ராணனிடத்தில் லயத்தை யடைகிறது என மேலுள்ள வாக்கியத்தினின்றும் அறிந்து கொள்ளவேண்டும்.

प्राणे प्रलीयते इत्युत्तराद्वाक्यादवगन्तव्यम्। तथाहि सुषुप्सोर्मुमूर्षोश्च प्राणवृत्तौ परिस्पन्दात्मिकायामवस्थितायां मनोवृत्तीनामुपशमो दृश्यते। नच मनसः स्वरूपाप्ययः प्राणे संभवति। अतत्प्रकृतित्वात्। ननु दर्शितं मनसः प्राणप्रकृतित्वम्। नैतत्सारम्। नहीदृशेन प्राणाडिकेन तत्प्रकृतित्वेन मनः प्राणे संपत्तुमर्हति। एवमपि ह्यन्ने मनः संपद्येताप्सु चान्नमप्स्वेव च प्राणः। नह्येतस्मिन्नपि पक्षे प्राणभावपरिणताभ्योऽद्भ्यो मनो जायत इति किञ्चन प्रमाणमस्ति तस्मान्न मनसः प्राणे स्वरूपाप्ययः। वृत्त्यप्ययेऽपि तु शब्दोऽवकल्पते वृत्तिवृत्तिमतोरभेदोपचारादिति दर्शितम्॥ ३॥

३ अध्यक्षाधिकरणम्। सू० ४–६

सोऽध्यक्षे तदुपगमादिभ्यः॥ ४॥

असोर्भूतेषु जीवे वा लयो भूतेषु तच्छ्रुतेः। स प्राणस्तेजसीत्याह न तु जीव इति क्वचित्॥ १॥
एवमेवेममात्मानं प्राणा यन्तीति च श्रुतेः। जीवे लीत्वा सहैतेन पुनर्भूतेषु लीयते॥ २॥

அதாவது:—ஸுஷுப்தியி லிருப்பவனுடையவும், மரிக்குந்தருணத்திலிருப்பவனுடையவுமான அசைதல் ரூபமான ப்ராணவிருத்தியானது இருக்குங்கால் அதில் மனோவிருத்திகளுக்கு லயமேற்படுவதாகக் காணக்கிடக்கிறது. மனதுக்கு ஸ்வரூபலயமானது ப்ராணனிடத்தில் ஸம்பவிக்கவும் மாட்டாது. ப்ராணனின் காரியமாக மனதில்லாதிருப்பதாலென்றும். ப்ராணனுடைய காரியம் மனஸ் என்பது காட்டப்பட்டதன்றோ எனின்? இது ஸாரமாகாது. இவ்விதம் முறையே யேற்படும் காரணத்தன்மையைக் கொண்டு ப்ராணனில் மனது லயத்தையடைவதாகச் சொல்லவியலாதன்றோ? இவ்விதமானாலோ (ப்ராணன் ஜலத்தின் காரியமென்றோ) அன்னத்தில் மனதும், ஜலத்தில் அன்னமும் ஜலத்தில் ப்ராணனும் லயத்தையடையவேண்டிவரும். இந்தப் பக்ஷத்திலும் ப்ராணரூபமாகப் பரிணமத்தையடைந்த ஜலத்திலிருந்து மனது உண்டாகிறது என்பதைக்கூறும் ப்ரமாணமொன்றுமில்லை. ஆகவே மனதுக்கு ப்ராணனில் ஸ்ரூபலயம் கிடையாது என்பது தான் பொருந்துகிறது. விருத்திக்கு லயஞ்சொன்னாலோ விருத்தி விருத்தியுள்ளது இரண்டுக்கும் உபசாரமுறையால் அபேதம் ஸம்பவிப்பதால் **मनः** (மனஃ)= என்ற சப்தமும் பொருத்தமுள்ளதாகவே ஆகிவிடுகிறது. என்பது (முன்னறே) காண்பிக்கப்பட்டு மிருக்கிறது. (3) (எ–று)

இரண்டாவது மனோதிகரணம் முற்றிற்று.

அத்யக்ஷாதிகரணம் 3.

(ஸூ) ஸோத்யக்ஷே ததுபகமாதிப்ய: (4)

(ப–ரை) **सः** (ஸஃ)=அந்த ப்ராணன், **अध्यक्षे** (அத்யக்ஷே)=விக்ஞானாத்மாவினிடத்தில் லயிக்கிறது. என்? **तदुपगमादिभ्यः** (ததுபகமாதிப்யஃ)=வேறு சுருதியில் எல்லாப்ராணன்களுக்கும் தத்தமது அத்யக்ஷமான பொருளில் உபகமனம் முதலியன (உபகமனம், அனுகமனம், அவஸ்தானம் இவை) சொல்லப்பட்டிருப்பதாலென்க. (4) (எ–று)

स्थितमेतद्यस्य यतो नोत्पत्तिस्तस्य तस्मिन्वृत्तिप्रलयो न स्वरूपप्रलय इति । इदमिदानीं प्राणस्तेजसीत्यत्र चिन्त्यते—किं यथाश्रुति प्राणस्य तेजस्येव वृत्त्युपसंहारः किंवा देहेन्द्रियपञ्जराध्यक्षे जीव इति । तत्र श्रुतेरनतिशङ्कयत्वात्प्राणस्य तेजस्येव संपत्तिः स्यादश्रुतकल्पनाया अन्याय्यत्वादिति । एवं प्राप्ते प्रतिपद्यते सोऽध्यक्ष इति । स प्रकृतः प्राणोऽध्यक्षेऽविद्याकर्मपूर्वप्रज्ञोपाधिके विज्ञानात्मन्यवतिष्ठते । तत्प्रधाना प्राणवृत्तिर्भवतीत्यर्थः । कुतः—तदुपगमादिभ्यः । 'एवमेवेममात्मानमन्तकाले सर्वे प्राणा अभिसमायन्ति यत्रैतदूर्ध्वोच्छ्वासी भवति' इति हि श्रुत्यन्तरमध्यक्षोपगामिनः सर्वान्प्राणानविशेषेण दर्शयति । विशेषेण च 'तमुत्क्रामन्तं प्राणोऽनूत्क्रामति' (बृ० ४ । ४ । २) इति पञ्चवृत्तेः

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) ப்ராணனுக்கு பூதங்களில் லயமேற்படுகிறதா? அல்லது அவற்றுக்கு அத்யக்ஷனன ஜீவனிடத்தில் லயமேற்படுகிறதா? என்பது ஸந்தேஹம். பூதங்களிற்றான் லயமேற்படுகிறது. அவ்விதம் ஶ்ருதியுமிருக்கிறது. "அந்த ப்ராணன் தேஜஸ்ஸில் லயத்தை யடைகிறது" என ஶ்ருதியிருக்கிறதே யொழிய ஜீவனிடத்தில் லயத்தையடைவதாக ஒருவிடத்திலும் சுருதி கூறவில்லை என்பது பூர்வ பக்ஷம். இவ்விதமே இந்த ஆத்மாவை ப்ராணன்கள் அடைகின்றன" எனஶ்ருதியிருப்பதால் ஜீவனிடத்தில் இவைலயத்தையடைந்து ஜீவனுடன் கூட பூதங்களில் லயத்தையடைகிறதாக ஏற்படுகிறது. என்பது **ஸித்தாந்தம்.** (எ—று)

பாஷ்யம்.—எதற்கு எதனிடமிருந்து உத்பத்தியானது கிடையாதோ அதற்கு அதனிடத்தில் விருத்திலயம் மட்டுமே யொழிய ஸ்வரூபலயம் கிடையாது என்பது முன்னர் கூறப்பட்டது. இப்பொழுது "ப்ராணன் தேஜஸ்ஸில் லயிக்கிறது" என்றவிடத்தில் இந்த விசாரம் செய்யப்படுகிறது. அதாவது:—சுருதியிலிருக்கிறபடி ப்ராணனுச்குத் தேஜஸ்ஸிலேயே விருத்திலயஞ் சொல்லவேண்டுமா? அல்லது தேஹேந்திரியக் கூட்டுக்கு அத்யக்ஷனன ஜீவனிடத்தில் லயஞ் சொல்லவேண்டுமா என்றும். அங்கு சுருதியில் அதிசங்கை கொள்ளுவது பொருந்தாதாகையால் ப்ராணனுக்குத் தேஜஸ்ஸிலேயே தான் லயம் சொல்லவேண்டும். சுருதிசொல்லாததைக் கல்பிப்பது அன்னியாயமாகவாவதே அதன் காரணமாகும் என இவ்விதம் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகவே "ஸோத்யக்ஷ" என்பதாய் ஸித்தாந்தம் செய்யப்படுகிறது. அந்த ப்ரகிருதனன ப்ராணன் அவித்யை, கர்மம், பூர்வப்ரக்ஞை இவற்றை உபாதியாக வுடைய ஜீவனிடத்தில் ஸம்பத்தியை யடைகிறது. அதாவது ப்ராணவிருத்தியானது ஜீவனை ப்ரதானமாகக் கொண்டதாகவாகிறது என்பது அதன் பொருள். ஏன்? ததுபகமாதிகளிருப்பதே அதன் காரணமாகும். (ஜீவனுடன் செல்லுதலும், அவனுடன் திரும்பிவருதலும், அவனுடன் சேர்ந்து இருத்தலுமே அதன் காரணமென்றும்.) "இவ்விதமே முடிவுகாலத்தில் எல்லாப்ராணன்களும் இந்த ஆத்மாவை (ஜீவனைத்) தொடர்ந்து செல்லுகின்றன. எச்சமயத்தில் இவ்விதம் ஊர்த்துவஶ்வாஸமுள்ளவனுக வாகின்றனே" என்றச் சுருதியோ எல்லாப்ராணன்களையும் அத்யக்ஷனை (ஜீவனைப்) பின்

प्राणस्याध्यक्षानुगामितां दर्शयति तदनुवृत्तितां चेतरेषाम् 'प्राणमनूत्क्रामन्तं सर्वे प्राणा अनूत्क्रामन्ति' (बृ० ४।४।२) इति। 'सविज्ञानो भवति' इति चाध्यक्षस्यान्तर्विज्ञानवत्त्वप्रदर्शनेन तस्मिन्नपीतकरणग्रामस्य प्राणस्यावस्थानं गमयति। ननु 'प्राणस्तेजसि' इति श्रूयते कथं प्राणोऽध्यक्ष इत्यधिकावापः क्रियते। नैष दोषः। अध्यक्षप्रधानत्वादुत्क्रमणादिव्यवहारस्य श्रुत्यन्तरगतस्यापि च विशेषस्यापेक्षणीयत्वात्॥ ४॥

कथं तर्हि प्राणस्तेजसीति श्रुतिरित्यत आह—

भूतेषु तच्छ्रुतेः॥ ५॥

स प्राणसंपृक्तोऽध्यक्षस्तेजःसहचरितेषु भूतेषु देहबीजभूतेषु सूक्ष्मेष्ववतिष्ठत इत्य-

---

தொடருகின்றன" என்பதாய் வேறு ப்ராணன்களுக்கு (இந்திரியங்களுக்கு) ப்ராணனைப் பின்தொடரும் தன்மையைச் சொல்லியு மிருக்கிறது. "விக்ஞானத்துடன் கூடினவனுக வாகிறுன்" என்பதாய் அத்யக்ஷனுன ஜீவனுக்கு உள்ளில் விக்ஞானத்துடன் கூடியிருத்தலைக் காண்பித்திருப்பதிலிருந்து லயத்தை யடைந்த கரணஸமூஹங்களையுடைய ப்ராணனுக்கு அந்த ஜீவனிடத்தில் இருப்பைக் காண்பிக்கிறது.

சங்கை—ப்ராணன் தேஜஸில் லயிக்கிறது" என்பதாய் மட்டும் சுருதியில் காணப்படுகிறது. அவ்விதமிருக்க ப்ராணன் அத்யக்ஷ (ஜீவ) னிடத்தில் என அதிகாவாபம் (சப்தத்துக்கு நேரில் அர்த்தமாகவாகாததை அர்த்தமாகக் கொள்ளுதல்) ஏன் செய்யப்படுகிறது எனின்?

உத்தரம்—இது தோஷமாகாது. உயரக்கிளம்புதல் முதலிய வியவஹாரமானது அத்யக்ஷனை (ஜீவனை) ப்ரதானமாகக் கொண்டிருப்பதுபற்றி வேறு சுருதியிற் சொல்லியுள்ள விசேஷமும் அபேக்ஷிக்கக்கூடியதாகவாவதே அதன் காரணமாகும். (4) (எ—று)

அவதாரிகாபாஷ்யம்.—"ப்ராணன் தேஜஸ்ஸில் லயிக்கிறது" என ஸ்ருதி சொன்னது எவ்விதமெனின்? அதற்கு அடுத்த ஸூத்திரத்தினுல் பதில் சொல்லுகிறுர்—

(ஸூ) பூதேஷு தத் சுருதே: (5)

(ப—ரை) ப்ராணனுடன்கூடின ஜீவன் **भूतेषु** (பூதேஷு)=தேஜஸ்ஸுடன் கூடின ஸூக்ஷ்ம பூதங்களிடத்தில் இருப்பை யடைகிறுன் எனக் கண்டுகொள்ள வேண்டும். ஏன்? **तच्छ्रुतेः** (தத்சுருதே:)="ப்ராணன் தேஜஸ்ஸில்" என ஸ்ருதி கூறுவதே அதன் காரணமாகும். (5) (எ—று)

பாஷ்யம்.—அந்த அத்யக்ஷன் (ஜீவன்) ப்ராணனுடன் கூடினவனுய் தேஹத்துக்குப் பீஜங்களாக வானதும் தேஜஸ்ஸுடன் கூடினதும் ஸூக்ஷ்மங்களுமான

वगन्तव्यम् । प्राणस्तेजसीति श्रुतेः । ननु चेयं श्रुतिः प्राणस्य तेजसि स्थितिं दर्शयति न प्राणसंपृक्तस्याध्यक्षस्य । नैष दोषः । सोऽध्यक्ष इत्यध्यक्षस्याप्यन्तरालेऽप्युपसङ्ख्यातत्वात् । योऽपि हि स्रुघ्नान्मथुरां गत्वा मथुरायाः पाटलिपुत्रं व्रजति सोऽपि स्रुघ्नात्पाटलिपुत्रं यातीति शक्यते वदितुम् । तस्मात्प्राणस्तेजसीति प्राणसंपृक्तस्याध्यक्षस्यैवैतत्तेजःसहचरितेषु भूतेष्ववस्थानम् ॥ ५ ॥

कथं तेजःसहचरितेषु भूतेष्वित्युच्यते यावतैकमेव तेजः श्रूयते प्राणस्तेजसीति । अत आह—

नैकस्मिन्दर्शयतो हि ॥ ६ ॥

नैकस्मिन्नेव तेजसि शरीरान्तरप्रेप्सावेलायां जीवोऽवतिष्ठते कार्यस्य शरीरस्यानेका-

---

பூதங்களில் இருப்பை யடைகிருன் எனக் கண்டுகொள்ளவேண்டும். "ப்ராணன் தேஜஸ்ஸில்'' என ஶ்ருதியிருப்பதாலென்க.

சங்கை—இந்த ஶ்ருதியானது ப்ராணனுக்குத் தேஜஸ்ஸில் ஸ்திதியைக் காட்டுமே யொழிய ப்ராணனுடன் கூடின அத்யக்ஷனுக்கு ஸ்திதியைக் காட்டாதன்றோ எனின்?

உத்தரம்—இதுதோஷமாகாது. "அது அத்யக்ஷனிடத்தில் லயிக்கிறது'' என்ற ஸூத்திரத்தில் சொல்லிய சுருதிபலத்தால் அத்யக்ஷனையும் இடையில் சேர்த்துக்கொள்ள வேண்டுவதாக ஏற்படுகிறது. எவன் ஸ்ருக்ன மென்ற தேசத்திலிருந்து மதுரையையடைந்து மதுரையினின்றும் பாடலிபுத்ர தேசத்தை யடைகிருனே அவனும் ஸ்ருக்னத்தினின்றும் பாடலிபுத்ரதேசத்தை யடைகிருன் எனச் சொல்லக்கூடியவனுகவே ஆகிருன். ஆகவே "ப்ராணன் தேஜஸ்ஸில்'' என்றவிடத்தில் ப்ராணனுடன் கூடின அத்யக்ஷ (ஜீவ) னுக்கே தேஜஸ்ஸுடன் கூடின பூதங்களில் இந்த இருப்பு சொல்லுவது பொருந்துகிறது. (5) (எ—று)

அவதாரிகாபாஷ்யம்.—"ப்ராணன் தேஜஸ்ஸில்'' என்பதாய் தேஜஸ் ஒன்று மட்டுமே சொல்லப்பட்டிருக்க தேஜஸ்ஸுடன் கூடின பூதங்களில் எனச் சொல்லப்படுவது எங்ஙனமெனின்? இதற்கு வேண்டி அடுத்த ஸூத்திரம் சொல்லப்படுகிறது—

(ஸூ) ந ஏகஸ்மின் தர்சயதோ ஹி (6)

(ப-ரை) ஜீவன் வேறு சரீரத்தை யடையும் ஸமயத்தில் **एकस्मिन्** (ஏகஸ்மின்)=தேஜஸ் ஒன்றில் மட்டுமே **न** (ந)=இருப்பதில்லை. கார்யமான சரீரமானது அனேகத்தின் சேர்க்கையுள்ளதாக விருப்பதே அதன்காரணமாகும். **दर्शयतो हि** (தர்ஶயதோ ஹி)=சுருதியில் யாக்ஞவல்க்யர் ஆர்த்தபாகர், என்ற இரண்டுமஹரிஷிகளின் ப்ரஶ்னப்ரதிவசனங்கள் இதை விளக்குகின்றனவன்றே. (6) (எ—று)

பாஷ்யம்.—ஜீவன் வேறு தேஹத்தை யடையும் வேளையில் தேஜஸ் ஒன்றில் மட்டுமே இருப்பதில்லை. காரியமான சரீரமானது அனேக (பூதங்கள்) சேர்ந்ததா

त्मकत्वदर्शनात्। दर्शयतश्चैतमर्थं प्रश्नप्रतिवचने ‘आपः पुरुषवचसः’ (छा० ५। ३। ३) इति। तद्व्याख्यातम् ‘त्र्यात्मकत्वात्तु भूयस्त्वात्’ (ब्र० सू० ३। १। २) इत्यत्र। श्रुतिस्मृती चैतमर्थं दर्शयतः। श्रुतिः ‘पृथ्वीमय आपोमयो वायुमय आकाशमयस्तेजोमयः’ इत्याद्या। स्मृतिरपि ‘अण्व्यो मात्राऽविनाशिन्यो दशार्धानां तु याः स्मृताः। ताभिः सार्धमिदं सर्वं संभवत्यनुपूर्वशः’ इत्याद्या। ननु चोपसंहृतेषु वागादिषु करणेषु शरीरान्तरप्रेप्सावेलायां ‘क्वायं तदा पुरुषो भवति’ (बृ० ३। २। १३) इत्युपक्रम्य श्रुत्यन्तरं कर्माश्रयतां निरूपयति—‘तौ ह यदूचतुः कर्म हैव तदूचतुरथ ह यत्प्रशशंसतुः कर्म हैव तत्प्रशशंसतुः’ (बृ० ३। २। १३) इति। अत्रोच्यते—तत्र कर्मप्रयुक्तस्य ग्रहातिग्रहसंज्ञकस्येन्द्रियविषयात्मकस्य बन्धनस्य प्रवृत्तिरिति कर्माश्रयतोक्ता। इह पुनर्भूतोपादानाद्देहान्तरोत्पत्तिरिति भूताश्रयत्वमुक्तम्। प्रशंसाशब्दादपि तत्र प्राधान्यमात्रं कर्मणः प्रदर्शितं नत्वाश्रयान्तरं निवारितम्। तस्मादविरोधः ॥ ६ ॥

கக் காணப்படுவதாலென்க. “ஜலம் புருஷன் என்ற சப்தத்தால் சொல்லப்படுகிறது” என்ற விடத்திலுள்ள ப்ரஶ்னப்ரதிவசனங்கள் இப்பொருளைக் காண்பிக்கின்றனவன்றோ. அது “த்ர்யாத்மகத்வாத்து பூயஸ்த்வாத்” என்ற விடத்தில் விளக்கப்பட்டு மிருக்கிறது. சுருதி ஸ்மிருதிகளும் இப்பொருளைத் தெரிவிக்கின்றன. அவற்றுள் சுருதியாவது—“ப்ருதிவீ மயன் ஆபோமயன், வாயுமயன், ஆகாசமயன், தேஜோமயன்” என்றதாதியாம். ஸ்மிருதியாவது—“விநாசத்தை யடையாதனவும் ஸூக்ஷ்மமுமான பஞ்சபூதங்களுடைய மாத்ரைகள் எவையுண்டோ அவைகளுடன் கூட இந்தச் சரீரமானது முறையே அவற்றின் சேர்க்கையுள்ளதாய் உண்டாகிறது” என்றதாதியாம்.

சங்கை—வாகாதிகரணங்கள் உபஸம்ஹாரத்தை யடைந்ததும் வேறு சரீரத்தை யடையவிருப்பமுள்ள வேளையில் “இந்தப் புருஷன் அப்பொழுது எங்கிருக்கிறான்” என்று தொடங்கி வேறுசுருதியானது “அந்த யாக்ஞ்வல்ச்யரும் ஆர்த்தபாகரும் எதைச் சொல்லினர் என்றால் கர்மத்தையே ஜீவாதாரமாகச் சொல்லினர். பின்னர் எதைப்புகழ்ந்தனரென்றால் அந்தக்கர்மத்தையே புகழ்ந்தனர்” என்றதால் கர்மாவை யாஶ்ரயித்திருக்கும் தன்மையைத் தெரிவிக்கின்றதன்றோ எனின்?

உத்தரம்—இவ்விஷயத்தில் சொல்லப்படுகிறது—அவ்விடத்தில்கர்மமூலமேற்பட்டதும் **க்ரஹம், அதிக்ரஹம்** என்ற பெயருள்ளதும் இந்திரியம் விஷயம் இவைவடிவமானதுமான பந்தனத்தின் ப்ரவிருத்தியானது கர்மாஶ்ரயமாக இருப்பதுபற்றி கர்மாஶ்ரயத்வம் ஜீவனுக்குச் சொல்லப்பட்டது. இவ்விடத்திலோ வெனில் பஞ்சபூதங்களின் உபாதானத்தினின்றும் தேஹோத்பத்தி ஏற்படுவதுபற்றி இவனுக்குப் பூதாஶ்ரயத்வம் சொல்லப்பட்டது. சுருதியில் புகழுரை சொல்லும் வசனமிருப்பதைக் கொண்டுங்கூட அங்கு கர்மத்துக்கு ப்ராதான்யம் மட்டும் காண்பிக்கப்பட்டதாக வாகுமேயொழிய வேறு ஆஶ்ரயமானது மறுக்கப்பட்டதாக வாகமாட்டாது. ஆனதுபற்றி விரோதமெதுவு மில்லை. (6)

மூன்றாவது அத்யக்ஷாதிகரணம் முற்றிற்று.

४ आसृत्युपक्रमाधिकरणम् । सू० ७

समाना चासृत्युपक्रमादमृतत्वं चानुपोष्य ॥ ७ ॥

ज्ञान्यज्ञोत्क्रान्तिरसमा समा वा नहि सा समा । मोक्षसंसाररूपस्य फलस्य विषमत्वतः ॥ १ ॥

आसृत्युपक्रमं जन्म वर्तमानमतः समा । पश्चात्तु फलवैषम्यादसमोत्क्रान्तिरेतयोः ॥ २ ॥

सेयमुत्क्रान्तिः किं विद्वदविदुषोः समाना किंवा विशेषवतीति विशयानानां विशेषवतीति तावत्प्राप्तम् । भूताश्रयविशिष्टा ह्येषा । पुनर्भवाय च भूतान्याश्रीयन्ते । नच

ஸமாநாதிகரணம் 4.

(அ—கை) இதுவரை யுள்ள மூன்று அதிகரணங்களால் வெளியிலுள்ள இந்திரியங்களுக்கு முதலில் மனத்தில் விருத்திலயமேற்படுவதால் அதற்குப்பிறகு மனோவிருத்திக்கு ப்ராணனில் லயமும் ப்ராணவிருத்திக்குப் பூதங்களுடன்கூடின ஜீவனிடத்தில் லயமும் ஏற்படுகிறதெனக் கூறி உத்க்ராந்தியின் வ்யவஸ்தையானது சொல்லப்பட்டது. அந்த வ்யவஸ்தையானது எல்லாப்ராணிகளுக்கும் ஸமமானது என்பது இந்த அதிகரணத்தால் சொல்லப்படுகிறது—

(ஸூ) ஸமாநா ச ஆஸ்ருத்யுபக்ரமாத் அமிருதத்வஞ்ச அநுபோஷ்ய (7)

(ப—ரை) "வாங்மனஸி" என்றதாதியால் சொல்லப்படும் இந்த உத்க்ராந்தியானது வித்வான் அவித்வான் இருவர்க்கும் **आसृत्युपक्रमात्** (ஆஸ்ருத்யுபக்ரமாத்)= மார்க்கத்தைத் தொடங்கும் வரை **समाना च** (ஸமாநாச)=ஸமானமாகவே இருக்கிறது. உபாஸகன் **अनुपोष्य** (அநுபோஷ்ய)=அவித்யாதி க்லேசங்களை நாசமாக்காமல் **अमृतत्वं च** (அமிருதத்வம்ச)=ஆபேக்ஷிகமான மோக்ஷத்தை அடையவிரும்புகிறான். (7) (எ—று)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) க்ஞானிக்கும் அக்ஞானிக்கும் உத்க்ராந்தியானது ஸமமில்லையா? அல்லது ஸமமானதா? என்பது ஸந்தேஹம். மோக்ஷரூபமும் ஸம்ஸாரரூபமுமான பலன் மாறுபட்டிருப்பதால் இருவர்க்கும் உத்க்ராந்தியானது ஸமமாக வாக மாட்டாது என்பது பூர்வபக்ஷம். மார்க்கமாரம்பிக்கும்வரை ஜன்மமானது இருப்பதால் ஸமமாகவே யிருக்கிறது. பின்னரோ பலன் மாறுபடுவதால் இருவர்க்கும் உத்க்ராந்தியானது ஸமமாகவாகமாட்டாது என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—அந்த இந்த உத்க்ராந்தியானது வித்வான் (உபாஸகன்) அவித்வான் (எவ்விதவுபாஸனமுமில்லாதவன்) இருவர்க்கும் ஸமானமானதா? அல்லது விசேஷமுள்ளதா என? ஸந்தேஹப்படுபவர்க்கு விசேஷமுள்ளது என்று தான் ப்ராப்த்தமாகிறது. இந்த உத்க்ராந்தியானது பூதங்களின் ஆஸ்ரயத்துடன் கூடினதாகவன்றோ இருக்கிறது. மறுபிறப்பையும் பொருட்டுப் பூதங்களை யாஸ்ரயிக்கிறான். வித்வானுக்கு மறுபிறப்பு ஸம்பவிப்பதில்லை. அமிருதத்வத்தையன்றோ

विदुषः पुनर्भवः संभवति। 'अमृतत्वं हि विद्वानश्नुते' इति स्थितिः। तस्मादविदुष एवैषोत्क्रान्तिः। ननु विद्याप्रकरणे समाम्नानाद्विदुष एवैषा भवेत्। न। स्वापादिवद्यथाप्राप्तानुकीर्तनात्। तथाहि 'यत्रैतत्पुरुषः स्वपिति नाम', 'अशिशिषति नाम', 'पिपासति नाम' (छा० ६।८।१,३,५) इति च सर्वप्राणिसाधारणा एव स्वापादयोऽनुकीर्त्यन्ते विद्याप्रकरणेऽपि प्रतिपिपादयिषितवस्तुप्रतिपादनानुगुण्येन नतु विदुषो विशेषवन्तो विधित्स्यन्ते। एवमियमप्युत्क्रान्तिर्महाजनगतैवानुकीर्त्यते यस्यां परस्यां देवतायां पुरुषस्य प्रयतस्तेजः संपद्यते स आत्मा तत्त्वमसीत्येतत्प्रतिपादयितुम्। प्रतिषिद्धा चैषा विदुषः 'न तस्य प्राणा उत्क्रामन्ति' (बृ० ४।४।६) इति। तस्मादविदुष एवैषेति। एवं प्राप्ते ब्रूमः—समाना चैषोत्क्रान्तिर्वाङ्मनसीत्याद्या विद्वदविदुषोरासृत्युपक्रमाद्भवितुमर्हति। अविशेषश्रवणात्। अविद्वान्देहबीजभूतानि भूतसूक्ष्माण्याश्रित्य कर्मप्रयुक्तो देहग्रहणमनु-

---

வித்வான் அடைகிறான் என்பது நிலைத்திருக்கிறது. ஆகவே அவித்வானுக்கே தான் இந்த உத்க்ராந்தி யேற்படுகிறது.

சங்கை—வித்யாப்ரகரணத்தில் சொல்லப்பட்டிருப்பதால் வித்வானுக்கேதான் இந்த உத்க்ராந்தி ஏற்படலாம் எனின்?

உத்தரம்—இல்லை. (ஏன்) தூக்கம் முதலியது போல இயற்கையிற்கிடைப்பதைச் சொல்லியிருப்பதாலென்க. அதாவது:—"எதுபோழ்து இவ்விதமாகப் புருஷன் தூங்குகிறான் என்ற பெயருள்ளவனாகவும், சாப்பிடவிருப்புகிறான் என்ற பெயருள்ளவனாகவும், குடிக்க விருப்புகிறான் என்ற பெயருள்ளவனாகவும் ஆகிறானே" என்றதால் எல்லாப்ராணிகளுக்கும் பொதுவாகவே யுள்ளவைகளான ஸ்வாபம்(தூக்கம்)முதலியன சொல்ல விரும்பப்பட்ட பொருளைக் கூறுவதற்கு அனுகுணமாக வித்யையைச் சொல்லுமிடத்திலுங்கூட சொல்லப்படுகின்றனவே அன்றி வித்வானுக்கெனத் தனித்த விசேஷமுள்ளனவாகச் சொல்லப்படவில்லை யன்றோ? இவ்விதமே இந்த உத்க்ராந்தியும் மஹாஜனங்களை அனுஸரித்திருப்பதே அனுவாத முறையாற் கூறப்படுகிறது. மரணத்தை யடைந்த புருஷனுடைய தேஜஸ்ஸானது எந்தப் பரதேவதையினிடத்தில் ஒன்றுபடுகிறதோ அது ஆத்மாவாகும் அதுவாக நீ இருக்கிறாய் என்ற இதைச் சொல்லுவதற்கு வேண்டியேயென்றும். வித்வானுக்கோ இந்த உத்க்ராந்தியானது "அவனது (வித்வானுடைய)ப்ராணன்கள் உயரக் கிளப்புவதில்லை" என்றதால் மறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவித்வானுக்கே தான் இந்த உத்க்ராந்தி சொல்லப்படுகிறது. என இவ்விதம் பூர்வபக்ஷம் ப்ராப்த்தமாகவே ஸித்தாந்தத்தைச் சொல்லுகிறோம். மார்க்கமாரம்பிக்கும் வரையில் "வாங்மனஸி" என்ற தாதியால் சொல்லப்பட்ட இந்த உத்க்ராந்தியானது வித்வானுக்கும் அவித்வானுக்கும் ஸமானமாகவே இருக்கிறது. விசேஷஶ்ரவணமொன்று மில்லாதிருப்பதே அதன் காரணமாகும். அவித்வானானவன் தேஹத்துக்குப் பீஜபூதங்களான பூதஸூக்ஷ்மங்களை யாஶ்ரயித்துக் கர்மாவினாலேவப்பட்டவனாய் தேஹக்கிரஹணத்தை அனுபவிப்பதற்குவேண்டிச் செல்லுகிறான். வித்வானோவெனில் ஞானப்ரகாசிதமான மோக்ஷநாடீத்வாரத்தை யாஶ்ரயிக்கிறான்.

भवितुं संसरति। विद्वांस्तु ज्ञानप्रकाशितं मोक्षनाडीद्वारमाश्रयते। तदेतदासृत्युपक्रमादित्युक्तम्। नन्वमृतत्वं हि विदुषा प्राप्तव्यं नच तद्देशान्तरायत्तं तत्र कुतो भूताश्रयत्वं सृत्युपक्रमो वेति। अत्रोच्यते—अनुपोष्य चेदम्, अदग्ध्वाऽत्यन्तमविद्यादीन्क्लेशानपरविद्यासामर्थ्यादापेक्षिकममृतत्वं प्रेप्सते संभवति तत्र सृत्युपक्रमो भूताश्रयत्वं च। नहि निराश्रयाणां प्राणानां गतिरुपपद्यते। तस्माददोषः ॥ ७॥

५ संसारव्यपदेशाधिकरणम्। सू० ८–११

तदाऽऽपीतेः संसारव्यपदेशात् ॥ ८॥

स्वरूपेणाथ वृत्त्या वा भूतानां विलयः परे। स्वरूपेण लयो युक्तः स्वोपादाने परात्मनि ॥ १॥

आत्मज्ञस्य तथात्वेपि वृत्त्यैवान्यस्य तल्लयः। नचेत् कस्यापि जीवस्य न स्याज्जन्मान्तरं क्वचित् ॥ २॥

அந்த இவ்விஷயம் ஸூத்திரத்திலுள்ள "ஆஸ்ருத்யுபக்ரமாத்" என்றதாற் சொல்லப்பட்டது.

சங்கை—வித்வானினால் அமிருதத்வமன்றோ அடையக்கூடியதாக வாகிறது. அந்த அமிருதத்வமோ வேறு தேசஞ் சென்று அடையக்கூடியதன்று. அவ்விஷயத்தில் பூதங்களை யாஸ்ரயித்தலோ, மார்க்க உபக்கிரமமோ ஏது எனின்?

உத்தரம்—இவ்விஷயத்தில் சொல்லப்படுகிறது. அநுபோஷ்ய=அவித்யாதிகளைப் போக்காது செல்லுபவனுக்கு இது (வெளிகிளம்புதலானது) சொல்லப்படுகிறது. அதாவது அவித்யாதிகளான க்லேசங்களை முற்றிலும் பொசுக்காமல் ஸகுணப்ரம்ஹோபாஸனத்தின் ஸாமர்த்தியத்தினால் ஆபேக்ஷிகமான அமிருதத்வத்தை யடையவிரும்புபவனையும் பொருட்டு இவ்வித பூதாஸ்ரயத்துவமும் மார்க்க உபக்கிரமமும் ஸம்பவிக்கலாம்,ஆஸ்ரயமில்லாமல் இந்திரியங்களுக்குக் கதியானது பொருந்தமாட்டாதன்றோ. ஆனதுபற்றித் தோஷமெதுவுமில்லை. (7) (எ—று)

நான்காவது ஆஸ்ருத்யுபக்ரமாதிகரணம் முற்றிற்று

ஸம்ஸாரவ்யபதேசாதிகரணம் 5.

(ஸூ) ததாபீதே: ஸாம்ஸாரவ்யபதேசாத் (8)

(ப—ரை) **तत्** (தத்)=தேஜஸ்ஸை ஆதியாகவுடைய அந்தப் பூதஸூக்ஷ்மமானது **आपीतेः** (ஆபீதே:)=ஸம்யக்ஞானத்தை நிமித்தமாகக்கொண்ட ஸம்ஸார மோக்ஷமானது ஏற்படும் வரையில் இருக்கிறது. ஏன்? **संसारव्यपदेशात्** (ஸம்ஸாரவ்யபதேசாத்)=அதுவரை ஸம்ஸாரத்தை (ஜனனமரணதுக்கத்தைச்) சாஸ்திரமுபதேசித்திருப்பதே அதன் காரணமாகும். (8) (எ—று)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) பூதங்களுக்குப் பரமாத்மாவினிடத்தில் ஸ்வரூபத்தினால் லயம் ஏற்படுகிறதா? அல்லது விருத்தியினால் லயம்ஏற்படுகிறதா? என்பது ஸந்தேஹம். பூதங்களுக்கு உபாதானகாரணமான பரமாத்மாவினிடத்தில் ஸ்வரூபலயஞ் சொல்

'तेजः परस्यां देवतायाम्' (छा० ६।८।६) इत्यत्र प्रकरणसामर्थ्यात्तद्यथाप्रकृतं तेजः साध्यक्षं सप्राणं सकरणग्रामं भूतान्तरसहितं प्रयतः पुंसः परस्यां देवतायां संपद्यत इत्येतदुक्तं भवति। कीदृशी पुनरियं संपत्तिः स्यादिति चिन्त्यते। तत्रात्यन्तिक एव तावत्स्वरूपप्रविलय इति प्राप्तम्। तत्प्रकृतित्वोपपत्तेः। सर्वस्य हि जनिमतो वस्तुजातस्य प्रकृतिः परा देवतेति प्रतिष्ठापितम्। तस्मादात्यन्तिकीयमविभागापत्तिरिति। एवं प्राप्ते ब्रूमः—तत्तेज आदि भूतसूक्ष्मं श्रोत्रादिकरणाश्रयभूतमाऽपीतेरा संसारमोक्षात्सम्यग्ज्ञाननिमित्तादवतिष्ठते। "योनिमन्ये प्रपद्यन्ते शरीरत्वाय देहिनः। स्थाणुमन्येऽनुसंयन्ति यथाकर्म यथाश्रुतम्" (क० ५।७) इत्यादिसंसारव्यपदेशात्। अन्यथा हि सर्वः प्रायणसमय एवोपाधिप्रत्यस्तमयादत्यन्तं ब्रह्म संपद्येत। तत्र विधिशास्त्रमनर्थकं स्याद्विद्या-

---

லுவது தான் பொருந்தும் என்பது பூர்வபக்ஷம். ஆத்மக்ஞான முள்ளவர்க்கு அவ்விதம் லயமேற்பட்டபோதிலுங் கூட ஆத்மக்ஞானமில்லாத மற்றவர்க்கு விருத்தியிலேயேதான் பூதங்களில் லயஞ் சொல்லவேண்டும். இவ்விதமில்லாவிடில் எந்த ஜீவனுக்கும் ஒருபொழுதும் வேறுஜன்மமே ஸம்பவிக்காமல் போகத்தெரியும் என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—"தேஜஸ்ஸானது பரதேவதையினிடத்தில் (லயிக்கிறது)" என்றவிடத்தில் ப்ரகரண ஸாமர்த்யத்தை யொட்டி மரித்த அந்தப்புருஷனுடைய ப்ரகிருததேஜஸ்ஸானது அத்யக்ஷ (ஜீவ) னுடன்கூடவும் ப்ராணனுடன் கூடவும் இந்திரிய ஸமூஹங்களுடன் கூடவும் வேறுபூதங்களுடன் சேர்ந்துமாகப் பரதேவதையினிடத்தில் ஸம்பத்தியை அடைகிறது என்ற இது சொல்லப்பட்டதாக வாகிறது. இந்த ஸம்பத்தியானது எத்தகையது என்பது இதுபோழ்து விசாரிக்கப்படுகிறது. அங்கு ஆத்யந்திகமாகவே உள்ள ஸ்வரூபலயந்தான் சொல்லவேண்டும் என ப்ராப்த்தமாகிறது. (தேஜஸ்முதலிய பூதங்கள்) பரமாத்மாவைக் காரணமாகக் கொண்டிருப்பதே அதன் காரணமாகும். உத்பத்தியை யடைந்த எல்லாப்பொருளுக்கும் பரமாத்மாவே காரணமாகும் என்பது முன்னர் சொல்லப்பட்டது. ஆகவே இந்த அவிபாகாபத்தியானது ஆத்யந்திகமானதே (ஸ்வரூப லயரூபமானதே) யாகும் என இவ்விதம் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகவே ஸித்தாந்தத்தைச் சொல்லுகிறோம். சுரோத்திரம் முதலிய கரணங்களுக்கு ஆஶ்ரயமாகவான தேஜஸ்ஸை ஆதியாகக் கொண்டப் பூதஸூக்ஷ்மமானது ஆபீதியேற்படும்வரை அதாவது:—ஸம்யக்ஞானத்தை நிமித்தமாகக் கொண்ட ஸம்ஸாரமோக்ஷம் வரும்வரை இருக்கவே இருக்கிறது. "தமது கர்மத்துக்குத் தக்கபடியும் தமது ஶ்ருதத்துக்குத் தக்கபடியும் சிலதேஹிகள் சரீரத்தை யடையவேண்டி யோநியை யடைகின்றனர். சிலர் விருக்ஷ ஜன்மத்தை யடைகின்றனர்" என்றதாதி ஸம்ஸாரவியபதேசஞ் காணப்படுவதே அதன் காரணமாகும். இவ்விதமில்லாவிடில் எல்லா ஜீவர்களும் சரீரத்தினின்றும் கிளம்பும் ஸமயத்திலேயே உபாதிகளுக்கு லயமேற்படுவதிலிருந்து நிர்க்குணப்ரம்ஹத்தையே யடைந்தவராக ஆகிவிடுவர். அவ்விதம் கொள்ளும் பக்ஷத்தில் விதிபோதக சாஸ்திரமும், வித்யையை (உபாஸனத்தைச்) சொல்லும்

शास्त्रं च। मिथ्याज्ञाननिमित्तश्च बन्धो न सम्यग्ज्ञानादृते विस्रंसितुमर्हति। तस्मात्तत्प्रकृतित्वेऽपि सुषुप्तप्रलयवद्बीजभावावशेषैवैषा सत्संपत्तिरिति ॥ ८ ॥

सूक्ष्मं प्रमाणतश्च तथोपलब्धेः ॥ ९ ॥

तच्चेतरभूतसहितं तेजो जीवस्यास्माच्छरीरात्प्रवसत आश्रयभूतं स्वरूपतः प्रमाणतश्च सूक्ष्मं भवितुमर्हति। तथाहि—नाडीनिष्क्रमणश्रवणादिभ्योऽस्य सौक्ष्म्यमुपलभ्यते। तत्र तनुत्वात्सञ्चारोपपत्तिः। स्वच्छत्वाच्चाप्रतीघातोपपत्तिः। अत एव च देहान्निर्गच्छन्पार्श्वस्थैर्नोपलभ्यते ॥ ९ ॥

नोपमर्देनातः ॥ १० ॥

अत एव सूक्ष्मत्वान्नास्य स्थूलस्य शरीरस्योपमर्देन दाहादिनिमित्तेनेतरत्सूक्ष्मं शरीरमुपमृद्यते ॥ १० ॥

சாஸ்திரமும் பயனற்றதாக வாகிவிடத்தெரியும். மித்யாபூதமான அக்ஞானத்தை நிமித்தமாகக் கொண்ட பந்தமானது ஸம்யக்ஞான மில்லாமல் நாசத்தை யடையவும் மாட்டாது. ஆகவே ப்ரம்ஹத்தை ப்ரகிருதியாக (காரணமாகக்) கொண்டிருப்பினுங் கூட ஸுஷுப்தியிலும் ப்ரளயத்திலும் போல பீஜபாவத்தை மிச்சமாகக் கொண்டதாகவே தான் இந்த ஸத்ஸம்பத்தியானது ஏற்படுகின்றது.

(ஸூ) ஸூக்ஷ்மம் ப்ரமாணதः ச ததோபலப்தேः (9)

(ப—ரை) வேறு பூதங்களுடன்கூடின தேஜஸ்ஸானது ஜீவன் இந்தத் தேஹத்தினின்றும் வெளிகிளம்புங்கால் **प्रमाणतश्च** (ப்ரமாணதஶ்ச)=ப்ரமாணத்தினுலும், ஸ்வரூபத்தினுலும் **सूक्ष्मम्** (ஸூக்ஷ்மம்)=வெகு நுட்பமானதாக இருப்பதுதான் பொருந்துகிறது. **तथोपलब्धेः** (ததோபலப்தேः)=அவ்விதம் அறியப்படுவதே அதன் காரணமாகும். (9) (எ—று)

பாஷ்யம்.—இந்தச் சரீரத்தினின்றும் வெளிக்கிளப்புகின்ற ஜீவனுக்கு ஆஶ்ரயமாக விருக்கின்றதும், வேறுபூதங்களுடன் கூடினதுமான அந்தத் தேஜஸ்ஸானது ஸ்வரூபத்தினுலும், ப்ரமாணத்தினுலும் ஸூக்ஷ்மமாகவாவதுதான் பொருந்துகிறது. அதாவது:—நாடியினின்றும் வெளிக்கிளம்புதல் முதலியன சொல்லப்படுவதிலிருந்து இதற்கு ஸூக்ஷ்மத்தன்மையானது அறியப்படுகிறது என்றும். அவற்றுள் சிறியதாகவிருப்பதால் ஸஞ்சாரஞ் சொல்லுவது பொருத்தமாகவாகிறது. ஸ்வச்சமாக (த்தெளிவாக) இருபது பற்றி எதனுலும் தடையின்மை பொருந்துகிறது. ஆனது பற்றியேதான் தேஹத்தினின்றும் வெளிக்கிளம்புங்கால் பக்கத்திலிருப்பவர்களா லறியமுடியாததாக விருக்கிறது. (௯) (எ—று)

(ஸூ) நோபமர்தேநாதः (10)

(ப—ரை) **अतः** (அதः)=ஸூக்ஷ்மமாக இருப்பது பற்றியேதான் **उपमर्देन** (உபமர்த்தேந)=சரீரத்துக்கு தாஹாதிரூபமான உபத்திரவமேற்படுவதனுல் இந்த ஸூக்ஷ்மசரீரமானது உபமர்தத்தை (உபத்ரவத்தை) **न** (ந)=அடைவதில்லை. (10)

अस्यैव चोपपत्तेरेष ऊष्मा ॥ ११ ॥

अस्यैव च सूक्ष्मस्य शरीरस्यैष ऊष्मा यमेतस्मिञ्शरीरे संस्पर्शेनोष्माणं विजानन्ति । तथाहि मृतावस्थायामवस्थितेऽपि देहे विद्यमानेष्वपि च रूपादिषु देहगुणेषु नोष्मोपलभ्यते जीवदवस्थायामेव तूपलभ्यत इत्यत उपपद्यते प्रसिद्धशरीरव्यतिरिक्तव्यपाश्रय एवैष ऊष्मेति । तथाच श्रुतिः—'उष्ण एव जीविष्यञ्शीतो मरिष्यन्' इति ॥ ११ ॥

६ प्रतिषेधाधिकरणम् । सू० १२–१४

प्रतिषेधादिति चेन्न शारीरात् ॥ १२ ॥

பாஷ்யம் —ஆனதுபற்றியே=ஸூக்ஷ்மமாக இருப்பதினாலேயே,ஸ்தூலமான சரீரத்தினுடைய தாஹாதிகளை நிமித்தமாகக்கொண்ட உபமர்த்தத்தினால் (உபத்ரவத்தினால்) வேறான ஸூக்ஷ்மசரீரமானது உபமர்தத்தை(உபத்ரவத்தை)அடைவதில்லை. (10) (எ—று)

(ஸூ) அஸ்யைவச உபபத்தே: ஏஷ ஊஷ்மா (11)

(ப—ரை) एष ऊष्मा (ஏஷ ஊஷ்மா)=இந்தச் சூடானது अस्यैव च (அஸ்யைவச)=இந்த ஸூக்ஷ்மசரீரத்தினுடையதே யாகும். ஏன்? उपपत्तेः (உபபத்தேः)=போதியயுக்தி இருப்பதே அதன் காரணமாகும். (11) (எ—று)

பாஷ்யம்.—இந்தஸ்தூல சரீரத்தில் தொடுகையினால் யாதொரு சூடானது அறியப்படுகிறதோ இந்தச் சூடானது இந்தஸூக்ஷ்மசரீரத்தைச் சார்ந்ததேயாகும். அதாவது:—மரணாவஸ்தையில் தேஹமிருப்பினும் ரூபம்முதலிய தேஹகுணங்கள் இருந்தபோதிலுங்கூட சூடானது காணப்படாது உயிருடனிருக்கும் நிலையிலேயே காணப்படுகிறது என்ற இந்தக் காரணத்தால் இந்தச் சூடானது ப்ரஸித்தமான (ஸ்தூல) சரீரத்தை விட வேறுபட்டதை யாஸ்ரயித்தது என்ற உபபத்தியும் (யுக்தியும்) இருக்கிறது. அவ்விதமே சுருதியும்—"சூடாகவுள்ளவன் ஜீவிப்பவன்" என்றும், "மரிப்பவன் சீதன்(குளிர்ந்தவன்)" என்றும், சொல்லியிருக்கிறது. (11)

ஐந்தாவது ஸம்ஸாரவ்யபதேசாதிகரணம் முற்றிற்று.

ப்ரதிஷேதாதிகரணம் 6.

(ஸூ) ப்ரதிஷேதாத் இதிசேத் ந சாரீராத் (12)

(ப—ரை) प्रतिषेधात् (ப்ரதிசேஷதாத்) = சரீரத்தினின்றும் ப்ராணன்களின் வெளிக்கிளம்புதலைச் சாஸ்திரம் மறுத்திருப்பதிலிருந்து ப்ரம்ஹவித்தினுடைய ப்ராணன்களுக்குத் தேஹத்தினின்றும் உத்க்ராந்தியானது கிடையாது. इति चेत् (இதிசேத்)=என்றாலோ न (ந)=அவ்விதம் சொல்லமுடியாது. ஏன்? शारीरात् (ஶாரீராத்)=சாரீரனான ஆத்மாவினிடமிருந்து இந்த உத்க்ராந்தியானது நிஷேதம் செய்

किञ्जीवादथवा देहात्प्राणोत्क्रन्तिर्निवार्यते। जीवान्निवारणं युक्तं जीवेद्देहोऽन्यथा सदा ॥ १ ॥
तप्ताश्मजलवद्देहे प्राणानां विलयः स्मृतः। उच्छ्वयत्येव देहोऽते देहात्मा विनिवार्यते ॥ २ ॥

‘अमृतत्वं चानुपोष्य’ इत्यतो विशेषणादात्यन्तिकेऽमृतत्वे गत्युत्क्रान्त्योरभावोऽभ्युपगतः। तत्रापि केनचित्कारणेनोत्क्रान्तिमाशङ्क्य प्रतिषेधति—‘अथाकामयमानो योऽकामो निष्काम आप्तकाम आत्मकामो भवति न तस्य प्राणा उत्क्रामन्ति ब्रह्मैव सन्ब्रह्माप्येति’ (बृ० ४।४।६) इत्यतः परविद्याविषयात्प्रतिषेधान्न परब्रह्मविदो देहात्प्राणानामुत्क्रान्तिरस्तीति चेत्। नेत्युच्यते। यतः शारीरादात्मन एष उत्क्रान्तिप्रतिषेधः प्राणानां न

யப்பட்டிருக்கிறதேயொழிய சரீரத்தினின்றும் உத்க்ராந்தியானது மறுக்கப்படவில்லை என்றும். (12) (எ—று)

வையாஸிக ந்யாயமாலை.

(க—வை) ப்ராணனுடைய உத்க்ராந்தியானது ஜீவனிடமிருந்து நிஷேதிக்கப்படுகிறதா? அல்லது தேஹத்தினிடமிருந்து நிஷேதிக்கப்படுகிறதா? என்பது ஸந்தேஹம். ஜீவனிடமிருந்து ப்ராணோத்க்ராந்தியை மறுப்பதுதான் பொருந்தும். அவ்விதமில்லாவிடில் தேஹமானது எப்பொழுதுமே உயிருடனேயே இருக்கவேண்டிவரும் என்பது பூர்வபக்ஷம். நன்கு சூடேறின கல்லில் விட்ட ஜலமானதுபோல தேஹத்தில் ப்ராணன்களுக்கு லயமானது சொல்லப்படுகிறது. அந்தம் (மரணம்) ஏற்பட்டதும் தேஹமானது வீங்கிவிடுகிறது. அப்பொழுது தேஹாத்மாவானது மறுக்கப்படுகிறது என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—“அமிருதத்வஞ்ச அனுபோஷ்ய” (அவித்யாதிகளான க்லேசங்களைப் போக்காமல் அமிருதத்வமானது சொல்லப்பட்டது) என்ற இந்த விசேஷணத்தினால் (அடைமொழியினால்) ஆத்யந்திகமான=அவித்யாதிக்லேசங்களற்ற அமிருதத்வத்தில் கதி, உத்க்ராந்தி இவற்றினுடைய அபாவமானது ஒப்பப்பட்டது. அவ்விடத்திலுங்கூட ஏதோ ஒருகாரணத்தினால் உத்க்ராந்தியை ஆசங்கித்து மறுக்கிறார்.

சங்கை—“பிறகு காமனாதிகளற்றவர் சொல்லப்படுகிறார். எவர் ஆப்தகாமனோ=பூர்ணாநந்தஸ்வரூபமான ஆத்மாவை அறிந்திருப்பதுபற்றி அடையப்பட்ட பரமானந்தத்தையுடையவனோ, ஆனதுபற்றி நிஷ்காமனாகிறானோ=தோற்றத்தையடையாத ஆந்தரமான வாசனைவடிவமுள்ள காமனாதிகளற்றவனாகவாகிறானோ, ஆனதுபற்றி அகாமனோ=தோற்றத்தையடைந்த பாஹ்யமான காமமற்றவனாகவுமாகிறானோ அவனுடைய ப்ராணன்கள் உத்க்ராந்தியை யடைவதில்லை. ப்ரம்ஹமாகவே இருந்துகொண்டு ப்ரம்ஹத்தை யடைகிறான்.” என்ற இந்த பரப்ரம்ஹவித்யா விஷயமான ப்ரதிஷேதத்திலிருந்து பரப்ரம்ஹவித்தினுடைய தேஹத்திலிருந்து ப்ராணன்களுக்கு உத்க்ராந்தியானது கிடையாது அன்றோ எனின்?

உத்தரம்—இல்லை யென்று சொல்லப்படுகிறது. இந்த உத்க்ராந்தி ப்ரதிஷேதமானது சாரீரனான ஆத்மாவினிடமிருந்து செய்யப்படுகிறதேயொழிய சரீ

शरीरात्। कथमवगम्यते 'न तस्मात्प्राणा उत्क्रामन्ति' इति शाखान्तरे पञ्चमीप्रयोगात्। संबन्धसामान्यविषया हि षष्ठी शाखान्तरगतया पञ्चम्या संबन्धविशेषे व्यवस्थाप्यते। तस्मादिति च प्राधान्यादभ्युदयनिःश्रेयसाधिकृतो देही संबध्यते न देहः। न तस्मादुच्चिक्रमिषोर्जीवात्प्राणा अपक्रामन्ति सहैव तेन भवन्तीत्यर्थः ॥ १२ ॥

सप्राणस्य च प्रवसतो भवत्युत्क्रान्तिर्देहादित्येवं प्राप्ते प्रत्युच्यते—

स्पष्टो ह्येकेषाम् ॥ १३ ॥

न तदस्ति यदुक्तं परब्रह्मविदोऽपि देहादस्त्युत्क्रान्तिरुत्क्रान्तिप्रतिषेधस्य देह्यपादानत्वादिति। यतो देहापादान एवोत्क्रान्तिप्रतिषेध एकेषां समाम्नातॄणां स्पष्ट उपलभ्यते। तथाहि—आर्तभागप्रश्ने 'यत्रायं पुरुषो म्रियत उदस्मात्प्राणाः क्रामन्त्याहो नेति' (बृ०

ரத்தினிட மிருந்தன்றும். எவ்விதமறியப்படுகிறது எனின்? "அதனிடமிருந்து ப்ராணன்கள் வெளிக்கிளப்புவதில்லை" என்ற விடத்தில் பஞ்சமீநிர்த்தேசம் (ஐந்தாம் வேற்றுமையின் ப்ரயோகம்) செய்யப்பட்டிருப்பதே அதன் காரணமாகும். பொதுப்படையான ஸம்பந்தத்தைக் கூறும் ஆறும்வேற்றுமையானது வேறுசாகையிலுள்ள ஐந்தாம் வேற்றுமையினல் ஸம்பந்தவிசேஷத்தில் நிலைநாட்டப்படுகிறது. "அதனிடமிருந்து" என்பது ப்ரதானமாக இருப்பதுபற்றி அப்யுதயம்=கர்மஜன்யமானபலன், நி:ஃஸ்ரேயஸம்=மோக்ஷம் இவற்றில் அதிகாரம்பெற்ற ஜீவன் ஸம்பந்தத்தை யடைகிறனேயொழிய தேஹமில்லை. உயரக்கிளம்ப வெண்ணங்கொண்ட அந்த ஜீவனிடமிருந்து ப்ராணன்கள் விலகுவதில்லை அவனுடன் கூடவே இருக்கின்றனஎன்பது அதன் பொருள். (12) (எ-று)

அவதாரிகாபாஷ்யம்.—ப்ராணனுடன் கூட வெளிக் கிளம்புகின்றவனுக்கு தேஹத்தினிடமிருந்து உத்க்ராந்தியானது ஏற்படுகிறது என ப்ராப்தமாகவே சொல்லப்படுகிறது—

(ஸூ) ஸ்பஷ்டோஹி ஏகேஷாம். (13)

(ப-ரை) **एकेषाम्** (ஏகேஷாம்)=சிலசாகிகளுக்குத் தேஹத்தினிடமிருந்து உத்க்ராந்தி ப்ரதிஷேதமானது **स्पष्टो हि** (ஸ்டஷ்டோ**ஹி**)=தெளிவாகவன்றே காணப்படுகிறது. (13) (எ-று)

பாஷ்யம்.—பரப்ரம்ஹவித்துக்குப் கூட தேஹத்தினிடமிருந்து(ப்ராணனுக்கு) உத்க்ராந்தி யேற்படுகிறது உத்க்ராந்திப்ரதிஷேதமானது தேஹியி (ஜீவ) னிடமிருந்து சொல்லப்பட்டிருப்பதே அதன் காரணமென யாதொன்று சொல்லப்பட்டதோ அது பொருந்தாது. என்? தேஹத்தினிடமிருந்தே உத்க்ராந்தி ப்ரதிஷேதமானது சில சாகைக்காரர்களுக்குத் தெளிவாகக் காணப்படுவதாலென்க. அதாவது:—(ப்ருஹதாரண்யகத்தில்) ஆர்த்தபாகர் என்ற மஹருஷியின் ப்ரஶ்னத்தில் "எப்பொழுது இந்தப் புருஷன் மறிக்கின்றனே அப்பொழுது இவனிடமிருந்து ப்ராணன்கள் வெளிக்கிளப்புகின்றனவா? அல்லது இல்லையா?" என்ற விடத்தில்

३।२।११) इत्यत्र 'नेति होवाच याज्ञवल्क्यः' (बृ० ३।२।११) इत्यनुत्क्रान्तिपक्षं परिगृह्य न तर्ह्ययमनुत्क्रान्तेषु प्राणेषु म्रियत इत्यस्यामाशङ्कायाम् 'अत्रैव समवनीयन्त' इति प्रविलयं प्राणानां प्रतिज्ञाय तत्सिद्धये 'स उच्छ्वयत्याध्मायत्याध्मातो मृतः शेते' (बृ० ३।२।११) इति सशब्दपरामृष्टस्य प्रकृतस्योत्क्रान्त्यवधेरुच्छ्वयनादीनि समामनन्ति। देहस्य चैतानि स्युर्न देहिनः। तत्सामान्यात् 'न तस्मात्प्राणा उत्क्रामन्त्यत्रैव समवनीयन्ते' इत्यत्राप्यभेदोपचारेण देहापादानस्यैवोत्क्रमणस्य प्रतिषेधः। यद्यपि प्राधान्यं देहिन इति व्याख्येयं येषां पञ्चमीपाठः। येषां तु षष्ठीपाठस्तेषां विद्वत्संबन्धिन्युत्क्रान्तिः प्रतिषिध्यत इति प्राप्तोत्क्रान्तिप्रतिषेधार्थत्वादस्य वाक्यस्य देहापादानैव सा प्रतिषिद्धा भवति, देहादुत्क्रान्तिः प्राप्ता न देहिनः। अपिच 'चक्षुष्टो वा मूर्ध्नो वाऽन्येभ्यो वा शरीरदेशेभ्यस्तमुत्क्रामन्तं प्राणोऽनूत्क्रामति प्राणमनूत्क्रामन्तं सर्वे प्राणा अनूत्क्रामन्ति' (बृ० ४।

"இல்லை யென்று சொல்லுகிறார் யாக்ஞ்யவல்க்யர்" என்பதாய் வெளிக்கிளம்புவதில்லை என்ற பக்ஷத்தை ஏற்றுக் கொண்டு "அங்ஙனமாயின் ப்ராணன்கள் வெளிக்கிளம்பாவிடில் இவன் மறிப்பதில்லை என்ற ஆசங்கை ப்ராப்த்தமாகவே "அவ்விடத்திலேயே லயத்தை யடைகின்றன" என்பதாய் ப்ராணன்களுடைய லயத்தை ப்ரதிக்ஞைசெய்து அதுஸித்திக்கவேண்டி "அது வீங்குகிறது அழியவாரம்பிக்கிறது அழிந்து செத்துவிடுகிறது" என்பதாய் "ஸ:"=அது என்ற சப்தத்தாற் சொல்லப்பட்டதும் உத்க்ராந்திக்கு அவதியாக (எல்லையாக) உள்ளதுமான ப்ரகிருதமான பொருளுக்கு வீங்குதல் முதலிய தர்மங்களைச் சொல்லுகிறது. இந்தத் தர்மங்கள் தேஹத்துக்குத் தான் ஸம்பவிக்குமே யொழிய தேஹிக்கு (ஜீவனுக்கு) ஸம்பவிக்காது. எவர்களுக்கு **न तस्मात्प्राणाः** (நதஸ்மாத் ப்ராணா:) என்பதாய் பஞ்சமீபாடம் காணப்படுகிறதோ அவர்கள் பாடப்படி' தேஹிக்கு ப்ராதான்யம் கொள்ளவேண்டுவது அவஶ்யமாகவிருப்பது உண்மைதானாயினும் சொல்லப்பட்ட சுருதியுடன் இந்தப் பாடத்துக்கும் பொருள் ஒன்றாகவிருப்பதால் "அதனிடமிருந்து ப்ராணன்கள் வெளிக்கிளம்புவதில்லை இதனிடத்திலேயே லயித்துவிடுகின்றன" என்ற விடத்திலுங்கூட அபேத உபசாரமுறையால் தேஹத்தினிடமிருந்தேதான் உத்க்ராந்தியானது மறுக்கப்படுவதாக ஏற்படுகிறது. எவர்களுக்கு **न तस्य प्राणाः** (நதஸ்யப்ராணா:) என்பதாய் ஷஷ்டீபாடமானது காணப்படுகிறதோ அவர்களுக்கு வித்வானை (ஆத்மக்ஞானியைப்) பற்றிய உத்க்ராந்தியானது மறுக்கப்படுகிறது என்பதுபற்றி ப்ராப்தமான உத்க்ராந்தியை மறுப்பதற்கு வேண்டி இந்த வாக்கியம் ஏற்பட்டிருப்பதால் தேஹத்தினிடமிருந்தேதான் அந்த உத்க்ராந்தியானது மறுக்கப்பட்டதாக வாகிறது. தேஹத்தினிடமிருந்து உத்க்ராந்தியானது ப்ராப்த்தமாயிற்றே யொழிய ஜீவனிடமிருந்தன்று.

மேலும் "கண்ணிலிருந்தோ தலையிலிருந்தோ வேறுசரீராவயவத்திலிருந்தோ வெளிக்கிளம்பும் அவனை ப்ராணன் பின்தொடருகிறது. தொடர்ந்து செல்லுகின்ற ப்ராணனை எல்லாப்ராணன்களும் பின்தொடருகின்றன" என இவ்விதம் அவித்வத்விஷயமான உத்க்ரமணத்தை விரிவாகச் சொல்லி ஸம்ஸாரம் வரும் முறை

४। २) इत्येवमविद्वद्विषयं सप्रपञ्चमुत्क्रमणं संसारगमनं च दर्शयित्वा 'इति नु कामयमानः' (बृ० ४।४।६) इत्युपसंहृत्याविद्वत्कथाम् 'अथाकामयमानः' (बृ० ४।४।६) इति व्यपदिश्य विद्वांसं यदि तद्विषयेऽप्युत्क्रान्तिमेव प्रापयेदसमञ्जस एव व्यपदेशः स्यात्। तस्मादविद्वद्विषये प्राप्तयोर्गत्युत्क्रान्त्योर्विद्वद्विषये प्रतिषेध इत्येवमेव व्याख्येयं व्यपदेशार्थवत्त्वाय। नच ब्रह्मविदः सर्वगतब्रह्मात्मभूतस्य प्रक्षीणकामकर्मण उत्क्रान्तिर्गतिर्वोपपद्यते निमित्ताभावात्। 'अत्र ब्रह्म समश्नुते' इति चैवञ्जातीयकाः श्रुतयो गत्युत्क्रान्त्योरभावं सूचयन्ति ॥ १३ ॥

स्मर्यते च ॥ १४ ॥

स्मर्यतेऽपि च महाभारते गत्युत्क्रान्त्योरभावः—'सर्वभूतात्मभूतस्य सम्यग्भूतानि पश्यतः। देवा अपि मार्गे मुह्यन्त्यपदस्य पदैषिणः' इति। ननु गतिरपि ब्रह्मविदः सर्वगतब्रह्मात्मभूतस्य स्मर्यते 'शुकः किल वैयासकिर्मुमुक्षुरादित्यमण्डलमभिप्रतस्थे पित्रा

யைக் காண்பித்து "இவ்விதமன்றோ காமனையுள்ளவனாகிறான்" என்றதால் அவித்வானுடைய கதையை முடித்துக்கொண்டு "பிறகு காமனையற்றவன் அடையும் முறை சொல்லப்படுகிறது" என வித்வானை (க்ஞானியை) உபதேசித்து அவன் விஷயத்திலும் உத்க்ராந்தியையே சொல்லுமானால் இந்த உபதேசம் (வித்வத்விஷயமான தனித்த உபதேசம்) பொருத்தமற்றதாகவே ஆகிவிடும். ஆகவே அத்தகைய உபதேசத்தைப் பயனுள்ளதாக வாக்கவேண்டி அவித்வத் விஷயத்தில் கிடைத்த கதி உத்க்ராந்தி இவைகளுக்கு வித்வத்விஷயத்தில் ப்ரதிஷேதம் (மறுப்பு) சொல்லப்படுகிறது என்றே வியாக்கியானஞ் செய்துகொள்ளவேண்டுவதாக வாகிறது. ஸர்வகதப்ர்ப்ஹாத்மபாவத்தை யடைந்தவரும் காமம், கர்மம் இவையற்றவருமான ப்ரம்ஹவித்துக்குக் கதியோ உத்க்ராந்தியோ ஸம்பவிக்கமுடியாது. நிமித்தமில்லாதிருப்பதே அதன் காரணமாகும். "இங்கு ப்ரம்ஹத்தை யடைகிறான்" என்ற இம்மாதிரியான ஶ்ருதிகள் கதி உத்க்ராந்தி இவற்றின் அபாவத்தைத் தெரிவிக்கின்றன. (13) (எ-று)

(ஸூ) ஸ்மர்யதே ச (14)

(ப-ரை) **स्मर्यते च** (ஸ்மர்யதே ச)=ப்ரம்ஹவித்துக்குக் கதிஉத்க்ராந்தி இரண்டுமில்லை யென்பது மஹாபாரதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. (14) (எ-று)

பாஷ்யம்.—மஹாபாரதத்திலுங்கூட "எல்லாப்ராணிகளுக்கும் ஆத்மாவாகவானவனும் எல்லாப்ராணிகளையும் ஆத்மாவாகவே பார்ப்பவனும் ப்ராப்யமான வேறு பதம் (ஸ்தானம்) அற்றவனுமான ப்ரப்ஹவித்தினுடைய மார்க்கவிஷயத்தில் பதத்தை யறியவிருப்பமுள்ள தேவர்களுங்கூட மோஹத்தை யடைகின்றனர்." (அவர்க்கு மார்க்கமெதுவுமில்லாததால் அவர்களின் மார்க்கத்தை யறிய விருப்பங்கொண்ட தேவர்கள் மோஹத்தை யடைந்தவராகின்றனர் என்பது கருத்து) என்றதால் ப்ரப்ஹவித்துக்கு கதி உத்க்ராந்தி இவற்றின் அபாவமானது சொல்லப்பட்டிருக்கிறது.

चानुगम्याहूतो भो इति प्रतिशुश्राव' इति। न। सशरीरस्यैवायं योगबलेन विशिष्टदेशप्राप्तिपूर्वकः शरीरोत्सर्ग इति द्रष्टव्यम्। सर्वभूतदृश्यत्वाद्युपन्यासात्। नह्यशरीरं गच्छन्तं सर्वभूतानि द्रष्टुं शक्नुयुः। तथाच तत्रैवोपसंहृतम्—'शुकस्तु मारुताच्छीघ्रां गतिं कृत्वाऽन्तरिक्षगः। दर्शयित्वा प्रभावं स्वं सर्वभूतगतोऽभवत्' इति। तस्मादभावः परब्रह्मविदो गत्युत्क्रान्त्योः। गतिश्रुतीनां तु विषयमुपरिष्टाद्व्याख्यास्यामः ॥ १४ ॥

७ वागादिलयाधिकरणम्। सू० १५ ॥

तानि परे तथाह्याह ॥ १५ ॥

ज्ञस्य वागादयः स्वस्वहेतौ लीनाः परेऽथवा। गताः कला इति श्रुत्या स्वस्वहेतुषु तल्लयः ॥ १ ॥

नद्यब्धिलयसाम्योक्तेर्विद्वद्दृष्ट्या लयः परे। अन्यदृष्टिपरं शास्त्रं गता इत्याद्युदाहृतम् ॥ २ ॥

சங்கை—ஸர்வகதமான ப்ரம்ஹத்தினிடத்தில் ஆத்மபாவத்தை யடைந்த ப்ரம்ஹவித்துக்குங்கூட கதிபானது ஸ்மிருதியில் காணப்படுகிறது. அதாவது:—"வியாஸபுத்திரரும் முமுக்ஷுவுமான சுகரோவெனில் ஆதித்யமண்டலத்தைக் குறித்துக்கிளம்பினர். பிதாவினல் பின்தொடரப்பட்டு போ:! (அடே!) என அழைக்கப்பட்டவராய் பதிலுரைத்தார்" என்றும் எனின்?

உத்தரம்—அவ்விதமில்லை. சரீரத்துடன் கூடினவராகவே உள்ள இந்தச் சுகருக்கு யோகத்தின் வலுவினல் சிறந்த தேசப்ராப்த்தியை முன்னிட்டு சரீரத்தை விடுதல் சொல்லப்பட்டது எனக் கண்டுகொள்ள வேண்டும். ஸர்வபூததிருஶ்யத்வம் முதலியன சொல்லப்பட்டிருப்பதே அதன் காரணமாகும். சரீரமில்லாது போகும் அவரை எல்லாப்ராணிகளும் பார்க்கச் சக்தியுடையவராகாரன்றே. அவ்விதம் அவ்விடத்திலேயே முடிவில் சொல்லப்பட்டுமிருக்கிறது. அதாவது:—சுகரோ வாயுவின் ஜயத்தினல் சீக்கிரமான கதியைச் செய்து அந்தரிக்ஷத்தை யடைந்து தனது யோகமஹிமையைக் காண்பித்து எல்லாமாகவான ப்ரம்ஹபாவத்தை யடைந்தவரானர்." என்றும். ஆனதுபற்றிப் பரப்ரம்ஹவித்துக்கு கதி உத்க்ராந்தி இவற்றின் அபாவமானது ஸித்திக்கிறது. கதியைச் சொல்லும் சுருதிகளுக்கு விஷயமின்னதென்பதைப் பின்னர் வியாக்கியானஞ் செய்யப்போகிறோம். (14)

ஆருவது ப்ரதிஷேதாதிகரணம் முற்றிற்று.

வாகாதிலயாதிகணம் 7.

(ஸூ) தாநி பரே ததாஹி ஆஹ (15)

(ப—ரை) **तानि** (தாநி)=அந்த வாகாதி இந்திரியங்களும் பூதங்களும் **परे** (பரே)= பரமாத்மாவினிடத்தில் லயத்தை யடைகின்றன. **तथाह्याह** (ததாஹ்யாஹ)=அவ்விதமே யன்றோ சுருதியும் சொல்லுகிறது. (15) (எ—று)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) ப்ரம்ஹவித்தினுடைய வாகாதிகளான இந்திரியங்கள் தத்தமது

तानि पुनः प्राणशब्दोदितानीन्द्रियाणि भूतानि च परब्रह्मविदस्तस्मिन्नेव परस्मिन्नात्मनि प्रलीयन्ते। कस्मात्। तथाह्याह श्रुतिः—'एवमेवास्य परिद्रष्टुरिमाः षोडश कलाः पुरुषायणाः पुरुषं प्राप्यास्तं गच्छन्ति' (प्रश्न० ६।५) इति। ननु 'गताः कलाः पञ्चदश प्रतिष्ठाः' (मु० ३।२।७) इति विद्वद्विषयैवापरा श्रुतिः परस्मादात्मनोऽन्यत्रापि कलानां प्रलयमाह स्म। न। सा खलु व्यवहारापेक्षा, पार्थिवाद्याः कलाः पृथिव्यादीरेव स्वप्रकृतीरपियन्तीति। इतरा तु विद्वत्प्रतिपत्त्यपेक्षा, कृत्स्नं कलाजातं परब्रह्मविदो ब्रह्मैव संपद्यत इति। तस्माददोषः ॥ १५ ॥

காரணங்களில் லயத்தை யடைகின்றனவா? அல்லது பரமாத்மாவினிடத்தில் லயத்தை யடைகின்றனவா? என்பது ஸந்தேஹம். "வாகாதிகளான பதினைந்து கலைகளும் ப்ரதிஷ்டைகளை=தமது காரணங்களை யடைகின்றன" என்ற சுருதி யிருப்பதால் அவற்றுக்குத் தத்தமது காரணங்களிற்றான் லயம் சொல்லவேண்டும் என்பது பூர்வபக்ஷம். இவ்விதமில்லை. ஏன்? நதிகள் ஸமுத்திரத்தில் லயமடைவது எவ்விதமோ இவ்விதமே இதுவுமாகும் என ஸமுத்திரத்திலேற்படும் லயத்துக்கு ஸாம்யம் சொல்லியிருப்பதால் ஞானியின் திருஷ்டிப்படி பரமாத்மாவினிடத்தில் தான் அவற்றுக்கு லயமேற்படுகிறது. "கதா: கலா:" என்றதாதி உதாஹிருதமான சாஸ்திரமானது பிறர்திருஷ்டியை யொட்டி ஏற்பட்டதாகும். (எ—று)

பாஷ்யம்.—ப்ராணசப்தத்தால் சொல்லப்பட்ட பரப்ரம்ஹவித்தினுடைய அந்த இந்திரியங்களும் பூதங்களும் அதேபரமாத்மாவினிடத்தில் லயத்தையடைகின்றன. ஏன்? அவ்விதமேயன்றோ சுருதி சொல்லுகிறது. அதாவது "(எவ்விதம் நதிகள் ஸமுத்திரத்தை யடைந்து லயிக்கின்றனவோ) இவ்விதமே நாலாபக்கத்திலும் ப்ரம்ஹத்தைப் பார்க்கின்றவருடைய, புருஷனிடத்தில் (ஆத்மாவினிடத்தில்) கல்பிக்கப்பட்ட இந்தப் (1) பதினைந்து கலைகளும் புருஷனை (க்ஞேயமானப்ரப்ஹத்தை) யடைந்து லயத்தை யடைகின்றன" என்றும்.

சங்கை—"பதினைந்துகலைகளும் தனது காரணங்களை (ப்ருதிவ்யாதிகளை) யடைந்தன" என்ற க்ஞானியை விஷயமாகக் கொண்ட வேறுஸ்ருதியானது கலைகளுக்குப் பரமாத்மாவைக் காட்டிலும் வேறிடத்திலுங் கூட லயத்தைத் சொல்லுகின்றதன்றோ எனின்?

உத்தரம்—அவ்விதமில்லை. அந்த ஸ்ருதியோவெனில் வ்யவஹாரதசையை யபேக்ஷித்தது. பார்த்திவாதிகளான கலைகள் ப்ரதிவ்யாதிகளான தனது காரணங்களிலேயே லயத்தையடைகின்றன என்பது பொருள். வேறுசுருதியோவெனில் வித்வானுடைய ப்ரதிபத்தியை (க்ஞானத்தை) அபேக்ஷித்தது. பரப்ரம்ஹவித்துனுடைய கலைகள் முழுவதும் ப்ரம்ஹத்தையே அடைகின்றன வென்றும். ஆகவே தோஷமெதுவு மில்லை. (15) (எ—று)

ஏழாவது வாகாதிலயாதிகரணம் முற்றிற்று.

---

(1) கர்மேந்திரியங்கள் ஐந்து, க்ஞானேந்திரியங்கள் ஐந்து, ப்ராணன்கள் ஐந்து, ஆகியபதினைந்து கலைகளும் என்றும். இவ்விடத்தில் மனத்தைப் பிராணனுடன் சேர்த்துப் பதினைந்தாக வுபதேசிக்கப்பட்டது.

८ अविभागाधिकरणम् । सू० १६

अविभागो वचनात् ॥ १६ ॥

तल्लयश्शक्तिशेषेण निश्शेषेणाथवात्मनि । शक्तिशेषेण युक्तोऽस्यान्ज्ञानिष्वेतदीक्षणात् ॥ १ ॥

नामरूपविभेदोक्तेर्निःशेषेणैव तल्लयः । अज्ञे जन्मान्तरार्थन्तु शक्तिशेषत्वमिष्यते ॥ २ ॥

स पुनर्विदुषः कलाप्रलयः किमितरेषामिव सावशेषो भवत्याहोस्विन्निरवशेष इति । तत्र प्रलयसामान्याच्छक्त्यवशेषताप्रसक्तौ ब्रवीति– अविभागापत्तिरेवेति । कुतः- वचनात् । तथाहि कलाप्रलयमुक्त्वा वक्ति—'भिद्येते तासां नामरूपे पुरुष इत्येवं प्रोच्यते स एषोऽकलोमृतो भवति' (प्र० ६ । ५) इति । अविद्यानिमित्तानां च कलानां न विद्यानिमित्ते प्रलये सावशेषत्वोपपत्तिः । तस्मादविभाग एवेति । १६ ॥

அவிபாகாதிகரணம் 8.

(ஸூ) அவிபாகோ வசனுத் (17)

(ப—ரை) வித்வானுக்குச் சொல்லப்படும் கலாப்ரளயமானது **अविभागः** (அவிபாக:)=ஸ்வரூபத்துடன் அபேதத்தையே அடைவதாகும். ஏன்? **वचनात्** (வசனுத்)=சுருதியிருப்பதே அதன் காரணமாகும். (16) (எ—று)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) கலைகளின் லயமானது சக்திஸேஷமாக ஏற்படுகிறதா? அல்லது அந்தலயம் சக்தியும் எஞ்ஜி இராமலிருக்கும்படி ஆத்மாவினிடத்தில் ஏற்படுகிறதா? என்பது ஸந்தேஹம். அக்ஞானிகளிடத்தில் சக்திசேஷமான லயமே காணப்படுவதால் சக்திசேஷமான லயஞ்சொல்லுவதுதான் பொருத்தமானது என்பது பூர்வபக்ஷம். நாமரூபங்களின் நாசஞ்சொல்லப் பட்டிருப்பதிலிருந்து நிஸ்ஸேஷமாகவே (சக்தியின் மிச்சமில்லாமலேதான்) அவற்றின் லயம் சொல்லவேண்டும். அக்ஞானியினிடத்தில் வேறுஜன்மமேற்படுவதற்கு வேண்டி சக்தியின் சேஷமானது ஒப்பப்படுகிறது என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—வித்வானுக்குச் சொல்லிய அந்தக் கலாப்ரளயமானது மற்றவர்களுக்குப் போல சக்தியை மிச்சமாகக்கொண்டதாக ஏற்படுகிறதா? அல்லது எவ்வித மிச்சமுமில்லாததாக ஏற்படுகிறதா? எனின் அவ்விஷயத்தில் வித்வானின் கலாப்ரளயத்திலும் ப்ரளயத்வம் என்பது பொதுவாகவிருப்பதால் பக்திக்கு மீதமானது ப்ராப்தமாகவே அபேதப்ராப்தியேதான் சொல்லவேண்டுமெனச் சொல்லுகிறார். ஏன்? வசனமிருப்பதாலென்க அதாவது:—கலைகளின் லயத்தைச் சொல்லி "அக்கலைகளின் நாமரூபங்கள் நாசமடைகின்றன. புருஷனென்றே சொல்லப்படுகிறது. அந்த இந்தப்புருஷன் கலைகளற்றவனாகவும் அமிருதனாகவும் ஆகிறான்" என்று சொல்லுகிறது என்றும். அவித்யையை நிமித்தமாகக் கொண்ட கலைகளுக்கு வித்யையை நிமித்தமாகக் கொண்ட லயத்தில் மிச்சமேற்படுவதாகச் சொல்லுவது பொருந்தாது. ஆனதுபற்றி அபேதப்ராப்தியேதான் சொல்லவேண்டும்.

எட்டாவது அவிபாகாதிகரணம் முற்றிற்று.

९ तदोकोऽधिकरणम् । सू० १७

तदोकोऽग्रज्वलनं तत्प्रकाशितद्वारो विद्यासामर्थ्यात्तच्छेष-गत्यनुस्मृतियोगाच्च हार्दानुगृहीतः शताधिकया ॥ १७ ॥

अविशेषो विशेषो वा स्यादुत्क्रान्तेरुपासितुः । हृत्प्रद्योतनसाम्योक्तेरविशेषोऽन्यनिर्गमात् ॥ १ ॥
मूर्धन्ययैव नाड्यासौ व्रजेन्नाडीविचिन्तनात् । विद्यासामर्थ्यतश्चापि विशेषोऽस्त्यन्यदर्शनात् ॥ २ ॥

தத்தோகோதிகரணம் 9.

(ஸூ) தத்தோகோக்ரஜ்வலனம் தத்ப்ரகாசிதத்வாரோ வித்யாஸாமர்த்யாத் தச்சேஷகத்யநுஸ்மிருதியோகாத் ச ஹார்தாநுக்ருஹீத: சதாதிகயா (17)

(ப—ரை) **तदोकोऽग्रज्वलनम्** (தத்தோகோக்ரஜ்வலனம்)=**तत्** (தத்) = உபஸம்ஹாரஞ்செய்யப்பட்ட வாகாதிகரணஸமூஹங்களை யுடையவனும், உயரக்கிளம்ப வெண்ணமுள்ளவனுமான அந்த விக்ஞானாத்மாவினுடைய **ओकः** (ஓகஃ)=ஆயதனமான ஹிருதயத்தினுடைய **अग्र** (அக்ர)=நுனியின் **ज्वलनम्** (ஜ்வலனம்)=ப்ரகாசமானது யாதுண்டோ **तत्प्रकाशितद्वारः** (தத்ப்ரகாசிதத்வாரஃ)=அதனால் பிரகாசப்படுத்தப்பட்ட வெளிக்கிளம்பும் வழியை யுடையவனாக உபாஸகன் மூர்த்த(தலையிலுள்ள)ஸ்தானத்திலிருந்தே வெளியேறுகிறான். ஏன்? **विद्यासामर्थ्यात्** (வித்யாஸாமர்த்யாத்)=ஹிருதயத்திலுள்ள வித்யையின் ஸாமர்த்தியத்தினால் என்றும். **तच्छेषगत्यनुस्मृतियोगाच्च** (தத்சேஷகத்யநுஸ்மிருதியோகாத் ச)=ஹார்த்தவித்யைக்கு அங்கமாகவான ஸுஷும்நாநாடியானது கதியையும் பொருட்டு உபதேசிக்கப்பட்டிருப்பதும் அதனுடைய த்யானம் சொல்லப்பட்டிருப்பதுமே அதன் காரணமாகும். ஆகவே உபாஸகனான ஜீவன் **हार्दानुगृहीतः** (ஹார்தாநுக்ருஹீதஃ)=ஹிருதயத்தி லுபாஸிக்கப்பட்ட பரமாத்மாவினால் அனுக்கிரஹிக்கப்பட்டவனாய் **शताधिकया** (ஶதாதிகயா)=நூற்றொராவது ஸுஷும்நாநாடியினால் செல்லுகிறான். (17)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) உபாஸகனுடைய உத்க்ராந்திக்கு யாதானும் விசேஷமில்லையா? அல்லது விசேஷமுண்டா? என்பது ஸந்தேஹம். ஹிருதயத்தின் ப்ரகாசமானது ஸமமாகச் சொல்லியிருப்பதால் உபாஸனம் செய்யாதவனுடைய உத்க்ராந்தியைக் காட்டிலும் உபாஸகனுடைய உத்க்ராந்தியில் விசேஷமெதுவுமில்லை என்பது பூர்வபக்ஷம். இந்த உபாஸகன் நாடியைச் சிந்தித்தலாலும், வித்யையின் (உபாஸனத்தின்) ஸாமர்த்தியத்தினாலும் தலையிலுள்ள ஸுஷும்நாநாடியின் வழியாகவே செல்லுகிறான். ஆகவே உபாஸகனாக இல்லாதவனிடத்தில் காணப்படுவதைக் காட்டிலும் உபாஸகனுக்கு விசேஷமேற்படத்தான் செய்கிறது என்பது **ஸித்தாந்தம்**. (எ—று)

समाप्ता प्रासङ्गिकी परविद्यागता चिन्ता । संप्रति त्वपरविद्याविषयामेव चिन्तामनुवर्तयति । समाना चासृत्युपक्रमाद्विद्वदविदुषोरुत्क्रान्तिरित्युक्तं तमिदानीं सृत्युपक्रमं दर्शयति । तस्योपसंहृतवागादिकलापस्योच्चिक्रमिषतो विज्ञानात्मन ओक आयतनं हृदयम् । 'स एतास्तेजोमात्राः समभ्याददानो हृदयमेवान्ववक्रामति' इति श्रुतेः । तदग्रप्रज्वलनपूर्विका चक्षुरादिस्थानापादाना चोत्क्रान्तिः श्रूयते—'तस्य हैतस्य हृदयस्याग्रं प्रद्योतते तेन प्रद्योतेनैष आत्मा निष्क्रामति चक्षुष्टो वा मूर्ध्नो वान्येभ्यो वा शरीरदेशेभ्यः' (बृ० ४ । ४ । २) इति । सा किमनियमेनैव विद्वदविदुषोर्भवत्यथास्ति कश्चिद्विदुषो विशेषनियम इति विचिकित्सायां श्रुत्यविशेषादनियमप्राप्तावाचष्टे—समानेऽपि हि विद्वदविदु-

---

பாஷ்யம்.—ப்ரஸங்காகதமான பரப்ரம்ஹ வித்யையைச் சார்ந்தவிசாரமானது முடிந்து விட்டது. இப்பொழுதோ வெனில் ஸகுணப்ரம்ஹோபாஸன விஷயமான விசாரத்தையே தொடருகிறார். வித்வானுக்கும் அவித்வானுக்கும் மார்க்கமாரம்பிக்கும்வரை உத்க்ராந்தியானது ஸமானமானது என்று சொல்லப்பட்டது. அதேமார்க்கத்தின் உபக்கிரமத்தை இப்பொழுது காண்பிக்கிறார். அவனுடைய= ஒடுக்கிக்கொள்ளப்பட்ட வாக்முதலியகரணஸமூஹத்தை யுடையவனும் ஊ்யரக்கிளம்பவெண்ணமுள்ளவனுமான உபாஸகஜீவனுடைய, "அவன் இந்தத்தேஜோமாத்திரைகளை (ஸூக்ஷ்மநிலையை யடைந்த வாகாதி இந்திரியங்களை) நன்கு எடுத்துக்கொண்டவனாய் ஹிருதயத்தையே அடைகிறான்" என்ற ஸ்ருதியினால் சொல்லப்பட்ட ஓகஸ்ஸானது=ஆயதனமான ஹிருதயமானது யாதுண்டோ அதனுடைய அக்ரத்தின் (நுனியின்) ஜ்வலனத்தை (ப்ரகாசத்தை) முன்னிட்டு சக்ஷுஸ் முதலிய கரணகோளகத்திலிருந்து உத்க்ராந்தியானது சுருதியில் சொல்லப்படுகிறது. அதாவது: அந்த விக்ஞானாத்மாவினுடைய ஹிருதயத்தின் அக்ரமானது=நாடீமுகமானது ப்ரகாசத்தையடைகிறது. அந்தப்ரகாசத்துடன் இந்த ஆத்மாவானவன் கண்ணிலிருந்தோ, தலையிலிருந்தோ வெளியேறுகிறான்" என்றும். அந்த உத்க்ராந்தியானது நியமமெதுவுமில்லாமல்வித்வான் (உபாஸகன்) அவித்வான் (உபாஸனமில்லாதவன்) இருவர்க்கும் ஏற்படுகிறதா? அல்லது:—வித்வானுக்கு யாதானுமொரு விசேஷநியமமுண்டா? என ஸந்தேஹமுதயமாகுங்கால் சுருதியில் விசேஷமெதுவும் காணப்படாமையால் நியமமெதுவுமில்லை என ப்ராப்த்தமாகவே சொல்லுகிறார்—வித்வான் அவித்வான் இருவர்க்கும் ஹிருதயத்தின் அக்ரப்ரகாசனமும், அதனால் பிரகாசப்படுத்தப்பட்ட வழியுள்ளதன்மையும் ஸமானமாக இருந்தபோதிலுங்கூட வித்வானானவன் * தலையிலுள்ள ஸ்தானத்திலிருந்து வெளியேறுகிறான். உபாஸனம் செய்யாதவர் வேறுஸ்தானங்களினின்றும் வெளியேறு

---

* ஸுஷும்னை என்ற நாடியானது ஹிருதயத்தினின்றும் வெளிக்கிளம்பி வலது கண், தாலு, கண்டத்தினுள், ஸ்தனம், நாஸிகை இவற்றின் நடுவிலுள்ளவிடத்தின் வழியாக ப்ரம்ஹரந்திரத்தையடைந்ததாய்க் கொண்டு சூரியகிரணங்களுடன்ஒன்றுபட்டதாகவாகி உபாஸகனுக்கு பரம்ஹலோகத்தை யடைவதற்கு வழியாக வாகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

षोर्हृदयाग्रप्रद्योतने तत्प्रकाशितद्वारत्वे च मूर्धस्थानादेव विद्वान्निष्क्रामति स्थानान्तरेभ्यस्त्वितरे। कुतः—विद्यासामर्थ्यात्। यदि विद्वानपीतरवद्यतः कुतश्चिद्देहदेशादुत्क्रामेन्नैवोत्कृष्टं लोकं लभेत। तत्रानर्थिकैव विद्या स्यात्। तच्छेषगत्यनुस्मृतियोगाच्च, विद्याशेषभूता च मूर्धन्यनाडीसंबद्धा गतिरनुशीलयितव्या विद्याविशेषेषु विहिता तामभ्यस्यंस्तयैव प्रतिष्ठत इति युक्तम्। तस्माद्धृदयालयेन ब्रह्मणा सूपासितेनानुगृहीतस्तद्भावं समापन्नो विद्वान्मूर्धन्ययैव शताधिकया शतादतिरिक्तयैकशततम्या नाड्या निष्क्रामतीतराभिरितरे। तथाहि हार्दविद्यां प्रकृत्य समामनन्ति—'शतं चैका च हृदयस्य नाड्यस्तासां मूर्धानमभिनिःसृतैका। तयोर्ध्वमायन्नमृतत्वमेति विष्वङ्ङन्या उत्क्रमणे भवन्ति' (छा० ८। ६। ६) इति ॥ १७ ॥

१० रश्म्यधिकरणम्। सू० १८

रश्म्यनुसारी ॥ १८ ॥

கின்றனர். ஏன்? உபாஸனையின் ஸாமர்த்தியத்தினுலென்க. வித்வானுங்கூட மற்றவனைப் போல யாதானுமொரு சரீரதேசத்தினின்றும் உயரக்கிளம்புவானேல் உத்கிருஷ்டமான லோகத்தை யடையவே மாட்டான். அதனின்றும் வித்யையானது பயனற்றதாகவே ஆகிவிடும். அதற்குச் சேஷமானகதியினுடைய அனுஸ்மிருதியோகமு மிருக்கிறது. அதாவது:—வித்யைக்குச் சேஷமாக=அங்கமாக ஆனதும், மூர்த்தன்யமானநாடியுடன் (ஸுஷும்ந நாடியுடன்) ஸம்பந்தப்பட்டதுமான கதியானது=வழியானது, சிந்திக்கத்தக்கதாக வித்யாவிசேஷங்களில்=உபாஸனுவிசேஷங்களில், விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தக்கதியை அடிக்கடி சிந்தித்துக் கொண்டு அவ்வழியினுலேயே கிளம்புகிருன் என்பது பொருந்துகிறது. ஆகவே ஹிருதயத்தை ஆலயமாகக் கொண்டதும் நன்கு உபாஸிக்கப்பட்டதுமான ப்ரம்ஹத்தினுல் அனுக்கிரஹிக்கப்பட்டவனுய் அந்த ப்ரம்ஹபாவத்தை யடைந்த வித்வானுனவன் மூர்த்தாவிலேயே உள்ளதும் ஶதாதிகமானதும்=அதாவது:—நூற்றுக்கு மேற்பட்ட நூற்றோராவதுமான நாடியினுல் வெளிக்கிளம்புகிருன். மற்றவர்களோ வேறுநாடிகளால் வெளிக்கிளம்புகின்றனர். அவ்விதமே யன்றோ ஹார்த்தவித்யையைச் சொல்லத்தொடங்கி "நூறும் ஒன்றும் ஹிருதயத்தினுடைய நாடிகளாகும். அவற்றுள் ஒன்று ப்ரம்ஹரந்த்ரத்தைக்குரித்துச் சென்றிருக்கிறது. அந்த நாடிவழியாக உயரக்கிளம்புகின்றவனுய்க்கொண்டு அமிருதத்வத்தை யடைகிருன். வேறுநாடிகள் வேறுலோகத்தை யடையக்காரணமாகின்றன" என்றதால் சொல்லப்பட்டிருக்கிறது. (17) (எ—று)

ஒன்பதாவது ததோகோதிகரணம் முற்றிற்று.

ரச்ம்யதிகரணம் 10.

(ஸூ) ரச்ம்யனுஸாரீ. (18)

अहन्येव मृतो रश्मिं याति निश्यपि वा निशि। सूर्यरश्मेरभावेन मृतोऽहन्येव याति तम् ॥ १ ॥

यावद्देहं रश्मिनाड्योर्योगो ग्रीष्मक्षपास्वपि। देहदाहाच्छ्रुतत्वाच्च रश्मीन्निश्यपि यात्यसौ ॥ २ ॥

अस्ति हार्दविद्या—'अथ यदिदमस्मिन्ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म' (छा० ८।१।१) इत्युपक्रम्य विहिता। तत्प्रक्रियायाम् 'अथ या एता हृदयस्य नाड्य:' (छा० ८।६।१) इत्युपक्रम्य सप्रपञ्चं नाडीरश्मिसंबन्धमुक्त्वोक्तम् 'अथ यत्रैतदस्माच्छरीरादुत्क्रामत्यथैतैरेव रश्मिभिरूर्ध्वमाक्रमते' (छा० ८।६।५) इति। पुनश्चोक्तम् 'तयोर्ध्वमायन्नमृतत्वमेति' (छा० ८।६।६) इति। तस्माच्छताधिकया नाड्या निष्क्रामन्रश्म्यनुसारी निष्क्रामतीति गम्यते। तत्किमविशेषेणैवाहनि रात्रौ वा म्रियमाणस्य रश्म्यनुसारित्वमाहोस्विदहन्येवेति संशये सत्यविशेषश्रवणादविशेषेणैव तावद्रश्म्यनुसारीति प्रतिज्ञायते ॥

(ப—ரை) நூற்றொராவது நாடிவழியாகச் செல்லுபவன் **रश्म्यनुसारी** (**ரஶ்ம்**யனுஸாரீ)=சூரியனுடைய கிரணத்தை யனுஸரித்தவனாய் ஆதித்யமண்டலத்தை யடைகிறான். (18) (எ—று)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) பகலில்மட்டும் மரணத்தை யடைந்தவன் ஸூரியரஶ்மியை யடைகின்றானா? இரவில் மரணத்தை யடைந்தவனும் ஸூரியரஶ்மியை யடைகின்றானா? என்பது ஸந்தேஹம். இரவில் ஸூரியனுடைய ரஶ்மியானது இல்லாமையால் பகலில் மரணத்தையடைந்தவன் மட்டுந்தான் ஸூரியரஶ்மியை யடைகிறான் என்பது பூர்வபக்ஷம். தேஹமுள்ளவரை ரஶ்மிக்கும் நாடிக்கும் சேர்க்கை யிருக்கிறது. க்ரீஷ்மருதுவில் இரவுகளிலுங் கூட தேஹதாஹம் ஸம்பவிப்பதாலும் சுருதியில் சொல்லியிருப்பதைக் கொண்டும் இரவில் மரித்தவனுங்கூட ரஶ்மிகளை யடையவே அடைகிறான்என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—சுருதியில் ஹார்த்த வித்யையானது "பிறகு ப்ரம்ஹபுரத்தில் யாதொரு இந்த ஸூக்ஷ்மமானதும் புண்டரீகவடிவமானதுமான இடமுண்டோ" என்றுதொடங்கி விதிக்கப்பட்டிருக்கிறது. அதை விளக்கும் பொழுது "பிறகு ஹிருதயத்தினுடைய யாதொரு இந்த நாடிகளுண்டோ" என்று தொடங்கி விரிவாக நாடிகளுக்கும் ரஶ்மிகளுக்கும் ஸம்பந்தத்தைச்சொல்லி "பிறகு எப்பொழுது இவ்விதம் இந்தச் சரீரத்தினின்றும் வெளிக்கிளம்புகிறானோ அப்பொழுது இந்த ரஶ்மிகளுடனேயே உபரக்கிளம்புகிறான்" எனக்கூறப்பட்டிருக்கிறது. திரும்பவும் "அந்த நாடியினால் உயரக்கிளம்புகின்றவனாய் அமிருதத்வத்தை யடைகிறான்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே நூற்றொராவது நாடியினால் வெளியேறுபவனாய்க் கொண்டு ரஶ்மிகளையனுஸரித்து வெளியேறுகிறான் எனக் கிடைக்கிறது. அங்கு பகலிலோ இரவிலோ மரிப்பவர் எவர்க்கும் பொதுவாக ரஶ்மியை யனுஸரித்தல் சொல்லப்படுகிறதா? அல்லது பகலில் மரிப்பவர்க்குமட்டுமேதானா? என ஸம்சயம் வரவே பொதுவாகவே சொல்லி இருப்பதால் பொதுவாகவேதான் (பகலில் மரித்தவன் இரவில் மரித்தவன் என்றதாரதம்மியமில்லாமலேதான்) ரஶ்மியை அனுஸரிக்கிறான் என்று சொல்லப்படுகிறது. (18) (எ—று)

निशि नेति चेन्न संबन्धस्य यावद्देहभावित्वाद्दर्शयति च ॥ १९ ॥

अस्त्यहनि नाडीरश्मिसंबन्ध इत्यहनि मृतस्य स्याद्रश्म्यनुसारित्वं रात्रौ तु प्रेतस्य न स्यात्। नाडीरश्मिसंबन्धविच्छेदादिति चेन्न। नाडीरश्मिसंबन्धस्य यावद्देहभावित्वात्। यावद्देहभावी हि शिराकिरणसंपर्कः। दर्शयति चैतमर्थं श्रुतिः—'अमुष्मादादित्यात्प्रतायन्ते ता आसु नाडीषु सृप्ता आभ्यो नाडीभ्यः प्रतायन्ते तेऽमुष्मिन्नादित्ये सृप्ताः' (छा० ८।६।२) इति। निदाघसमये च निशास्वपि किरणानुवृत्तिरुपलभ्यते प्रतापादिकार्यदर्शनात्। स्तोकानुवृत्तेस्तु दुर्लक्ष्यत्वमृत्वन्तररजनीषु शैशिरेष्विव दुर्दिनेषु। 'अहरेवैतद्रात्रौ दधाति' इति चैतदेव दर्शयति। यदि च रात्रौ प्रेतो विनैव रश्म्यनुसारेणोर्ध्वमाक्र-

---

(ஸூ) நிசிநேதிசேத் நஸம்பந்தஸ்ய யாவத்தேஹபாவித்வாத் தர்சயதிச (19)

(ப—ரை) निशि (நிசி)=இரவில் மரித்தவனுக்கு नेति चेत् (நேதிசேத்)=ரஸ்மியையனுஸரித்துச் செல்லுதல் கிடையாது எனின்? न (ந)=அதுபொருந்தாது. संबन्धस्य (ஸம்பந்தஸ்ய)=ரஸ்மியின் ஸம்பந்தமானது यावद्देहभावित्वात् (யாவத்தேஹபாவித்வாத்)=தேஹமுள்ளவரை இருப்பது பற்றியே என்க. दर्शयति च (தர்சயதி ச)=சுருதியும் அவ்விதமே சொல்லுகிறது. (19) (எ—று)

பாஷ்யம்.—பகலில் நாடிகளுக்கும் ரஸ்மிகளுக்கும் ஸம்பந்தமிருப்பது பற்றி பகலில் மரணத்தை யடைந்தவருக்கு ரஸ்மியை அனுஸரித்தல் ஸம்பவிக்குமே யொழிய இரவில் மரணத்தை யடைந்தவருக்கு ஸம்பவிக்க முடியாது. நாடிகளுக்கும் ரஸ்மிகளுக்கும் ஸம்பந்தமில்லாதிருப்பதே அதன் காரணமாகும் எனின்? அவ்விதம் சொல்லமுடியாது. ஏன்? நாடிகளுக்கும் ரஸ்மிகளுக்கும் தேஹமுள்ளவரை ஸம்பந்தமிருப்பதே அதன் காரணமாகும். நரம்புகளுக்கும் கிரணங்களுக்கும் சேர்க்கையானது தேஹமுள்ளவரை இருக்கக் கூடியதன்றோ? இந்த அர்த்தத்தைச் சுருதியிலும் "அந்தக் கிரணங்கள் இந்தச் சூரியனிடமிருந்து விரிந்து நிற்கின்றன. இந்த நாடிகளில் ஸம்பந்தத்தையடைந்தனவாய்க் கொண்டு நாடிகளினின்றும் விரிவை யடைகின்றன. அவை அந்தச் சூரியனிடத்திலும் ஸம்பந்தத்தை யடைகின்றன" என்றதால் சொல்லப்பட்டிருக்கிறது. கோடைகாலத்தில் இரவிலுங்கூட கிரணங்களின் அனுவிருத்தியானது காணப்படுகிறது. ப்ரதாபம் (உஷ்ணம்) முதலிய அதன்காரியம் காணப்படுவதே அதன் காரணமாகும். வேறு ருதுக்களிலுள்ள இரவுகளில் ஸ்வல்பம் அனுவிருத்தியிருப்பதை யொட்டி மேகத்தால் மறைக்கப்பட்ட சிசிரருதுக்களிலுள்ள பகல்களில் போல அது காணுதற்கரிதாக இருக்கிறது. "சூரியன் இந்தப் பகலையே இரவில் தரிக்கிறான்" என்ற சுருதியும் இவ்விஷயத்தைத் தெரிவிக்கிறது (அதாவது: ராத்ரியிலும் ஸ்வல்பரஸ்மிகளை அனுவிருத்திக்கச் செய்கிறான் என்பது அதன் பொருள்) ராத்திரியில் மரணத்தை யடைந்தவன் ரஸ்மியை யனுஸரிக்காமலே உயரக்கிளம்புவானேல் ரஸ்மியின் அனுஸரணத்தைச் சொன்னது வீணாகிவிடும். எவன் பகலில் மரிக்கின்றானோ அவன்

मेत रश्म्यनुसारानर्थक्यं भवेत्। नह्येतद्विशिष्याधीयते यो दिवा प्रैति स रश्मीनपेक्ष्योर्ध्वमाक्रमते यस्तु रात्रौ सोऽनपेक्ष्यैवेति। अथतु विद्वानपि रात्रिप्रायणापराधमात्रेण नोर्ध्वमाक्रमेत पाक्षिकफलाविद्येत्यप्रवृत्तिरेव तस्यां स्यात्। मृत्युकालानियमात्। अथापि रात्रावुपरतोऽहरागममुदीक्षेत। अहरागमेऽप्यस्य कदाचिद्रश्मिसंबन्धार्हं शरीरं स्यात् पावकादिसंपर्कात्। 'स यावत्क्षिप्येन्मनस्तावदादित्यं गच्छति' (छा० ८।६।५) इति च श्रुतिरनुदीक्षां दर्शयति। तस्मात्तदविशेषेणैवेदं रात्रिंदिवं रश्म्यनुसारित्वम्॥ १९॥

११ दक्षिणायनाधिकरणम्। सू० २०–२१

अतश्चायनेऽपि दक्षिणे॥ २०॥

ரஸ்மிகளை யபேக்ஷித்து உயரக்கிளம்புகிறான். எவன் இரவில் மரிக்கின்றானே அவன் ரஸ்மிகளை அபேக்ஷிப்பதில்லை என்று பிரித்து உபதேசிக்கப்படவுமில்லை யன்றோ? வித்வானாக (உபாஸகனாக) இருப்பவனுங்கூட ராத்திரியில் மரித்த அபராதத்தைக் கொண்டுமட்டும் மேல்லோகத்தை யடையானாயின் உபாஸனையானது ஒருஸமயத்தில் மட்டும்தான் பலன் தரக்கூடியது எனவாகி அவ்வுபாஸனத்தில் ப்ரவிருத்தியே ஏற்படாமல் போகத்தெரியும். இன்னகாலத்திற்றான் மரணம் நேரும் என்ற நியமமு மில்லாதிருக்கிறது. ராத்திரியில் மரித்தவன் பகலின் வரவை எதிர்பார்ப்பானாயின், இவனுடைய சரீரமானது *அக்னியாதிகளின் ஸம்பந்தமேற்படுவதை முன்னிட்டு பகல் வந்தபோதிலுங்கூட ஒருஸமயம் ரஸ்மியின் ஸம்பந்தத்துக்கு அர்ஹமில்லாததாகவும் ஆகிவிடக்கூடும். "மனஸ்஬ானது எவ்வளவுக்குள் கிளம்புமோ அவ்வளவுக்குள் அவன் ஆதித்யனை அடைகிறான்" என்பதாய் சுருதியும் கிரணத்தின் எதிர்பாராமையைத் தெரிவித்திருக்கிறது. ஆனதுபற்றிப் பொதுவாகவே இரவிலோ பகலிலோ இந்த ரஸ்மியை அனுஸரித்தல் ஸித்தித்து விடுகிறது. (19) (எ—று)

பத்தாவது ரஸ்ம்யனுஸார்யதிகரணம் முற்றிற்று.

தக்ஷிணாயனாதிகரணம் 11.

(ஸூ) அத: ச அயனேபி தக்ஷிணே. (20)

(ப—ரை) **अतश्च** (அதஶ்ச)=ரஸ்மியை எதிர்பார்த்தலில்லாமை முதலிய காரணங்களைக் கொண்டும் **दक्षिणे अयनेऽपि** (தக்ஷிணே அயனேபி)=தக்ஷிணாயனத்தில் மரித்தபோதிலுங் கூட உபாஸகன் வித்யை (உபாஸனை) யின் பலனை யடைந்து விடுகிறான். (20) (எ—று)

---

* ஸூரியனுதயமாவதற்குமுன் இவனுடைய சரீரத்தை நெருப்பிலிட்டுப் பொசிக்கியோ, குழியில் புதைத்தோ விடுவாராயின் அப்பொழுது ரச்மியின் ஸம்பந்தமேற்படுவதற்கு இடமில்லாமலாகிவிடும் என்று கருத்து.

अयने दक्षिणे मृत्वा धीफलं नैत्यथेतिवा। नैत्युत्तरायणाध्वोक्तेर्भीष्मस्यापि प्रतीक्षणात् ॥ १ ॥

आतिवाहिकदेवोक्तेर्वरख्यात्यै प्रतीक्षणात्। फलैकान्त्याच्च विद्यायाः फलं प्राप्नोत्युपासकः ॥ २ ॥

अत एव चोदीक्षानुपपत्तेरपाक्षिकफलत्वाच्च विद्याया अनियतकालत्वाच्च मृत्योर्दक्षिणायनेऽपि म्रियमाणो विद्वान्प्राप्नोत्येव विद्याफलम्। उत्तरायणमरणप्राशस्त्यप्रसिद्धेर्भीष्मस्य च प्रतीक्षादर्शनात् 'आपूर्यमाणपक्षाद्यान्षडुदङ्ङेति मासांस्तान्' (छा० ४।१५।५) इति च श्रुतेरपेक्षितव्यमुत्तरायणमितीमामाशङ्कामनेन सूत्रेणापनुदति। प्राशस्त्यप्रसिद्धिरविद्वद्विषया। भीष्मस्य प्रतिपालनमाचारप्रतिपालनार्थं पितृप्रसादलब्धस्वच्छन्दमृत्युताख्यापनार्थं च। श्रुतेस्त्वर्थं वक्ष्यति 'आतिवाहिकास्तल्लिङ्गात्' (ब्र० सू० ४। ३। ४) इति ॥ २० ॥

வையாஸிக ந்யாயமாலே.

(க—ரை) தக்ஷிணாயனத்தில் மரித்தவன் உபாஸனுபலனை யடைகின்ருனு? அல்லது அடைவதில்லையா? என்பது ஸந்தேஹம். உத்தராயணமார்க்கம் சொல்லப்பட்டிருப்பதாலும் பீஷ்மருக்கு உத்தராயணப்ரதீக்ஷணம், சொல்லப்பட்டிருப்பதாலும் தக்ஷிணாயனத்தில் மரித்தவன் வித்யாபலனை யடைவதில்லை என்பது பூர்வபக்ஷம். உத்தராயணாதி சப்தங்களால் ஆதிவாஹிகர்களான தேவர்கள் சொல்லப்பட்டிருப்பதாலும் தனது இஷ்டப்படி மரணம்வரட்டும் என்ற தனக்குள்ள வரத்தின் பெருமையைக் காட்டவேண்டி பீஷ்மர் உத்தராயணத்தை எதிர்பார்த்ததாக ஏற்படுவதாலும், வித்யைக்குப் பலன் நிஸ்சிதமாக ஏற்படுவதுதான் பொருந்துமாதலாலும் தக்ஷிணாயனத்தில் மரித்தபோதிலும் உபாஸகன் உபாஸனையின் பலனை அடையவே அடைகிருன் என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—ஆனதுபற்றியே=அதாவது:—ரஸ்மியை எதிர்பார்த்தல் பொருந்தாமையாலும், வித்யையானது அநித்யமானபலனுள்ளதாக இல்லாமையாலும், மரணத்தின் காலமானது நிஸ்சிதமாக இல்லாதிருப்பதாலும், வித்வான் தக்ஷிணாயனத்தில் மரித்தபோதிலுங்கூட வித்யையின் பலனை யடையவே அடைகிருன். உத்தராயணத்தில் மரிப்பது சிறப்புடையது என்ற ப்ரஸித்தியிருப்பதைக் கொண்டும் பீஷ்மர் அதை எதிர்பார்த்திருப்பதைக் கொண்டும் "சுக்லபக்ஷத்தினின்றும் சூரியன் எந்த ஆறுமாதங்களில் உத்தராயணத்தை யடைகின்ருனே அந்த மாஸங்களையும்" என ஸ்ருதியிருப்பதைக் கொண்டும் உத்தராயணமானது எதிர்பார்க்கக் கூடியதே என்ற இந்த ஆசங்கையை இந்த ஸூத்திரத்தினல் போக்குகிருர். உத்தராயணம் சிறந்தது என்ற ப்ரஸித்தியானது அவித்வானை (உபாஸனை செய்யாதவனை) விஷயமாகக் கொண்டது. பீஷ்மர் அதை எதிர்பார்த்ததானது அத்தகைய ஆசாரத்தைக் காக்கவேண்டியும், பிதிருக்களின் ப்ரஸாதத்தாற் கிடைத்த ஸ்வச்சந்தமான (தானிச்சிக்கும் பொழுது. கிடைக்கக்கூடியதான) மரணமுள்ளவராயிருத்தலே வெளிப்படுத்தவேண்டியுமாம். சுருதியின் பொருளேயோ "ஆதிவாஹிகாஸ்தல்லிங்காத்" என்றதால் சொல்லவும் போகிருர். (12) (எ—று)

ननु च—'यत्र काले त्वनावृत्तिमावृत्तिं चैव योगिनः। प्रयाता यान्ति तं कालं वक्ष्यामि भरतर्षभ' (गी० ८। २३) इति कालप्राधान्येनोपक्रम्याहरादिकालविशेषः स्मृतावपुनरावृत्तये नियमितः कथं रात्रौ दक्षिणायने वा प्रयातोऽनावृत्तिं यायादिति। अत्रोच्यते—

योगिनः प्रति च स्मर्यते स्मार्ते चैते ॥ २१ ॥

योगिनः प्रति चायमहरादिकालविनियोगःऽनावृत्तये स्मर्यते। स्मार्ते चैते योगसाङ्ख्ये न श्रौते। अतो विषयभेदात्प्रमाणविशेषाच्च नास्य स्मार्तस्य कालविनियोगस्य श्रौतेषु विज्ञानेष्ववतारः। ननु—'अग्निर्ज्योतिरहः शुक्लः षण्मासा उत्तरायणम्'। 'धूमो रात्रिस्तथा कृष्णः षण्मासा दक्षिणायनम्' (गी० ८। २४। २५) इति च श्रौतावेतौ देवयान-

---

அவதாரிகாபாஷ்யம்.—சங்கை—ஹேபரதர்ஷப! எந்தக் காலத்தில் மரணத்தை யடைந்தயோகிகள் அனுவிருத்தியையும், ஆவிருத்தியையும், அடைகின்றனரோ அந்தக் காலத்தைச் சொல்லுகிறேன்" எனக் காலத்தை ப்ரதானமாகக் கொண்டு உபதேசிக்கத் தொடங்கி ஸ்மிருதியில் அஹராதிகாலவிசேஷமானது அபுனராவிருத்தியையும் பொருட்டு (முக்தியையும் பொருட்டு) கட்டாயப் படுத்தப்பட்டிருக்கிறது. இவ்விதமிருக்க ராத்திரியிலோ தக்ஷிணாயனத்திலோ மரித்தவன் அனுவிருத்தியை எவ்விதம் அடையக்கூடும் எனின்?

உத்தரம்—அவ்விஷயத்தில் பதில் சொல்லப்படுகிறது—

(ஸூ) யோகிநः ப்ரதி ச ஸ்மர்யதே ஸ்மார்த்தே ச ஏதே (21)

(ப—ரை) योगिनः प्रति च (யோகிநः ப்ரதி ச)=யோகிகளைக் குறித்து இந்த அஹராதிகாலவிநியோகமானது स्मर्यते (ஸ்மர்யதே)=ஸ்மிருதியில் சொல்லப்படுகிறது. एते (ஏதே)=இங்குசொல்லிய யோகஸாங்கியங்கள் स्मार्तेच (ஸ்மார்த்தேச)= ஸ்மிருதியில் சொல்லப்பட்டனவாகும். (21) (எ—று)

பாஷ்யம்.—யோகிகளைக்குறித்து இந்த அஹராதிகாலவிநியோகமானது அனுவிருத்தியையும் பொருட்டு ஸ்மிருதியில் சொல்லப்படுகிறது. இவை ஸ்மிருதியில் சொல்லப்பட்ட † யோகஸாங்கியங்களே யொழிய சுருதியில் சொல்லப்பட்டனவன்று. ஆனதுபற்றி விஷயவேறுபாட்டினாலும் ப்ரமாண விசேஷத்தினாலும், ஸ்மிருதியில் சொல்லிய இந்தக் காலவிநியோகத்துக்குச் சுருதியிற் சொல்லிய விக்ஞானங்களில் ஸம்பந்தமேற்பட மாட்டாது.

சங்கை—ஸ்மிருதியிலுங்கூட "அக்னி: ஜ்யோதிஸ் அஹஸ் சுக்லபக்ஷம், உத்தராயணமான ஆறுமாஸங்கள்" என்றும், "தூமம் ராத்ரி அதுபோல கிருஷ்ண பக்ஷம் தக்ஷிணாயனமான ஆறுமாஸங்கள்" என்றுமாக சுருதியில் சொல்லப்பட்ட தேவயான பிதிருயான மார்க்கங்களே நினைவூட்டப்படுகின்றனவன்றோ எனின்?

---

† பகவதாராதனபுத்தியுடன் அனுஷ்டிக்கப்பட்ட கர்மம் யோகமென்றும், தாரணையை முன்னிட்ட அகர்த்திருத்வானுபவம் ஸாங்கியமென்றும் சொல்லப்படும்.

पितृयाणौ प्रत्यभिज्ञायेते स्मृतावपीति। उच्यते—'तं कालं वक्ष्यामि' (गी० ८। २३) इति स्मृतौ कालप्रतिज्ञानाद्विरोधमाशङ्क्य परिहार उक्तः। यदा पुनः स्मृतावप्यग्न्याद्या देवता एवातिवाहिक्यो गृह्यन्ते तदा न कश्चिद्विरोध इति॥ २१॥

इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य श्रीमच्छङ्करभगवतः कृतौ शारीरकमीमांसाभाष्ये चतुर्थाध्यायस्य द्वितीयः पादः॥ २॥

चतुर्थोऽध्याये तृतीयः पादः।

[अत्र पादे सगुणविद्यावतो मृतस्योत्तरमार्गाभिधानम्]

१ अर्चिराद्यधिकरणम्। सू० १

अर्चिरादिना तत्प्रथितेः॥ १॥

உத்தரம்—சொல்லப்படுகிறது—"அந்தக் காலத்தைச் சொல்லப்போகிறேன்" என ஸ்மிருதியில் காலப்ரதிக்ஞை செய்திருப்பதைக் கொண்டு விரோதத்தை ஆசங்கித்துப் பரிஹாரமானது சொல்லப்பட்டது. ஸ்மிருதியிலுங்கூட அக்னியாதிகளான ஆதிவாஹிக தேவதைகளே கிரஹிக்கப்படுவாராயின் விரோதமெதுவுமில்லை. (21) (எ—று)

பதினெண்ருவது தக்ஷிணாயனாதிகரணம் முற்றிற்று.

இவ்விதம் ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்யர்களான ஸ்ரீமச்சங்கர பகவத்பாதர் அவர்களின் கிருதியான சாரீரகமீமாம்ஸாபாஷ்யத்தில் நான்காவது அத்தியாயத்தின் இரண்டாவதுபாதம் முற்றிற்று.

நான்காவது அத்தியாயத்தின் மூன்ருவதுபாதம்.

அர்ச்சிராதி அதிகரணம் 1.

(அ—கை) இரண்டாவதுபாதத்தினுல் ஜீவனது உத்க்ராந்தியை உபதேசித்துப் பின்னர் ஜீவன் செல்லும் மார்க்கத்தை யுபதேசிக்கவேண்டி இந்த மூன்ருவது பாதம் ஆரம்பிக்கப்படுகிறது. இதில் 16ஸூத்திரங்கள் கொண்ட 6அதிகரணங்கள் அடங்கியிருக்கின்றன. அவற்றுள் ஏரேஸூத்திரமுள்ள முதலாவது அதிகரணத்தில் அர்ச்சிஸ்ஸை (அர்ச்சிஸ்ஸுக்கு அபிமானிதேவதையை) ஆதியாகக் கொண்ட மார்க்கமானது உபதேசிக்கப்படுகிறது. அந்த முதலாவது ஸூத்திரம் பின்வருமாறு—

(ஸூ) அர்ச்சிராதிநா தத்ப்ரதிதே: (1)

(ப—ரை) **अर्चिरादिना** (அர்ச்சிராதிநா)=ஸகுணப்ரம்ஹத்தை யடைய வேண்டிச் செல்லும் எல்லாவுபாஸகர்களும் அர்ச்சிஸ்ஸை=அர்ச்சிரபிமானிதேவதையை

नानाविधो ब्रह्मलोकमार्गो यद्वार्चिरादिकः । नानाविधः स्याद्विद्यासु वर्णनादन्यथाऽन्यथा ॥ १ ॥

एक एवार्चिरादिः स्यान्नानाश्रुत्युक्तपर्वकः । यतः पञ्चाग्निविद्यायां विद्यान्तरवतां श्रुतः ॥ २ ॥

आसृत्युपक्रमात्समानोत्क्रान्तिरित्युक्तम् । सृतिस्तु श्रुत्यन्तरेष्वनेकधा श्रूयते । नाडीरश्मिसंबन्धेनैका 'अथैतैरेव रश्मिभिरूर्ध्व आक्रमते' (छा० ८ । ६ । ५) इति । अर्चिरादिकैका 'तेऽर्चिषमभिसंभवन्त्यर्चिषोऽहः' (बृ० ६ । २ । १५) इति । 'स एतं देवयानं पन्थानमासाद्याग्निलोकमागच्छति' (कौ० १ । ३) इत्यन्या । यदा वै पुरुषोऽस्माल्लोकात्प्रैति स वायुमागच्छति' (बृ० ५ । १० । १) इत्यपरा । 'सूर्यद्वारेण ते विरजाः प्रयान्ति' (मुण्ड० १ । २ । ११) इति चापरा । तत्र संशयः—किं परस्परं भिन्ना एताः सृतयः किं वैकैवानेकविशेषणेति । तत्र प्राप्तं तावद्भिन्ना एताः सृतय इति । भिन्नप्रकरणत्वात् ।

ஆதியாகக் கொண்டவழியிஞலேயே செல்லுகின்றனர் என்று சொல்லுகிமேரும். ஏன்? **तत्प्रथितेः** (தத்ப்ரதிதே:)=எல்லாஸகுணப்ரம்ஹோபாஸகர்களுக்கும் இந்த மார்க்கம் ப்ரஸித்தமாகவிருப்பதே அதன் காரணமாகும். (1) (எ—று)

வையாஸிக நியாயமாலே.

(க—ரை) ப்ரம்ஹலோகமார்க்கமானது பலவிதமானதா? அல்லது அர்ச்சிஸ்ஸை ஆதியாகக் கொண்ட ஒன்றேதாஞ? என்பது ஸந்தேஹம். வித்யை (உபாஸனங்) களில் வெவ்வேறுவிதமாக வர்ணிக்கப்பட்டிருப்பதால் பற்பலவிதமாகவேதான் மார்க்கம் ஏற்படுகிறது என்பது பூர்வபக்ஷம். பல்வேறுபட்ட சுருதிகளாற் சொல்லப்பட்ட பர்வத்தை (நடுவிலுள்ள விடத்தை) யுடைய அர்ச்சிராதி மார்க்கம் ஒன்றேதாஞகும். பஞ்சாக்னி வித்யையில் வேறுவித்யாவான்களுக்கு அவ்விதம் சொல்லப்பட்டிருப்பதே அதன் காரணமாகும் என்பது **ஸித்தாந்தம்.**

பாஷ்யம்.—மார்க்க மாரம்பிக்கும்வரை வித்வான் அவித்வான் இருவர்க்கும் உத்க்ராந்தியானது ஸமானம் எனச் சொல்லப்பட்டது. மார்க்கமோ வேறுசுருதிகளில் பற்பலவிதமாகச் சொல்லப்படுகிறது. அதாவது:—"பின்னர் இதே ரஸ்மிகளிஞலேயே உயரக்கிளம்புகிருன்" என்பதாய் நாடீரஸ்மி ஸம்பந்தத்துடன் ஒன்றும், "அவர்கள் (உபாஸகர்கள்) அர்ச்கிஸ்ஸை யடைகின்றனர். அர்ச்சிஸ்ஸினின்றும் அஹஸ்ஸை யடைகின்றனர்" என்பதாய் அர்ச்சிஸ்ஸை ஆதியாகக் கொண்ட மற்ருென்றும், "அவன் இந்தத் தேவயான மார்க்கத்தை யடைந்து அக்னிலோகத்தை யடைகிருன்" என்பதாய் மற்ருென்றும், "எதுபோழ்து உபாஸக புருஷன் இந்தச் சரீரத்தினின்றும் வெளிக்கிளம்புகிருனே அவன் வாயுலோகத்தை யடைகிருன்" என்பதாய் ஒன்றும், "ஸூரியனுடைய துவாரத்திஞல் விரஜர்களான அவர்கள் செல்லுகின்றனர்" என்பதாய் வேறு ஒன்றுமாகக் காணப்படுகிறது என்ரும். அவ்விஷயத்தில் ஸம்சயமுதயமாகிறது. அதாவது:—இந்தமார்க்கங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டனவா? அல்லது ஒன்றே அனேகம் விசேஷங்களுடன் (பர்வாக்களுடன்) கூடினதா? என்ரும். அவ்விஷயத்தில் முதலில் கிடைப்பதாவது இந்த மார்க்கங்கள் வேறுபட்டனவே என்ரும். வேறுப்ரகர

भिन्नोपासनाशेषत्वाच्च। अपिच 'अथैतैरेव रश्मिभिः' (छा० ८। ६। ५) इत्यवधारणमर्चिराद्यपेक्षायामुपरुध्येत। त्वरावचनं च पीड्येत 'स यावत्क्षिप्येन्मनस्तावदादित्यं गच्छति' (छा० ८। ६। ५) इति। तस्मादन्योन्यभिन्ना एवैते पन्थान इति। एवं प्राप्तेऽभिदध्महे—अर्चिरादिनेति। सर्वो ब्रह्मप्रेप्सुरर्चिरादिनैवाध्वना रंहतीति प्रतिजानीमहे। कुतः—तत्प्रथितेः। प्रथितो ह्येष मार्गः सर्वेषां विदुषाम्। तथाहि पञ्चाग्निविद्याप्रकरणे 'येऽचामी अरण्ये श्रद्धां सत्यमुपासते' (बृ० ६। २। १५) इति विद्यान्तरशीलिनामप्यर्चिरादिका सृतिः श्राव्यते। स्यादेतत्। यासु विद्यासु न काचिद्गतिरुच्यते तास्वियमर्चिरादिकोपतिष्ठतां यासु त्वन्या श्राव्यते तासु किमित्यर्चिराद्याश्रयणमिति। अत्रोच्यते—भवेदेतदेवं यद्यत्यन्तभिन्ना एवैताः सृतयः स्युः। एकैव त्वेषा सृतिरनेकविशेषणा ब्रह्मलोकप्रपदनी क्वचित्केनचिद्विशेषणेनोपलक्षितेति वदामः। सर्वत्रैकदेशप्रत्यभिज्ञानादितरे-

---

ணத்தில் படிக்கப்பட்டிருப்பதும், வேறுஉபாஸனங்களுக்கு அங்கங்களாக இருப்பதுமே அதன்காரணமாகும்.

மேலும் "பிறகு இந்த ரஸ்மிகளுடன் மட்டுமே" என்பதாய் தேற்றங்கொடுத்துக் கூறினது அர்ச்சிராதிகளின் அபேக்ஷை கூறும் பக்ஷத்தில் வீணாகிவிடும். "எதற்குள் மனதானது செல்லுமோ அதற்குள் ஆதித்யனை யடைகிறான்" என்பதாய் த்வரையை (வேகத்தை) ச் சொல்லும் வசனமும் வீணாகிவிடும். ஆகவே இந்தவழிகள் ஒன்றுடனொன்று வேறுபட்டனவே தானாகும். என இவ்விதம் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகவே "அர்ச்சிராதினா" என்றதனால் ஸித்தாந்தத்தைச் சொல்லுகிறோம். ப்ரம்ஹத்தை யடையவிரும்பும் எல்லோரும் அர்ச்சிஸ்ஸை ஆதியாகவுடைய மார்க்கத்தினாலேயே செல்லுகின்றனர் எனப்ரதிக்ஞை செய்கின்றோம். ஏன்? அதன் ப்ரஸித்தி யிருப்பதால் என்க. எல்லாவுபாஸகர்களுக்கும் இந்த மார்க்கமானது ப்ரஸித்தமாகவன்றோ இருக்கின்றது. அதாவது:—பஞ்சாக்னி வித்யாப்ரகரணத்தில் "யாதொரு இவர் அரண்யத்தில் ஸ்ரத்தையுடன் கூடினவர்களாய் ஸத்யத்தை (ஹிரண்யகர்ப்பனை) உபாஸிக்கின்றனரோ" என்பதாய் வேறு உபாஸனப்பழக்கமுள்ளவர்க்குங்கூட அர்ச்சிஸ்ஸை ஆதியாகக் கொண்ட மார்க்கமானது சொல்லப்படுகிறது.

சங்கை—இஃதிருக்கட்டும். எந்த வித்யைகளில் ஒருவிதமான மார்க்கமும் சொல்லப்படவில்லையோ அந்த உபாஸனங்களில் இந்த அர்ச்சிராதியான மார்க்கமானது வரட்டும், எந்த உபாஸனங்களில் வேறுமார்க்கமானது சொல்லப்படுகிறதோ அவற்றில் அர்ச்சிராதி மார்க்காஸ்ரயணம் எதற்கு எனின்?

உத்தரம்—இவ்விஷயத்தில் சொல்லப்படுகிறது. இந்த மார்க்கங்கள் ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்டனவாக இருக்குமாயின் இது இவ்விதமிருக்கலாம் தான். ஒன்றாகவே உள்ள இந்த மார்க்கமானது அனேகம் விசேஷணமுள்ளதாக ப்ரம்ஹலோகத்தை யடைவிக்கிறது. சிலவிடத்தில் ஒருவிசேஷணத்துடன் மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறோம். (பொதுவாக) எல்லா

तरविशेषणविशेष्यभावोपपत्तेः। प्रकरणभेदेऽपि हि विद्यैकत्वे भवतीतरेतरविशेषणोपसंहारवद्गतिविशेषणानामप्युपसंहारः। विद्याभेदेऽपि तु गत्येकदेशप्रत्यभिज्ञानाद्गन्तव्याभेदाच्च गत्यभेद एव। तथाहि 'ते तेषु ब्रह्मलोकेषु पराः परावतो वसन्ति' (बृ० ६।२।१५), 'तस्मिन्वसन्ति शाश्वतीः समाः' (बृ० ५।१०।१), 'सा या ब्रह्मणो जितिर्या व्युष्टिस्तां जितिं जयति तां व्युष्टिं व्यश्नुते' (कौषी० १।४), 'तद्य एवैतं ब्रह्मलोकं ब्रह्मचर्येणानुविन्दति' (छा० ८।४।३) इति च तत्र तत्र तदेवैकं फलं ब्रह्मलोकप्राप्तिलक्षणं प्रदर्श्यते। यत्त्वेतैरेवेत्यवधारणमर्चिराद्याश्रयणे न स्यादिति। नैष दोषः। रश्मिप्राप्तिपरत्वादस्य। नह्येक एव शब्दो रश्मींश्च प्रापयितुमर्हत्यर्चिरादींश्च व्यावर्तयितुम्। तस्माद्रश्मिसंबन्ध एवायमवधार्यत इति द्रष्टव्यम्। त्वरावचनं त्वर्चिराद्यपेक्षायामपि गन्तव्यान्तरापेक्षया शैघ्र्यार्थत्वान्नोपरुध्यते। यथा निमेषमात्रेणात्रागम्यत इति। अपिच

விடத்திலுமே ஏகதேசத்துக்கு=யாதோவொன்றுக்கு, ப்ரத்யபிக்ஞை=அதுதானிது என்ற தோற்றம், ஏற்படுவதிலிருந்து ஒன்றுக்கொன்று விசேஷண விசேஷ்யத் தன்மை கொள்ளுவதுதான் பொருந்தக்கூடியதாக வாகிறது. ப்ரகரணம் வேறுபடினுங்கூட வித்யை (உபாஸனம்) ஒன்ருக இருக்குமாயின் அந்தந்த விசேஷணங்களுக்கு (குணங்களுக்கு) உபஸம்ஹாரம் சொல்லியிருப்பதுபோல கதியைப்பற்றிய விசேஷணங்களுக்கும் உபஸம்ஹாரம் சொல்லுவதுதான் பொருந்துகிறது. வித்யை வேறுபடுமிடத்திலோ வெனில் மார்க்கத்தின் ஏகதேசத்துக்கு (சிலவற்றுக்கு) ப்ரத்யபிக்ஞை (ஐக்யக்ஞானம்) இருப்பதைக்கொண்டும், போகவேண்டிய இடம் ஒன்ருக விருப்பதைக்கொண்டும் கதியானது ஒன்ருகவே தாகும். அதாவது:—"அவர்கள் நீண்ட ஆயுளை யுடைய ஹிரண்யகர்ப்பருடைய நீண்டவர்ஷங்கள் முழுதும் அந்த ப்ரம்ஹலோகங்களில் வஸிக்கின்றனர்" என்றும், "அந்த லோகத்தில் வெகுவருஷங்கள் வஸிக்கின்றனர்" என்றும், "ஹிரண்யகர்ப்பருடைய எல்லாவற்றிலுமுள்ள யாதொரு அந்த ஜயமுண்டோ, யாதொரு வியாப்தி (நிறைவுபெறல்) உண்டோ. அந்த ஜயத்தையும் அந்த வ்யாப்த்தியையும் அனுபவிக்கிருன்" என்றும், "ஆகவே எவர் இந்த ப்ரம்ஹலோகத்தை ப்ரம்ஹசர்யத்தினல் அடைகின்றனரோ" என்றுமாக அந்தந்த விடங்களிலும் ப்ரம்ஹ ப்ராப்த்தி ரூபமான அந்த ஒரேபலனே காண்பிக்கப்படுகிறது. "இதே ரஸ்மிகளினுல்" என்ற விடத்தில் அவதாரணம் (தேற்றம்) கொடுத்தது அர்ச்சிராதிகளை ஆஸ்ரயித்தால் பொருந்ாது எனயாதொன்று சொல்லப்பட்டதோ இதுதோஷமாகாது. இந்த அவதாரண (தேற்ற) மானது ரஸ்மியின் ப்ராப்த்தியைக் கூறுவதாக விருப்பதாலென்க. சுருதியில் **एतैरेव** (ஏதைரேவ) என்றவிடத்திலுள்ள ஏவ என்ற ஒரே சப்தமானது ரஸ்மிகளை யடையவிப்பதற்கும், அர்ச்சிராதிகளை மறுப்பதற்கும் தகுதியுள்ளதாகவாகாதன்ருே. ஆகவே ரஸ்மியின் ஸம்பந்தம்மட்டுமேதான் ஏவ என்றதால் அவதாரணம் (உறுதி) செய்யப்படுகிறது எனக் கண்டுகொள்ளவேண்டும். ("யாவத்க்ஷிப்யேத் மன:" என்றதால் சொல்லிய) த்வரா (விரைவு கூறும்) வசனமோவெனில் அர்ச்சிராதிகளின் அபேக்ஷயிருந்தபோதிலுங்கூட செல்ல

'अथैतयोः पथोर्न कतरेणचन' (छां० ५।१०।८) इति मार्गद्वयभ्रष्टानां कष्टं तृतीयं स्थानमाचक्षाणा पितृयाणव्यतिरिक्तमेकमेव देवयानमर्चिरादिपर्वाणं पन्थानं प्रथयति। भूयांस्यर्चिरादिसृतौ मार्गपर्वाण्यल्पीयांसि त्वन्यत्र। भूयसां चानुगुण्येनाल्पीयसां नयनं न्याय्यमित्यतोऽप्यर्चिरादिना तत्प्रथितेरित्युक्तम् ॥ १ ॥

२ वाय्वधिकरणम्। सू० २

वायुमब्दादविशेषविशेषाभ्याम् ॥ २ ॥

सन्निवेशयितुं वायुरत्राशक्योऽथ शक्यते। न शक्यो वायुलोकस्य श्रुतक्रमविवर्जनात् ॥ १ ॥

वायुच्छिद्राद्विनिष्क्रम्य स आदित्यं व्रजेदिति। श्रुतेरर्वाग्रवेर्वायुर्देवलोकस्ततोऽप्यधः ॥ २ ॥

வேண்டிய வேறொன்றை யபேக்ஷித்து விரைவைக் கூறவேண்டி யேற்பட்டதாதலால் விரோதப்படுவதற்கில்லை. நிமேஷமாத்திரத்தினால் இங்கு வரப்படுகிறது என்பதுபோலவாம். மேலும் "பிறகு இவ்விரண்டு மார்க்கங்களுள் ஒரு மார்க்கத்தினாலும் செல்லுவதில்லை" என்றதால் இரண்டு மார்க்கங்களினின்றும் நழுவினவர்களுக்கு கஷ்டமான மூன்றாவது வழியைச் சொல்லுகின்ற சுருதியானது பிதிருயானத்தைவிட வேறுபட்டதாயும் அர்ச்சிராதி பர்வங்களையுடையதாயுமுள்ள தேவயானமார்க்கம் ஒன்றென்றே தெரிவித்து மிருக்கிறது. அர்ச்சிராதிவழியில் அனேகம்மார்க்க பர்வங்களும் மற்றவழியில் குறைந்தமார்க்க பர்வங்களுமிருக்கின்றன. வெகுவாயுள்ளதை யனுஸரித்து அற்பமாயுள்ளதை நயிப்பதுதான் நியாயமானது என்ற இக்காரணம் பற்றியும் கூட "அர்ச்சிராதினா தத்ப்ரதிதே:" என்று சொல்லப்பட்டது. (1) (எ-று)

ஒன்றாவது அர்ச்சிராதிஅதிகரணம் முற்றிற்று.

வாய்வதிகரணம் 2.

(ஸூ) வாயுமப்தாத் அவிசேஷவிசேஷாப்யாம். (2)

(ப-ரை) **वायुम्** (வாயும்)=வாயுவை **अब्दात्** (அப்தாத்)=ஸம்வத்ஸரத்துக்குப் பிறகு படித்துக்கொள்ளவேண்டும். ஏன்? **अविशेषविशेषाभ्याम्** (அவிசேஷவிசேஷாப்யாம்)=கௌஷீதகிசுருதியில் "வாயுலோகத்தையடைகிறான்" எனப் பொதுவாகச் சொல்லப்பட்டவாயுவுக்கு ப்ருஹதாரண்யகசுருதியில் "வாயுவை யடைந்து ஆதித்யனை யடைகிறான்" என விசேஷமான உபதேசம் (ஆதித்யனுக்கு முந்திச் சேர்க்கவேண்டுமென வுபதேசம்) காணப்படுவதே அதன் காரணமாகும். (2)

வையாஸிக நியாயமாலை.

(க-ரை) மார்க்கபர்வாவை உபதேசிக்கும் இந்த விடத்தில் வாயுவைச் சேர்க்கமுடியாதா? அல்லது சேர்க்கமுடியுமா? என்பது ஸந்தேஹம். வாயுலோகமானது சுருதியிற் சொல்லிய மார்க்கக்கிரமத்தில் விடப்பட்டிருப்பதால் வாயுவைச்

केन पुनः सन्निवेशविशेषेण गतिविशेषणानामितरेतरविशेषणविशेष्यभाव इति तदेतत्सुहृद्भूत्वाचार्यो ग्रथयति। 'स एतं देवयानं पन्थानमापद्याग्निलोकमागच्छति स वायुलोकं स वरुणलोकं स इन्द्रलोकं स प्रजापतिलोकं स ब्रह्मलोकम्' (कौ० १। ३) इति कौषीतकिनां देवयानः पन्था: पठ्यते। तत्रार्चिरग्निलोकशब्दौ तावदेकार्थौ ज्वलनवचनत्वादिति नात्र सन्निवेशक्रमः कश्चिदन्वेष्यः। वायुस्त्वर्चिरादौ वर्त्मनि न श्रुतः कतमस्मिन् स्थाने निवेशयितव्य इति। उच्यते—'तेऽर्चिषमेवाभिसंभवन्त्यर्चिषोऽहरह्न आपूर्यमाणपक्षमापूर्यमाणपक्षाद्यान्षडुदङ्ङेति मासांस्तान् मासेभ्यः संवत्सरं संवत्सरादादित्यम्' (छा० ५। १०। १,२) इत्यत्र संवत्सरात्पराञ्चमादित्यादर्वाञ्चं वायुमभिसंभवन्ति। कस्मात्। अविशेषविशेषाभ्याम्। तथाहि—'स वायुलोकम्' (कौ० १। ३) इत्यत्राविशेषोपदिष्टस्य

சேர்த்துக்கொள்ள முடியாது என்பது பூர்வபக்ஷம். "வாயுவின் மூலம் கிடைக்கும் ஓட்டையிலிருந்து வெளிக்கிளம்பி அவன் ஆதித்யனை யடைகிறான்" என ப்ருஹதாரண்யகஶ்ருதி யிருப்பதிலிருந்து ஸூரியலோகத்துக்கு முந்தி வாயுலோகத்தையும், வாயுவுக்குமுன் தேவலோகத்தையும் சேர்த்துக் கொள்ளுவதுதான் பொருந்தும் என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—எத்தகைய அமைப்பு முறையை யொட்டி மார்க்கபர்வாக்களுக்கு ஒன்றுக்கொன்றுக்கு விசேஷண விசேஷ்யத்தன்மையானது (ஒன்றுக்குப் பிறகு மற்றொன்று இருப்பதாகக் கொள்ளுவதானது) ஏற்படுகிறது என்பதை ஆசிரியர் மித்திரன் முறையிலிருந்து உபதேசிக்கிறார். கௌஷீதகிகளின் உபநிடதத்தில் "அந்த உபாஸகன் இந்தத் தேவயானமார்க்கத்தை யடைந்து அக்னிலோகத்துக்கு வருகிறான். அவன் வாயுலோகத்தையும், அவன் வருணலோகத்தையும், அவன் இந்திரலோகத்தையும், அவன் ப்ரஜாபதிலோகத்தையும், அவன் ப்ரம்ஹலோகத்தையும், அடைகிறான்" என்றதால் தேவயானமார்க்கமானது படிக்கப்படுகிறது. அவ்விடத்திலுள்ள அர்ச்சிஸ் என்றும் அக்னிலோகம் என்றுமான இரண்டு சப்தங்களும் ஒரே பொருளுள்ளனவாகும். இரண்டும் ஜ்வலனத்தைச் சொல்லும் வசனமாக இருப்பதுபற்றி இவ்விஷயத்தில் ஸன்னிவேசத்தின் (அமைப்பின்) கிரமம்=முறை, ஒன்றும் அபேக்ஷிக்கப் படுவதில்லை. அர்ச்சிராதி மார்க்கத்திலோ வாயுசொல்லப்படாததுபற்றி அதை எந்தஸ்தானத்தில் வைக்கவேண்டும். எனின்? சொல்லப்படுகிறது. "அவர்கள் அர்ச்சிஸ்ஸையே அடைகின்றனர் அர்ச்சிஸ்ஸிலிருந்து அஹஸ்ஸையும், அஹஸ்ஸிலிருந்து சுக்லபக்ஷத்தையும், சுக்லபக்ஷத்திலிருந்து எந்த ஆறுமாதங்கள் முழுதும் வடக்கில் சூரியன் ஸஞ்சரிக்கின்றானோ அந்த ஆறுமாதங்களையும் (அதாவது உத்தராயணத்தையும்) மாதங்களிலிருந்து ஸம்வத்ஸரத்தையும், ஸம்வத்ஸரத்திலிருந்து ஆதித்யனையும் அடைகிறான்" என்ற இந்த விடத்தில் ஸம்வத்ஸரத்துக்கு மேலும் ஆதித்யனுக்கு முந்தியும் உள்ள வாயுவை அடைகின்றனர் என்றேற்படுகிறது. ஏன்? பொதுவாகவும் தனியாகவும் உபதேசமிருப்பதாலென்க. அதாவது:—கௌஷீதகி உபநிடதத்தில் "அவன் வாயுலோகத்தை (யடைகிறான்)" என்றவிடத்தில் பொதுவாக வுபதேசிக்கப்பட்ட வாயுவு

वायोः श्रुत्यन्तरे विशेषोपदेशो दृश्यते 'यदा वै पुरुषोऽस्माल्लोकात्प्रैति स वायुमागच्छति तस्मै स तत्र विजिहीते यथा रथचक्रस्य खं तेन स ऊर्ध्वमाक्रमते स आदित्यमागच्छति' (बृ० ५ । १० । १) इति । एतस्मादादित्याद्वायोः पूर्वत्वदर्शनाद्विशेषादब्दादित्ययोरन्तराले वायुर्निवेशयितव्यः । कस्मात्पुनरग्नेः परत्वदर्शनाद्विशेषादर्चिषोऽनन्तरं वायुर्न निवेश्यते । नैषोऽस्ति विशेष इति वदामः । ननूदाहृता श्रुतिः—'स एतं देवयानं पन्थानमापद्याग्निलोकमागच्छति स वायुलोकं स वरुणलोकम्' (कौषी० १। ३) इति । उच्यते—केवलोऽत्र पाठः पौर्वापर्येणावस्थितो नात्र क्रमवचनः कश्चिच्छब्दोऽस्ति । पदार्थोपदर्शनमात्रं ह्यत्र क्रियते एतमेतं चागच्छतीति । इतरत्र पुनर्वायुप्रत्तेन रथचक्रमात्रेण च्छिद्रेणोर्ध्वमाक्रम्यादित्यमागच्छतीत्यवगम्यते क्रमः । तस्मात्सूक्तमविशेषविशेषाभ्यामिति । वाजसनेयिनस्तु 'मासेभ्यो देवलोकं देवलोकादादित्यम्' (बृ० ६ । २ । १५) इति समामनन्ति । तत्रादि-

---

க்கு வேறுசுருதியில் "எப்பொழுது புருஷன் இந்தச் சரீரத்தினின்றும் வெளிக் கிளப்புகிறானோ அப்பொழுது அவன் வாயுவை அடைகிறான், அச்சமயத்தில் அந்த வாயு தேரிலுள்ள சக்கிரத்தினது இடைவெளிபோலவிரிந்து கொடுக்கிறது அவன் அவ்வழியினால் உயரக்கிளப்பி ஆதித்யனை அடைகிறான்" என விசேஷமானது உபதேசிக்கப் பட்டிருக்கிறது. வாயுவுக்கு இங்குள்ள ஆதித்யனைக் காட்டிலும் முன்னரிருத்தல் என்ற விசேஷம் காணப்படுவதைக்கொண்டு ஸம்வத்ஸரத்துக்கும் ஆதித்யனுக்கும் இடையில் வாயுவை வைக்கவேண்டுவதாக வாகிறது. அக்னியைக்காட்டிலும் பரத்துவம் (மேலுள்ளதாகவிருத்தல்) என்ற விசேஷமானது காணப்படுவதைக் கொண்டு அர்ச்சிஸ்ஸுக்கு அடுத்தபடியாக வாயு ஏன் வைக்கப் படுவதில்லை. எனின்? இது விசேஷமாகவாகாதெனச் சொல்லுகிறோம்.

சங்கை—"அவன் இந்தத்தேவயானமார்க்கத்தை அடைந்து அக்னிலோகத்தையடைகிறான் அவன் வாயுலோகத்தையடைகிறான். அவன் வருணலோகத்தையடைகிறான்" என ஶ்ருதியானது உதாஹரிக்க (எடுத்துக்காட்ட) ப்பட்டதன்றோ எனின்?

உத்தரம்—இவ்விஷயத்தில் பதில் சொல்லப்படுகிறது. இவ்விடத்தில் முன்னது பின்னதாகவுள்ள கேவலபாடம் மட்டும் காணப்படுகிறதேயொழிய இதற்குப் பிறகு இது எனக் கிரமத்தைச் சொல்லும் சப்தமொன்றும் காணப்படவில்லை. இதை இதை யடைகிறான் என்பதாய் பதார்த்தங்கள் (அடையும் பொருள்) மட்டும் காண்பிக்கப்படுகிறது. வேறிடத்திலோ வெனில் வாயுவினால் கொடுக்கப்பட்ட தேரின் சக்கிரவடிவமான ஒட்டையினால் உயரத்திலுள்ளதை யடைந்து அங்கிருந்து ஆதித்யனை யடைகிறான் என்பதாய் கிரமமானது அறியப்படுகிறது. ஆகவே ஸூத்திரத்தில் "அவிசேஷ விசேஷாப்யாம்" என்று சொன்னது மிக்கப்பொருத்தமானதேயாகும். வாஜஸநேயிகளோ "மாஸங்களினின்றும் தேவலோகத்தையும், தேவலோகத்தினின்றும் ஆதித்யனையும் அடைகிறான்" எனப்படிக்கின்றனர். அவ்விடத்தில் ஆதித்யனுக்கடுத்து வரவேண்டுவதற்காக தேவலோகத்தினின்றும் வாயுவையடைகின்றனர் என்றேற்படுகிறது. (ஸூத்திரத்தில்) "வாயும் அப்தாத்"

त्यानन्तर्याय देवलोकाद्वायुमभिसंभवेयुः। वायुमब्दादिति तु छन्दोगश्रुत्यपेक्षयोक्तम्। छान्दोग्यवाजसनेयकयोस्त्वेकत्र देवलोको न विद्यते परत्र संवत्सरः। तत्र श्रुतिद्वयप्रत्ययादुभावप्युभयत्र ग्रथयितव्यौ। तत्रापि माससंबन्धात्संवत्सरः पूर्वः पश्चिमो देवलोक इति विवेक्तव्यम् ॥ २ ॥

३ तडिदधिकरणम्। सू० ३

तडितोऽधि वरुणः संबन्धात् ॥ ३ ॥

वरुणादेस्सन्निवेशो नास्ति तत्राथ विद्यते। नास्ति वायोरिवैतस्य व्यवस्था श्रुत्यभावतः ॥ १ ॥

विद्युत्संबन्धिवृष्टिस्थनीरस्याधिपतित्वतः। वरुणो विद्युतस्तूर्ध्वं तत इन्द्रप्रजापती ॥ २ ॥

'आदित्याच्चन्द्रमसं चन्द्रमसो विद्युतम्' (छा० ४। १५। ५) इत्यस्या विद्युत

என்றதோவெனில் சாங்தோக்யச்ருதியை யொட்டிக் கூறப்பட்டதாகும். சாங்தோக்கியம் வாஜஸநேயகம் இவ்விரண்டனுள் ஒன்றில் தேவலோகம் சொல்லப்படவில்லை. மற்றொன்றில் ஸம்வத்ஸரம் சொல்லப்படவில்லை. அவ்விடத்தில் இரண்டுச்ருதிகளுக்கு முள்ள ப்ராமாண்யத்தைமுன்னிட்டு தேவலோகம் ஸம்வத்ஸரம் ஆகிய இரண்டையும் இரண்டிடத்திலும் சேர்க்கவேண்டுவதாகவே யாகிறது. அதிலும் மாஸத்தின் ஸம்பந்தமிருப்பதைக் கொண்டு முதலில் ஸம்வத்ஸரமும் பிறகு தேவலோகமுமெனப் பிரித்துச் சேர்த்துக் கொள்ளவேண்டும். (1)

இரண்டாவது வாய்வதிகரணம் முற்றிற்று.

தடித் அதிகரணம் 3.

(ஸூ) தடிதோ அதிவருணః ஸம்பந்தாத் (3)

(ப—ரை) **तडितः** (தடிதః)=மின்னலுக்கு **अधि** (அதி)=மேலே **वरुणः** (வருணః)= வருணலோகமானது சேர்க்கப்படவேண்டும். ஏன்? **संबन्धात्** (ஸம்பந்தாத்)= மின்னலுக்கும் வருணனுக்கும் ஸம்பந்தமிருப்பதாலென்க. (3)

வையாஸிக ந்யாயமாலை.

(க—ரை) வருணாதிகளுக்கு இந்த மார்க்கத்தில் சேர்க்கை இல்லையா? அல்லது உண்டா? என்பது ஸந்தேஹம். வாயுவைச்சேர்த்துக் கொள்ளுவதில் போல இந்தவருணனைச் சேர்ப்பதில் வியவஸ்தையைச் செய்யக்கூடிய சுருதியில்லாதிருப்பதால் வருணனுக்கு இந்த மார்க்கத்தில் ஸம்பந்தம் கிடையாது என்பது பூர்வபக்ஷம். மின்னலின் ஸம்பந்தம் பெற்ற மழையிலிருக்கின்ற ஜலத்துக்கு வருணன் அதிபதியாக இருப்பதுபற்றி வருணனை மின்னலுக்கு அடுத்தபடியாகவும், வருணனுக்கு அடுத்தபடியாக இந்திரன் ப்ரஜாபதி இவர்களையும் சேர்த்துப் பொருள் காணவேண்டும் என்பதுஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—"ஆதித்யனிடமிருந்து சந்திரனையும் சந்திரனிடமிருந்து மின்னலையும் அடைகிறான்" என்ற விடத்தில் இந்த மின்னலுக்கு மேலே அந்த

उपरिष्टात्स वरुणलोकमित्ययं वरुणः संबध्यते। अस्ति हि संबन्धो विद्युद्वरुणयोः। यदा हि विशाला विद्युतस्तीव्रस्तनितनिर्घोषा जीमूतोदरेषु प्रनृत्यन्त्यथापः प्रपतन्ति। "विद्योतते स्तनयति वर्षिष्यति वा' (छा० ७। ११। १) इति च ब्राह्मणम्। अपां चाधिपतिर्वरुण इति श्रुतिस्मृतिप्रसिद्धिः। वरुणादधीन्द्रप्रजापती स्थानान्तराभावात्पाठसामर्थ्याच्च। आगन्तुकत्वादपि वरुणादीनामन्त एव निवेशो वैशेषिकस्थानाभावाद्विद्युदन्त्याचिरादौ वर्त्मनि॥ ३॥

४ आतिवाहिकाधिकरणम्। सू० ४–६

आतिवाहिकास्तल्लिङ्गात्॥ ४॥

मार्गचिह्नं भोगभूर्वा नेतारो वाऽर्चिरादयः। आद्यौ स्यातां मार्गचिह्नसारूप्याल्लोकशब्दतः॥ १॥

अन्ते गमयतीत्युक्तेर्नेतारस्तेषु चेदृशः। निर्देशोऽस्त्यत्र लोकाख्या तन्निवासिजनान् प्रति॥ २॥

வருணனை யடைகிறுன் என வருணன் சேர்த்துக்கொள்ளப்படுகிறுன். மின்னலுக்கும் வருணனுக்கும் ஸம்பந்தமிருப்பது பிரஸித்தமன்றே. எதுபோழ்து விசாலமான .மின்னல்கள் கடுமையான இடிமுழக்கமுள்ளனவாய் மேகத்தின் வயிறுகளில் நடமாடுகின்றனவோ அதுபோழ்து ஜலம் விழுகின்றது. "மின்னுகிறது. இடி முழக்கங்காட்டுகிறது. அபபொழுது மழையும் பொழிகிறது" என சுருதியுமிருக்கிறது. ஜலத்துக்கு வருணன் அதிபதி என்பது ஶ்ருதி ஸ்மிருதிகளில் ப்ரஸித்தமாகவு மிருக்கிறது. வருணனுக்கு அடுத்து இந்திரன் ப்ரஜாபதி இவர்கள் சேர்த்துக் கொள்ளத்தக்கவர். அவர்களுக்கு வேறுஸ்தானமில்லாமையும் அவர்கள் சுருதியில் படிக்கப்பட்டிருப்பதுமே அதன் காரணமாகும். வருணுதிகளுக்கு ஆகந்துகத்துவம் (வேறிடத்திலுள்ளதை இங்குசேர்த்துக்கொள்ளுதல்) இருப்பதையொட்டி முடிவிலேயே அவற்றுக்கு நிவேசப் (ஸம்பந்தம்)ஏற்படுகிறது. தனித்த ஸ்தானம் சொல்லப்படாதிருப்பதுபற்றி மின்னலும் அர்ச்சிராதிமார்க்கத்தில் முடிவிலுள்ளதாகவே தானுகும். (3)

மூன்றுவது தடித் அதிகரணம் முற்றிற்று.

ஆதிவாஹிகாதிகரணம் 4.

(ஸூ) ஆதிவாஹிகாஸ்தல்லிங்காத் (4)

(ப–ரை) அர்ச்சிஸ் தொடங்கி வித்யுத்தை முடிவாகக்கொண்டவைகள் **आतिवाहिकाः** (ஆதிவாஹிகாः=கொண்டு சேர்க்கும் சேதனர்களான தேவதைகளே யாவர். ஏன்? **तल्लिङ्गात्** (தல்லிங்காத்)=அவ்விதஞ் கூறுவதற்குப் போதியலிங்கம் சுருதியில் காணப்படுவதாலென்க. (14)

வையாஸிக நியாயமாலே.

(க–ரை) அர்ச்சிஸ்தொடங்கி வித்யுத்முடிவாகக் கூறப்பட்டவைகள் மார்க்கத்தின் சிந்ஹமா? (அடையாளமா?) அல்லது போகபூமியா? அல்லது கொண்டு

तेष्वेवार्चिरादिषु संशयः—किमेतानि मार्गचिह्नान्युत भोगभूमयोऽथवा नेतारो गन्तॄणामिति। तत्र मार्गलक्षणभूता अर्चिरादय इति तावत्प्राप्तम्। तत्स्वरूपत्वादुपदेशस्य। यथाहि लोके कश्चिद्ग्रामं नगरं वा प्रतिष्ठासमानोऽनुशिष्यते गच्छेतस्त्वममुं गिरिं ततो न्यग्रोधं ततो नदीं ततो ग्रामं ततो नगरं वा प्राप्स्यसीत्येवमिहाप्यर्चिषोऽहरह्न आपूर्यमाणपक्षमित्याद्याह। अथवा भोगभूमय इति प्राप्तम्। तथाहि—लोकशब्देनाग्न्यादीननुबध्नाति 'अग्निलोकमागच्छति' (कौषी० १। ३) इत्यादि। लोकशब्दश्च प्राणिनां भोगायतनेषु भाष्यते—'मनुष्यलोकः पितृलोको देवलोकः' (बृ० १। ५। १६) इति च। तथाच ब्राह्मणम्—'अहोरात्रेषु ते लोकेषु सज्जन्ते' इत्यादि। तस्मान्नातिवाहिका अर्चिरादयः। अचेतनत्वादप्येतेषामातिवाहिकत्वानुपपत्तिः। चेतना हि लोके राजनियुक्ताः

சேர்க்கும் சேதனர்களா? என்பது ஸந்தேஹம். மார்க்கத்தினது அடையாளம் ஸமானமாக இருப்பதைக் கொண்டும் லோகசப்தமிருப்பதைக்கொண்டும் மார்க்க சின்ஹமாகவும் போகபூமியாகவும் தான் சொல்லவேண்டும் என்பது பூர்வபக்ஷம். முடிவில் வித்யுத்தை யடைந்ததும் அமானவபுருஷர்கள் இவர்களை (உபாஸகர்களை) ப்ரம்ஹத்தையடையச் செய்விக்கின்றனர் எனச் சொல்லியிருப்பதால் அர்ச்சிராதிகள் கொண்டு சேர்க்கும்சேதனர்களே ஆவர். இவ்வித நிர்த்தேசமும் அர்ச்சிராதிகளில் காணப்படுகிறது. லோகமென்ற பெயரானது அங்கு வஸிக்கும் ஜனங்களை யுத்தேசித்து சொல்லப்பட்டதாகும் என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—அதே அர்ச்சிராதிகள் விஷயத்தில் ஸந்தேஹ முதயமாகிறது. அதாவது:—இவை மார்க்கத்தின் அடையாளங்களா? அல்லது போகபூமிகளா? அல்லது செல்லுகின்றவர்களைக் கொண்டுசேர்க்கும் சேதனர்களா? என்றும். அவற்றுள் அர்ச்சிராதிகள் மார்க்கத்தின் அடையாளங்களாகவே தானாகும் என ப்ராப்தமாகிறது. உபதேசமானது அதற்கு ஸமானமாக இருப்பதுபற்றியே என்க. அதாவது:—உலகில் கிராமத்தையோ நகரத்தையோ குறித்துக் கிளம்பின ஒருவன் இங்கிருந்து அந்தமலையை அடைவாயாக, பிறகு ஆலமரத்தை அடைந்து அங்கிருந்து நதியையும் பிறகு கிராமத்தையோ நகரத்தையோ அடையப்போகிறாய் என எவ்வித முபதேசிக்கப் படுகிறானோ இவ்விதமே இங்கும் அர்ச்சிஸ்ஸினின்றும், அஹஸ்ஸையும், அஹஸ்ஸிலிருந்து சுக்கிலபக்ஷத்தையும் என்பதாகச் சுருதி சொல்லுகிறது என்றும். அல்லது போகபூமிகள் என்றாவது கொள்ளலாகும். அதாவது:—"அக்னி லோகத்தை யடைகிறான்" என்றதாதியால் லோகசப்தத்துடன் அக்னியாதிகளை ஸம்பந்தப்படுத்திக் கூறுகிறது என்றும். தேவலோகம், மனுஷ்ய லோகம், பிதிருலோகம் என்றவிடத்தில் லோகசப்தமானது ப்ராணிகளின் போக ஸ்தானங்களில் படிக்கப்பட்டு மிருக்கிறது. அவ்விதமே ப்ராம்ஹணமும் "அவர்கள் அஹோராத்ரலோகங்களில் ஸங்கத்தை யடைகின்றனர்" எனச் சொல்லுகிறது. ஆனது பற்றி அர்ச்சிராதிகள் ஆதிவாஹிக சேதனர்களன்று. அசேதனமாக இருப்பதுபற்றியும் இவற்றுக்கு ஆதிவாஹிகத்துவமானது பொருத்தமற்றதாக வாகிறது. உலகில் சேதனர்களான புருஷர்கள் அன்றோ அரசனை லேவப்

पुरुषा दुर्गेषु मार्गेष्वतिवाह्यानतिवाहयन्तीति। एवं प्राप्ते ब्रूमः—आतिवाहिका एवैते भवितुमर्हन्ति। कुतः—तल्लिङ्गात्। तथाहि 'चन्द्रमसो विद्युतं तत्पुरुषोऽमानवः स एतान्ब्रह्म गमयति' (छा० ४। १५। ५) इति सिद्धवद्गमयितृत्वं दर्शयति। तद्वचनं तद्विषयमेवोपक्षीणमिति चेत्। न। प्राप्तमानवत्वनिवृत्तिपरत्वाद्विशेषणस्य। यद्यर्चिरादिषु पुरुषा गमयितारः प्राप्तास्ते च मानवास्ततो युक्तं तन्निवृत्त्यर्थं पुरुषविशेषणममानव इति॥ ४॥

नन्वु तल्लिङ्गमात्रमगमकं न्यायाभावात्। नैष दोषः।

उभयव्यामोहात्तत्सिद्धेः॥ ५॥

ये तावदर्चिरादिमार्गास्ते देहवियोगात्संपिण्डितकरणग्रामा इत्यस्वतन्त्रा अर्चिरादीनामप्यचेतनत्वादस्वातन्त्र्यमित्यतोऽर्चिराद्यभिमानिनश्चेतना देवताविशेषा अतियात्रायां

பட்டவர்களாய்க் கொண்டு வழிகளில் இட்டுச் சொல்லக்கூடியவர்களை இட்டுச் செல்லுகின்றனர் எனக் காண்கிறோம். என இவ்விதம் பூர்வபக்ஷம் ப்ராப்த்தமாகவே ஸித்தாந்தத்தைச் சொல்லுகிறோம். இவை ஆதிவாஹிகர்களாக ஆவது தான் பொருந்துகிறது. ஏன்? அவ்விஷயமான லிங்கமிருப்பதாலென்க. அதாவது:—"சந்திரனிடமிருந்து வித்யுத்தை யடைந்ததும் அந்த அமானவபுருஷன் இவர்களை ப்ரம்ஹத்தை யடைவிக்கிறான்" என நிஸ்சிதமாகக் கொண்டுசேர்க்கும் தன்மையைத் தெரிவிக்கிறது என்றும். அமானவபுருஷன் ப்ரம்ஹத்தை யடைவிக்கிறான் என்றவசனமானது வித்யுத்தோடுமட்டுமே முடிவடையுமென்கிறோம் எனின்? அவ்விதமில்லை. ப்ராப்த்தமான மானவத்வத்தை நிவிருத்தி செய்யவேண்டியே **अमानवः** (அமானவ:)=என விசேஷணம் (அடைமொழி) கொடுக்கப்பட்டிருப்பதே அதன் காரணமாகும். அர்ச்சிராதிகளில் கொண்டுசேர்ப்பவர் மானவர்களான சேதனர்கள் ப்ராப்த்தர்களானால் அப்பொழுது அவரைவிலக்கவேண்டி புருஷனுக்கு அமானவ: என்ற விசேஷணம் பொருந்தக்கூடியதாகவாகும். (4)

அவதாரிகாபாஷ்யம்.—அது வெறும் லிங்கமாகமட்டு மாகுமேயொழிய சேதனபுருஷனைத் தெரிவிப்பதாகவாகாது. போதிய நியாயமில்லாமையே அதன் காரணமாகும் எனின்? இந்தத்தோஷமில்லை எனச் சொல்லப்படுகிறது.

(ஸூ) உபயவ்யாமோஹாத் தத்ஸித்தே: (5)

(ப—ரை) **उभयव्यामोहात्** (உபயவ்யாமோஹாத்)=மார்க்கம் அதில் செல்லுபவர் இருவரும் க்ஞானமற்றிருப்பதிலிருந்து **तत्सिद्धेः** (தத்ஸித்தேः)=சேதனர்களான ஆதிவாஹிகதேவதைகளின் ஸித்தியானது ஏற்படுகிறது. (5) (எ—று)

பாஷ்யம்.—எவர்கள் அர்ச்சிராதி மார்க்கத்தை யடைந்தனரோ அவர்கள் உருண்டையாக்கப்பட்ட கரணஸமூஹங்களை உடையவர்களாக இருப்பதுபற்றி ஸ்வாதந்திரியமற்றவர்களாயிருப்பது கொண்டும், அர்ச்சிராதி மார்க்கங்களும் அசேதனமாக இருப்பதுபற்றி அவற்றுக்கும் அஸ்வாதந்திரியமிருப்பது கொண்டும் அர்ச்சிராதிகளுக்கு அபிமானிகளும் சேதனர்களுமான தேவதாவிசேஷங்கள் அதி

नियुक्ता इति गम्यते। लोकेऽपि हि मत्तमूर्च्छितादयः संपिण्डितकरणाः परप्रयुक्तवर्त्मानो भवन्ति। अनवस्थितत्वादप्यर्चिरादीनां न मार्गलक्षणत्वोपपत्तिः। नहि रात्रौ प्रेतस्याहःस्वरूपाभिसंभव उपपद्यते। नच प्रतिपालनमस्तीत्युक्तं पुरस्तात्। ध्रुवत्वात्तु देवतात्मनां नायं दोषो भवति। अर्चिरादिशब्दता चैषामर्चिराद्यभिमानादुपपद्यते 'अर्चिषोऽहः' (छा० ४।१५।५, ५।१०।१) इत्यादिनिर्देशस्त्वातिवाहिकत्वेऽपि न विरुध्यते अर्चिषा हेतुनाऽहरभिसम्भवति। अह्ना हेतुना आपूर्यमाणपक्षमिति। तथाच लोके प्रसिद्धेष्वप्यातिवाहिकेष्वेवञ्जातीयक उपदेशो दृश्यते। गच्छ त्वमितो बलवर्माणं ततो जयसिंहं ततः कृष्णगुप्तमिति। अपि चोपक्रमे 'तेऽर्चिरभिसंभवन्ति' (बृ० ६।२।१५) इति संबन्धमात्रमुक्तं न संबन्धविशेषः कश्चित्। उपसंहारे तु 'स एतान्ब्रह्म गमयति' (छा० ४।१५।६) इति संबन्धविशेषोऽतिवाह्यातिवाहकत्वलक्षण उक्तस्तेन स एवोपक्रमेऽ-

---

யாத்ரையில் நியுக்தர்கள் எனவறியக்கிடக்கிறது. உலகிலுங்கூட மதங்கொண்டவர் மூர்ச்சையடைந்தவர் முதலியோர் ஒன்றுபட்ட கரணங்களையுடையவர்களாய் பிறரால் காட்டப்பட்ட மார்க்கங்களை உடையவர்களாகவே காணவும் படுகின்றனர். அர்ச்சிராதிகள் நிலைத்தனவாக இல்லாததுபற்றியும் அவற்றுக்கு மார்க்கலக்ஷணத் தன்மை பொருந்தக் கூடாததாகவே இருக்கிறது. ராத்திரியில் மரித்தவருக்கு பகலின் ஸ்வரூபப்ராத்தியானது பொருத்தமுள்ளதாகவு மாகமாட்டாது. இரவில் மரித்தவன் பகல் காலத்தை எதிர்பார்க்கிறான் என்பது ஸம்பவிக்காது என முன்னர் சொல்லவும் பட்டிருக்கிறது. தேவதாரூபமான ஆத்மாக்கள் நிலைத்தவர்களாக இருப்பதுபற்றி இந்தத்தோஷம் ஸம்பவிக்கமாட்டாது. இவர்களுக்கு அர்ச்சிராதி சப்தங்களால் சொல்லப்படுதலானது இவர்கள் அர்ச்சிராதிகளுககு அபிமானிகளாக இருப்பதுபற்றி பொருந்தக்கூடியதாகவு மாகிறது. "அர்ச்சிஸ்ஸினின்றும் அஹஸ்ஸையடைகிறான்" என்றதாதி நிர்த்தேசமோ வெனில் ஆதிவாஹிகத்வம் சொன்னபோதிலுங்கூட விரோதப்படுவதற்கில்லை. அர்ச்சிஸ்ஸாகிற ஹேதுவினால் அஹஸ்ஸை யடைகிறான். அஹஸ்ஸாகிற ஹேதுவினால் சுக்கிலபக்ஷத்தை யடைகிறான் என்றும். அவ்விதமே உலகில் ப்ரஸித்தர்களான ஆதிவாஹிகர்களிடத்தில் இம்மாதிரியான உபதேசமானது காணவும்படுகிறது. அதாவது: நீ இங்கிருந்து பலவர்மா என்பவனை அடைவாயாக. அங்கிருந்து ஜயஸிம்ஹனையும், அங்கிருந்து கிருஷ்ணகுப்தனையும் அடைவாயாக என்றும்.

மேலும் உபக்ரமத்தில் "அவர்கள் அர்ச்சிஸ்ஸை அடைகின்றனர்" என்றவிடத்தில் பொதுப்படையான ஸம்பந்தம் மட்டும சொல்லப்பட்டதே யொழிய ஸம்பந்தவிசேஷமொன்றும் சொல்லப்படவில்லை. உபஸம்ஹாரத்திலோ வெனில் "அவன் இவர்களை ப்ரம்ஹத்தை அடையச் செய்விக்கிறான்" என்பதாய் ஆதிவாஹ்ய ஆதிவாஹகத்வ ரூபமான ஸமபந்த விசேஷமானது சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் உபக்ரமத்திலுங்கூட அதேஸம்பந்த விசேஷந்தான் சொல்லவேண்டுமென நிச்சயிக்கப்படுகிறது. செல்லுபவர் ஒன்றுசேர்ந்த கரணஸமூஹங்களுள்ளவராக இருப்பதுபற்றியே அங்கு அவர்க்கு உபபோகமானது ஸம்பவிக்க

पीति निर्धार्यते। संपिण्डितकरणत्वादेव च गन्तॄणां न तत्रोपभोगसंभवः। लोकशब्दस्त्वनुपभुञ्जानेष्वपि गन्तृषु गमयितुं शक्यते। अन्येषां तल्लोकवासिनां भोगभूमित्वात्। अतोऽग्निस्वामिकं लोकं प्राप्तोऽग्निनाऽतिवाह्यते वायुस्वामिकं प्राप्तो वायुनेति योजयितव्यम् ॥ ५ ॥

कथं पुनरातिवाहिकत्वपक्षे वरुणादिषु तत्संभवः। विद्युतो ह्यधि वरुणादय उपक्षिप्ता विद्युतस्त्वनन्तरमाब्रह्मप्राप्तेरमानवस्यैव पुरुषस्य गमयितृत्वं श्रुतमिति। अत उत्तरं पठति—

वैद्युतेनैव ततस्तच्छ्रुतेः ॥ ६ ॥

ततो विद्युदभिसंभवनादूर्ध्वं विद्युदनन्तरवर्तिनैवामानवेन पुरुषेण वरुणलोकादिष्वतिवाह्यमाना ब्रह्मलोकं गच्छन्तीत्यवगन्तव्यम्। 'तान्वैद्युतात्पुरुषोऽमानवः स एत्य ब्रह्म-

---

மாட்டாது. லோகசப்தமோவெனில் செல்லுபவர்கள் விஷயங்களை அனுபவிக்காமலிருந்தபோதிலுங்கூட பொருந்திவிடக்கூடியதாக வாகலாம். அந்த லோகத்தில் வஸிக்கின்ற மற்றவர்களுக்கு அதுபோக பூமியாக வாவதே அதன்காரணமாகும். ஆகவே அக்னியை ஸ்வாமியாக (யஜமானனுக) உடைய லோகத்தை யடைந்தவன் அக்னியினுல் அதிவாஹிக்க (சேர்ப்பிக்கப்) படுகிருன். வாயுவை ஸ்வாமியாக வுடைய லோகத்தை யடைந்தவன் வாயுவினுல் சேர்ப்பிக்கப்படுகிருன் எனப் பொருத்திப் பொருள் கொள்ளவேண்டும். (5) (எ-று)

அவதாரிகா பாஷ்யம்.—ஆதிவாஹிகத்வம் சொல்லும் பக்ஷத்தில் வருணுதிகளிடத்தில் அது எவ்விதம் ஸம்பவிக்கும். வித்யுத்துக்குமேல் வருணுதிகள் சொல்லப்பட்டிருக்கின்றனர். வித்யுத்துக்குப் பிறகோ ப்ரம்ஹப்ராப்திவரை அமானவ புருஷனே அழைத்துச் செல்லுபவனுகச் சொல்லப்பட்டிருக்கிறது எனின்? இவ் விஷயத்தில் பதிலைச் சொல்லுகிருர்—

(ஸூ) வைத்யுதேனைவ ததஃ தச்சுருதேஃ (6)

(ப-ரை) ततः (ததஃ)=வித்யுத்தை யடைந்தபிறகு वैद्युतेनैव(வைத்யுதேனைவ)= வித்யுத்துக்கு அடுத்துள்ள அமானவபுருஷனுலேயே வருணுதிகளான லோகங்களில் அழைத்துச் செல்லப்படுகின்றவர்களாய் ப்ரம்ஹலோகத்தை அடைகின்றனர் எனக் கண்டுகொள்ளவேண்டும். ஏன்? तच्छ्रुतेः (தத்சுருதேஃ)=அவ்விதம் சுருதியிருப்பதே அதன் காரணமாகும். (6) (எ-று)

பாஷ்யம்.—பிறகு=வித்யுத்தை யடைந்ததற்குப் பிறகு வித்யுத்துக்கு அடுத்தபடியாக விருக்கின்ற அமானவபுருஷனுலேயே வருணுதிகளான லோகங்களில் அழைத்துச் செல்லபடுகின்றவர்களாய் ப்ரம்ஹ லோகத்தை யடைகின்றனர் எனவறிந்து கொள்ள வேண்டும். "அவர்களை வித்யுதபிமானியினிடமிருந்து அந்த அமானவபுருஷன் வந்து ப்ரம்ஹலோகத்தை அடைவிக்கிருன்" என அந்த அமானவபுருஷனுக்கே அழைத்துச் செல்லும் தன்மை சுருதியில் சொல்லப்பட்

लोकं गमयति' इति तस्यैव गमयितृत्वश्रुतेः। वरुणादयस्तु तस्यैवाप्रतिबन्धकरणेन साहाय्यानुष्ठानेन वा केनचिदनुग्राहका इत्यवगन्तव्यम्। तस्मात्साधूक्तमातिवाहिका देवतात्मानोऽर्चिरादय इति॥ ६॥

५ कार्याधिकरणम्। सू० ७-१४

कार्यं बादरिरस्य गत्युपपत्तेः॥ ७॥

परं ब्रह्माथवा कार्यमुदङ्मार्गेण गम्यते। मुख्यत्वादमृतत्वोक्तेर्गम्यते परमेव तत्॥ १॥
कार्यं स्याद्गतियोग्यत्वात् परस्मिंस्तदसंभवात्। सामीप்யाद्ब्रह्मशब्दोक्तिरमृतत्वं क्रमाद्भवेत्॥ २॥

டிருப்பதாலென்க. வருணாதிகளோவெனில் அந்த அமானவபுருஷனுக்கே தடை செய்யாமையினாலோ, வேறு உதவிசெய்வதினாலோ உபகரிக்கின்றனர் என வறிய வேண்டும். ஆனதுபற்றி அர்ச்சிராதிகள் ஆதிவாஹிகர்களான தேவதா ஸ்வரூப முள்ளவர் என்று சொல்லப்பட்டது ஸாதுவாகவே ஆகிறது. (6) (எ-று)

நான்காவது ஆதிவாஹிகாதிகரணம் முற்றிற்று.

கார்யாதிகரணம் 5.

(அ-கை) இதுவரை மார்க்கமானது சொல்லப்பட்டது. இந்தமார்க்கத்தினால் அடையப்படுவது இன்னதென்பதைச் சொல்லவேண்டி 8 ஸூத்திரங்கள் கொண்ட இந்த அதிகரணம் ஆரம்பிக்கப்படுகிறது. இதில் முதலிலுள்ள 5ஸூத்திரங்களால் ஸித்தாந்தமும், பின்னுள்ள 3ஸூத்திரங்களால் பூர்வபக்ஷமும் சொல்லப்படுகிறது. அவற்றுள் முதலிலுள்ள ஸித்தாந்த ஸூத்திரம் பின்வருமாறு—

(ஸூ) கார்யம் பாதரி: அஸ்யகத்யுபபத்தே: (7)

(ப-ரை) **कार्यम्** (கார்யம்)=ஸகுணப்ரம்ஹத்தையே அமானவபுருஷன் அடையச் செய்விக்கின்றான் என **बादरिः** (பாதரி:)=பாதரி என்ற ஆசிரியர் எண்ணுகிறார். ஏன்? **अस्य** (அஸ்ய)=இந்த ஸகுணப்ரம்ஹத்துக்கு **गत्युपपत्तेः** (கத்யுபபத்தே:)=கதி (மார்க்கம்) பொருந்தக்கூடியதாக விருப்பதே அதன் காரணமாகும். (7)

வையாஸிக நியாயமாலை.

(க-ரை) உத்தராயண மார்க்கத்தினால் அடையப்படுவது பரம்ப்ரம்ஹமா? அல்லது அபர (ஸகுண) ப்ரம்ஹமா? என்பது ஸந்தேஹம். அமிருதத்வம் சொன்னது முக்கியமாகவாகவேண்டி பரப்ரம்ஹமே தான் உத்தராயண மார்க்கத்தினால் அடையப்படுகிறது என்பது **பூர்வபக்ஷம்.** மார்க்கம் பொருந்தக்கூடியதாக வாகவேண்டியும், பரப்ரம்ஹத்தினிடத்தில் மார்க்கம் ஸம்பவிக்காதாகையாலும் ஸகுணப்ரம்ஹமேதான் அர்ச்சிராதி மார்க்கத்தினால் அடையப்படுவதாக ஏற்படுகிறது. "இவர்களை ப்ரம்ஹத்தை யடையச்செய்கிறான்" என்பதாய் ஸகுணப்ரம்ஹத்தினிடத்தில் ப்ரம்ஹசப்தப்ரயோகமானது நிர்க்குணப்ரம்ஹத்துக்கே ஸகுணமாகவிருத்தல் ஏற்படுவதை யொட்டி செய்யப்பட்டதாக வாகிறது. அமிருதத்வமானது கிரமமுக்தியை யொட்டிச் சொல்லப்பட்டது என்பது **ஸித்தாந்தம்.**

'स एनान्ब्रह्म गमयति' (छां० ४।१५।५) इत्यत्र विचिकित्स्यते—किं कार्यमपरं ब्रह्म गमयत्याहोस्वित्परमेवाविकृतं मुख्यं ब्रह्मेति। कुत: संशय।: ब्रह्मशब्दप्रयोगाद्गतिश्रुतेश्च। तत्र कार्यमेव सगुणमपरं ब्रह्मैनान्गमयत्यमानव: पुरुष इति बादरिराचार्यो मन्यते। कुत:—अस्य गत्युपपत्ते:। अस्य हि कार्यब्रह्मणो गन्तव्यत्वमुपपद्यते प्रदेशवत्त्वात्। नतु परस्मिन्ब्रह्मणि गन्तृत्वं गन्तव्यत्वं गतिर्वाऽवकल्पते। सर्वगतत्वात्प्रत्यगात्मत्वाच्च गन्तृणाम्॥ ७॥

विशेषितत्वाच्च॥ ८॥

'ब्रह्मलोकान्गमयति ते तेषु ब्रह्मलोकेषु पराः परावतो वसन्ति' (बृ० ६।२।१५)

பாஷ்யம்—"அந்த அமானவபுருஷன் இவர்களை ப்ரம்ஹத்தை யடையச் செய்கிறான்" என்றவிடத்தில் காரிய ப்ரப்ஹத்தை யடையச் செய்கின்றானா? அல்லது எவ்வித விகாரமுமற்றதும் முக்கியமுமான பரப்ரம்ஹத்தையே அடையச் செய்கிறானா? என ஸந்தேஹிக்கப்படுகிறது. எதனால் ஸந்தேஹமுண்டாகிறது எனின்? ப்ரம்ஹசப்த ப்ரயோகமிருப்பதும், கதி சொல்லியிருப்பதுமே அதன் காரணமாகும். அவ்விடத்தில் கார்யமான=ஸகுணமான அபரப்ரம்ஹத்தையே அந்த அமானவபுருஷன் இவர்களை யடையச்செய்கிறான் எனப் பாதரி என்ற ஆசிரியர் எண்ணுகிறார். ஏன்? இந்த ஸகுணப்ரப்ஹத்துக்கு கமனம் பொருந்தக்கூடியதாக விருப்பதே அதன் காரணமாகும். இந்தக் கார்ய (ஸகுண) ப்ரம்ஹத்துக்கன்றோ அடையக்கூடியதாக விருத்தல் பொருந்தக்கூடியதாகவாகிறது. வேறுப்ரதேசமுள்ளதாக அது இருப்பதே அதன் காரணமாகும். பரப்ரம்ஹத்திணிடத்தில் கந்திருத்வமோ, (கமனகர்த்ருத்வமோ) கந்தவ்யத்வமோ (அடையக்கூடியதாகவிருத்தலோ) கதியோ பொருந்தமாட்டாதன்றோ. அது எங்கும் நீக்கமற நிறைந்திருப்பதும் போகின்றவர்களின் ப்ரத்யகாத்மரூபமாக விருப்பதுமே அதன் காரணமாகும்.

(ஸூ) விசேஷிதத்வாத் ச (8)

(ப-ரை) "ब्रह्मलोकान् गमयति ते तेषु ब्रह्मलोकेषु परा: परावतो वसन्ति" அமானவபுருஷன் ப்ரம்ஹலோகங்களை அடைவிக்கிறான் சிறந்தவர்களான அவர்கள் தனது உபாஸகர்களை ரக்ஷிக்கின்ற ஹிரண்யகர்ப்பருடைய அந்தலோகங்களில் வஸிக்கின்றனர் என்றவிடத்தில் विशेषितत्वाच्च (விசேஷிதத்வாத்ச)=ப்ரம்ஹசப்தத்துக்கு லோகான் என்பதாய் பஹுவசனமுள்ள (பன்மையைக் கூறுகின்ற) லோகசப்தத்தை விசேஷ்யமாகக் கொடுத்திருப்பதாலும் "सएनान् ब्रह्मगमयति அமானவபுருஷன் இவர்களை ப்ரம்ஹத்தை யடையச்செய்விக்கிறான்" என்றவிடத்திலுள்ள ப்ரம்ஹ சப்தத்தால் கார்யமான ஸகுணப்ரம்ஹமே தான் சொல்லப்படும். (8) (எ-று)

பாஷ்யம்.—"(அமானவ புருஷன்) ப்ரம்ஹலோகங்களை அடைவிக்கிறான் பரர்களான (சிறந்த வுபாஸகர்களான) அவர்கள் தனது உபாஸகர்களை ரக்ஷிக்கி

इति च श्रुत्यन्तरे विशेषितत्वात्कार्यब्रह्मविषयैव गतिरिति गम्यते। नहि बहुवचनेन विशेषणं परस्मिन्ब्रह्मण्यवकल्पते। कार्ये त्ववस्थाभेदोपपत्तेः संभवति बहुवचनम्। लोकश्रुतिरपि विकारगोचरायामेव सन्निवेशविशिष्टायां भोगभूमावाञ्जसी। गौणी त्वन्यत्र 'ब्रह्मैव लोक एष सम्राट्' इत्यादिषु। अधिकरणाधिकर्तव्यनिर्देशोऽपि परस्मिन्ब्रह्मण्यनाञ्जसः स्यात्। तस्मात्कार्यविषयमेवेदं नयनम् ॥ ८ ॥

ननु कार्यविषयेऽपि ब्रह्मशब्दो नोपपद्यते, समन्वये हि समस्तस्य जगतो जन्मादिकारणं ब्रह्मेति स्थापितमिति। अत्रोच्यते—

सामीप्यात्तु तद्व्यपदेशः ॥ ९ ॥

तुशब्द आशङ्काव्यावृत्त्यर्थः। परब्रह्मसामीप्यादपरस्य ब्रह्मणस्तस्मिन्नपि ब्रह्मशब्द-

---

ன்ற ப்ரம்ஹத்தினுடைய அந்த லோகங்களில் வஸிக்கின்றனர்" என்ற வேறு (ப்ருஹதாரண்யக) ஶ்ருதியில் (ப்ரப்ஹமானது பன்மையைக் கூறுகின்ற லோக சப்தத்தினால்) விசேஷிக்கப்பட்டிருப்பதிலிருந்து (ப்ரப்ஹசப்தத்துக்கு லோகசப் தத்தை விசேஷ்யமாகக் கொடுத்திருப்பதிலிருந்து "ஸஏநான் ப்ரம்ஹ கமய்தி" என்றவிடத்திலும்)ஸகுணப்ரப்ஹவிஷயமான கதியே(மார்க்கமே)தான் சொல்லப் படுவதாக அறியப்படுகிறது. பரப்ரப்ஹத்தினிடத்தில் பஹுவசனத்தினால் விசேஷணமானது ஸம்பவிக்கமாட்டாதன்றோ. ஸகுணப்ரம்ஹத்தினிடத்திலோவெனில் அவஸ்தாபேதம் பொருந்தலாமானதால்பஹுவசனம் ஸம்பவிக்கலாம். (ப்ரம்ஹ லோக) என்றவிடத்திலுள்ள லோகசப்தமும் கார்யவர்க்கத்தில் சேர்ந்ததும் ஒரு மாதிரியான அமைப்புடன் கூடினதுமான போகபூமியில்தான் முக்கியமாகப் பொருந்துகிறது. "ப்ரம்ஹமே தான் லோகம் இதுவே ஸம்ராட்" என்றதாதி வேறிடத்திலோ வெனில் லோகசப்தமானது கௌணமாகவாகிறது. லோகங்களில் வஸிக்கின்றனர் என்பதாய் லோகங்களை ஆதாரமாகவும் வஸிப்பவரை ஆதேயமாகவும் சுருதி சொல்லுவதானது பரப்ரம்ஹத்தினிடத்தில் ருஜுவாகப் பொருந்தவும் மாட்டாது. ஆகவே இந்த நயநமானது (அடைவித்தலானது) ஸகுணப்ரம்ஹவிஷயமானதே தான் என்பது நிலேக்கிறது. (8)

அவதாரிகா பாஷ்யம்.—சங்கை—ஸகுணப்ரப்ஹத்தினிடத்திலும் கூட ப்ரம்ஹசப்தமானது பொருந்தமாட்டாது. ஸமன்வயாத்தியாயத்தில் எல்லாஜகத்துக்கும் ப்ரம்ஹம் ஜன்மாதிகாரணமென ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றதன்றோ எனின்? இவ்விஷயத்தில் அடுத்த ஸூத்திரத்தினால் பதில்சொல்லப்படுகிறது.

(ஸூ) ஸாமீப்யாத்துதத்வ்யபதேச: (9)

(ப—ரை) **तु** (து)=முற்கூறிய ஆசங்கை பொருந்தாது. **सामीप्यात्** (ஸாமீப்யாத்)=அபரப்ரம்ஹத்துக்கு பரப்ரம்ஹத்தினது ஸாமீப்யமானது (அபேதமானது) இருப்பதால் **तद्व्यपदेशः** (தத்வ்யபதேசஃ)=ப்ரம்ஹசப்தத்தினால் ஸகுணப்ரம்ஹமும் உபதேசிக்கப்படுகிறது. (9)

பாஷ்யம்.—ஸூத்திரத்திலுள்ள **து** என்ற சப்தமானது ஆசங்கையைப்

प्रयोगो न विरुध्यते । परमेव हि ब्रह्म विशुद्धोपाधिसंबन्धं क्वचित्कैश्चिद्विकारधर्मैर्मनोमयत्वादिभिरुपासनायोपदिश्यमानमपरमितिस्थितिः ॥ ९ ॥

ननु कार्यप्राप्तावनावृत्तिश्रवणं न घटते । नहि परस्माद्ब्रह्मणोऽन्यत्र क्वचिन्नित्यतां संभावयन्ति । दर्शयति च देवयानेन पथा प्रस्थितानामनावृत्तिम् 'एतेन प्रतिपद्यमाना इमं मानवमावर्तं नावर्तन्ते' (छा० ४ । १५ । ६) इति, तेषामिह न पुनरावृत्तिरस्ति 'तयोर्ध्वमायन्नमृतत्वमेति' (छा० ८ । ६ । ६, क० ६ । १६) इति चेत् । अत्र ब्रूमः—

कार्यात्यये तदध्यक्षेण सहातः परमभिधानात् ॥ १० ॥

कार्यब्रह्मलोकप्रलयप्रत्युपस्थाने सति तत्रैवोत्पन्नसम्यग्दर्शनाः सन्तस्तदध्यक्षेण हिरण्यगर्भेण सहातः परं परिशुद्धं विष्णोः परमं पदं प्रतिपद्यन्त इति । इत्थं क्रममुक्तिर-

---

போக்குகிறது. பரம்ப்ரம்ஹத்தினது ஸாமீப்யம் (வாஸ்தவாபேதம்) அபரப்ரம்ஹத்துக்கிருப்பதால் அந்த அபரப்ரம்ஹத்தினிடத்திலுங்கூட ப்ரம்ஹசப்தத்தைப் பிரயோகித்தது முறண்படமாட்டாது. பரப்ப்ரம்ஹமே விசுத்தமான உபாதிஸம்பந்தமுள்ளதாயும் மனோமயத்வம் முதலிய சிலவிகார (காரிய) தர்மங்களுடன் கூடினதாயும் சிலவிடத்தில் உபாஸனைக்கு வேண்டி உபதேசிக்கப்படுவதால் அது அபரம்ப்ரம்ஹமெனப்படுகிறது. (9) (எ—று)

அவதாரிகா பாஷ்யம்.—சங்கை—கார்யப்ரம்ஹ ப்ராப்த்தி சொல்லும் பக்ஷத்தில் சுருதியில் ஆவிருத்தி (திருப்புதல்) யின்மை சொன்னது பொருந்தமாட்டாது. பரப்ரம்ஹத்தைத் தவிர்த்து வேறு ஒருவிடத்திலும் நித்யத்வமிருப்பதாக ஊஹிக்கவும் முடியாதன்றோ? சுருதியோ தேவயான மார்க்கத்தினால் போகிறவர்களுக்கு "இவ்வழியினால் ப்ரம்ஹலோகத்தை யடைடவர் இந்த மன்வந்தரம் முழுவதும் திரும்பமாட்டார்" என்பதாய் திருப்புதலின் இன்மையைத் தெரிவித்திருக்கிறது. "அந்த ஸுஷும்னா நாடியினால் உயரக்கிளம்புபவர் அமிருதத்வத்தை யடைகிறார்" என்பதாய் அவர்களுக்கும் திருப்புதலினின்மையைச் சொல்லியிருக்கிறது எனின்? இவ்விஷயத்தில் சொல்லப்படுகிறது—

(ஸூ) கார்யாத்யயே ததத்யக்ஷேண ஸஹ அத: பரமபிதானாத்

(ப—ரை) कार्यात्यये (கார்யாத்யயே)=ஹிரண்யகர்ப்பலோகத்துக்கு நாசம் வந்ததும் तदध्यक्षेण सह (ததத்யக்ஷேண ஸஹ)=அந்த லோகாதிபதியான ஹிரண்யகர்ப்பருடன் கூட अतः परम् (அத: பரம்)=இதற்கு மேல்பட்ட நிர்க்குண ப்ரம்ஹ ஸ்வரூபத்தை அடைகின்றனர். अभिधानात् (அபிதானாத்)=சுருதியில் அவ்விதமே சொல்லப்பட்டு மிருக்கிறது. (10)

பாஷ்யம்.—கார்யமான ப்ரம்ஹலோகத்துக்கு ப்ரளயமானது வந்ததும் அவ்விடத்திலேயே உண்டான ஸம்யக்தர்சனத்தை (அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தை) யுடையவர்களாய்க் கொண்டு அந்த லோகத்துக்கு அத்யக்ஷரான ஹிரண்யகர்ப்ப

नावृत्त्यादिश्रुत्यभिधानेभ्योऽभ्युपगन्तव्या। नह्यञ्जसैव गतिपूर्विका परप्राप्तिः संभवतीत्युपपादितम् ॥ १० ॥

स्मृतेश्च ॥ ११ ॥

स्मृतिरप्येतमर्थमनुजानाति—'ब्रह्मणा सह ते सर्वे संप्राप्ते प्रतिसंचरे। परस्यान्ते कृतात्मानः प्रविशन्ति परं पदम्' इति। तस्मात्कार्यब्रह्मविषया गतिः श्रूयत इति सिद्धान्तः ॥ ११ ॥ कं पुनः पूर्वपक्षमाशङ्क्यायं सिद्धान्तः प्रतिष्ठापितः 'कार्यं बादरिः' (ब्र० सू० ४। ३। ७) इत्यादिनेति। स इदानीं सूत्रैरेवोपदर्श्यते—

परं जैमिनिर्मुख्यत्वात् ॥ १२ ॥

ருடன் கூட இதற்கு மேற்பட்டதும் விசுத்தமும் ஆன வியாபகமான (எங்கும் நீககமற நிறைந்துள்ள) பரமாத்மாவினுடைய மேலான ஸ்வரூபத்தை அடைகின்றனர் என்றும். இத்தகைய க்ரமமுக்தியையோ அனுவிருத்தியாதிகளைச் சொல்லும் சுருதிகளிலிருந்து ஒப்பித்திரவேண்டி வருகிறது. கதியை முன்னிட்ட பரப்ராப்தியானது ருஜுவாக ஸம்பவிக்கவே மாட்டாது எனச் சொல்லப்பட்டுமிருக்கிறது. (10) (எ—று)

(ஸூ) ஸ்மிருதே: ச (11)

(ப—ரை) **स्मृतेश्च** (ஸ்மிருதேஶ்ச)=ஸ்மிருதியிலிருந்தும் முற்கூறிய பொருள் நிஶ்சிதமாகக் கிடைக்கிறது. (11)

பாஷ்யம்.—"ப்ரளயமானது வந்ததும் (ஹிரண்யகர்ப்பருடைய ஸமஷ்டிலிங்க சரீரரூபமான விகாரத்துக்கு நாசமேற்பட்டதும்) சுத்தமான புத்தியையுடையவர்களான ப்ரம்ஹலோகவாஸிகள் யாவரும் ஸம்யக்ஞானத்தை யடைந்தவர்களாய் மோக்ஷத்தை யடைகின்ற ப்ரம்ஹதேவனுடன் கூட பரமபதத்தை (எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ப்ரம்ஹஸ்வரூபத்தை) யடைகின்றனர். அதாவது ப்ரம்ஹமாக ஆகின்றனர்" என்ற ஸ்மிருதியும் இந்த அர்த்தத்தை அனுமதிக்கின்றது. ஆகவே கார்யப்ரம்ஹவிஷயமான கதியானது சுருதியில் சொல்லப்பட்டது என்பது ஸித்தாந்தம். (11) (எ—று)

அவதாரிகா பாஷ்யம்.—எத்தகைய பூர்வபக்ஷத்தை ஆசங்கித்துக் கொண்டு "கார்யம்பாதரி:" என்றதாதியால் ஸித்தாந்தம் செய்யப்பட்டது எனின்? அந்த பூர்வபக்ஷமானது இதுபோழ்து ஸூத்திரங்களினால் சொல்லப்படுகிறது.—

(ஸூ) பரம் ஜைமினிர் முக்யத்வாத் (12)

(ப—ரை) **स एनान्ब्रह्म गमयति** (ஸ ஏநான் ப்ரம்ஹ கமயதி)=என்ற விடத்தில் பரப்ப்ரம்ஹத்தையேதான் அமானவபுருஷன் அடைவிக்கிறான் என்று **जैमिनिः** (ஜைமினி:)=ஜைமினி என்ற ஆசிரியர் எண்ணுகிறார். ஏன்? **मुख्यत्वात्** (முக்யத்வாத்)=ப்ரம்ஹ சப்தத்துக்கு பரம்ப்ரம்ஹம் முக்கியமான பொருளாக இருப்பதே அதன் காரணமாகும். (12) (எ—று)

जैमिनिस्त्वाचार्यः 'स एनान्ब्रह्म गमयति' (छा० ४। १५। ६) इत्यत्र परमेव ब्रह्म प्रापयतीति मन्यते। कुतः—मुख्यत्वात्। परं हि ब्रह्म ब्रह्मशब्दस्य मुख्यमालम्बनं, गौणमपरं, मुख्यगौणयोश्च मुख्ये संप्रत्ययो भवति ॥ १२ ॥

दर्शनाच्च ॥ १३ ॥

'तयोर्ध्वमायन्नमृतत्वमेति' (छा० ८। ६। ६, क० ६। १६) इति च गतिपूर्वकममृतत्वं दर्शयति। अमृतत्वं च परस्मिन्ब्रह्मण्युपपद्यते न कार्ये, विनाशित्वात्कार्यस्य। 'अथ यत्रान्यत्पश्यति तदल्पं तन्मर्त्यम्' (छा० ७। २४। १) इति प्रवचनात्। परविषयैव चैषा गतिः कठवल्लीषु पठ्यते। नहि तत्र विद्यान्तरप्रक्रमोऽस्ति 'अन्यत्र धर्मादन्यत्राधर्मात्' (क० २। १४) इति परस्यैव ब्रह्मणः प्रक्रान्तत्वात् ॥ १३ ॥

பாஷ்யம்.—"அந்த அமானவ புருஷன் இவர்களை ப்ரப்ஹத்தை அடையச் செய்விக்கிறான்" என்றவிடத்தில் பரப்ப்ரப்ஹத்தையே அடைவிக்கிறான் எனவறியக்கிடக்கிறது என ஜைமினி என்ற ஆசிரியர் எண்ணுகிறார். ஏன்? முக்கியமாக இருப்பதாலென்க. பரப்ப்ரப்ஹமன்றோ ப்ரம்ஹசப்தத்துக்கு முக்கியமான பொருளாகவும் அபரப்ப்ரப்ஹம் கௌணமாகவும் ஆகிறது. முக்கியம் கௌணம் இவற்றுக்குள் முக்கியத்தைக் கொள்ளுவதுதான் பொருந்துகிறது. (12) (எ—று)

(ஸூ) தர்சனாத்ச (13)

(ப—ரை) "அந்த ஸூஷும்ன நாடியினால் மேலுள்ள லோகத்தை யடைந்து அமிருதத்வத்தையடைகிறான்" என்றவிடத்தில் சுருதியில் **दर्शनाच्च** (தர்சனாத்ச)= கதியை முன்னிட்டு அமிருதத்வத்தைச் சொல்லியிருப்பதும் மற்றொரு காரணமாகும். (13) (எ—று)

பாஷ்யம்.—"அந்த ஸூஷும்னநாடியினால் மேலுள்ளலோகத்தை யடைந்து அமிருதத்வத்தை யடைகிறான்" என்றவிடத்தில் கதியை முன்னிட்டு அமிருதத்வத்தைச் சுருதி காண்பித்து மிருக்கிறது. அமிருதத்வமும் பரம்ப்ரம்ஹத்தினிடத்தில் பொருந்துமே யொழிய காரிய(ஸகுண)ப்ரம்ஹத்தினிடத்தில் பொருந்தாது. * காரியமானது அழிவுள்ளதாக இருப்பதே அதன் காரணமாகும். "பிறகு என்னிலையில் அன்யத்தை=பரம்ப்ரம்ஹத்தை விட வேறானவொன்றைப் பார்க்கின்றானோ• அது அல்ப (காரிய) மாகும். அது அழியக்கூடியதுமாகும்" எனச் சாந்தோக்கியத்தில் சொல்லப்பட்டுமிருக்கிறது. பரப்ரப்ஹவிஷயமாகவே உள்ள இந்தக் கதியானது கடவல்லிகளில் படிக்கப்படுகிறது. அவ்விடத்தில் வேறுவித்தையின் தொடக்கமில்லை யன்றோ. "தர்மத்தைவிட வேறுபட்டதும் அதர்மத்தைவிட வேறுபட்டதும்" என்றதால் பரப்ப்ரப்ஹமே உபதேசிக்கத் தொடங்கப்பட்டிருப்பதே அதன் காரணமாகும். (13) (எ—று)

---

* ப்ரம்ஹோபாதியின் நாசத்தை யொட்டி உபாதியின்மூல மேற்பட்ட நாசமானது காரியப்ராம்ஹத்துக்கும் சொல்லப்பட்டதாகக் கொள்ளவேண்டும்.

नच कार्ये प्रतिपत्त्यभिसन्धिः ॥ १४ ॥

अपिच 'प्रजापतेः सभां वेश्म प्रपद्ये' (छा० ८।१४।१) इति नायं कार्यविषयः प्रतिपत्त्यभिसन्धिः 'नामरूपयोर्निर्वहिता ते यदन्तरा तद्ब्रह्म' (छा० ८।१४।१) इति कार्यविलक्षणस्य परस्यैव ब्रह्मणः प्रकृतत्वात्। 'यशोऽहं भवामि ब्राह्मणानाम्' (छा० ८।१४।१) इति च सर्वात्मत्वेनोपक्रमणात्। 'न तस्य प्रतिमा अस्ति, यस्य नाम महद्यशः' (श्वेता० ४।१९) इति च परस्यैव ब्रह्मणो यशोनामत्वप्रसिद्धेः। सा चेयं वेश्मप्रतिपत्तिर्गतिपूर्विका हार्दविद्यायामुदिता 'तदपराजिता पूर्ब्रह्मणः प्रभुविमितं हिरण्मयम्' (छा० ८।५।३) इत्यत्र। पदेरपि च गत्यर्थत्वान्मार्गापेक्षाऽवसीयते। तस्मात्पर-ब्रह्मविषया गतिश्रुतय इति पक्षान्तरम्॥

तावेतौ द्वौ पक्षावाचार्येण सूत्रितौ गत्युपपत्त्यादिभिरेको मुख्यत्वादिभिरपरः। तत्र

(ஸூ) நச கார்யே ப்ரதிபத்யபிஸந்தி: (14)

(ப-ரை) प्रतिपत्त्यभिसन्धिः (ப்ரதிபத்யபிஸந்தி:)="ப்ரஜாபதியின் ஸபையாகிற வேஶ்மாவை (வீட்டை) யடைவேனுக" என்றதாற் சொல்லப்படும் இந்த வேஶ்ம ப்ராப்த்தி த்யானமானது कार्ये (கார்யே)=கார்ய ப்ரம்ஹவிஷயத்தில் नच (நச)= பொருந்தவும் மாட்டாது. அது கார்யவிலக்ஷணமான பரப்ரம்ஹத்தின் ப்ரகரண மாக விருப்பதே அதன் காரணமாகும். (14) (எ-று)

பாஷ்யம்.—மேலும் "ப்ரஜாபதியினுடைய ஸபையாகிற வீட்டையடைவே னுக" என்ற இது கார்யப்ரம்ஹவிஷயமான ப்ராப்த்தி த்யானமன்று. "நாமரூ பங்களை வஹிக்கிறது. அந்த நாமரூபங்கள் எதில் கல்பிக்கப்பட்டனவோ அது ப்ரம்ஹம்" என்பதாய் கார்யவிலக்ஷணமான (கார்யப்ரம்ஹத்தைவிட வேறுபட்ட) பரப்ரம்ஹத்தினுடைய ப்ரகரணமாக இருப்பதே அதன் காரணமாகும். "நான் ப்ராம்ஹணர்களின் ஆத்மாவாக ஆகிறேன்" என ஸர்வாத்மபாவத்துடன் உபக் கிரமம் காணப்படுகிறது. "எதற்கு மஹத்யஶஸ் என்ற பெயரோ அதற்கு ஸமா னமானதொன்றுமில்லை" என்பதாய் பரம்ப்ரம்ஹத்துக்கே யஶஸ் என்ற பெயருள் ளதாக இருத்தல் ப்ரஸித்தமாகவு மிருக்கிறது. அந்த இந்த வேஶ்மப்ராப்த்தியா னது கதியை முன்னிட்டு ஏற்படுவதாக தஹரவித்யையில் சொல்லப்பட்டிருக்கி றது. அதாவது:—"அந்தப்ரம்ஹலோகத்தில் வித்யையில்லாதவனால் அடையமுடி யாத ப்ரம்ஹாவினுடைய பட்டணமிருக்கிறது. ப்ரபுவான அதேப்ரம்ஹாவினால் நிர்மாணம் செய்யப்பட்ட ஹிரண்மயமான மண்டபமானதிருக்கிறது" என்ற விடத்தில் என்றும். (ப்ரபத்யே என்றவிடத்திலுள்ள) पद् (பத்) என்ற தாதுவுக்கு கதி என்பது பொருளாகையால் மார்க்கத்தின் அபேக்ஷை நிஸ்சயிக்கப்படுகிறது. ஆகவே கதியைச் சொல்லும் சுருதிகள் பரப்ரம்ஹத்தை விஷயமாகக் கொண்டன என்பது வேறுபக்ஷமாகும்.

கதியின் பொருத்தம் முதலியவற்றால் ஒன்றும், முக்கியத்வாதிகளினால் மற் றொன்றுமாக அந்த இரண்டு பக்ஷங்களும் ஆசிரியரால் ஸூத்திரத்தில் சொல்லப்

गत्युपपत्त्यादयः प्रभवन्ति मुख्यत्वादीनाभासयितुं नतु मुख्यत्वादयो गत्युपपत्त्यादीनित्याद्य एव सिद्धान्तो व्याख्यातो द्वितीयः पूर्वपक्षः। नह्यसत्यपि संभवे मुख्यस्यैवार्थस्य ग्रहणमिति कश्चिदाज्ञापयिता विद्यते। परविद्याप्रकरणेऽपि च तत्स्तुत्यर्थं विद्यान्तराश्रयगत्यनुकीर्तनमुपपद्यते 'विष्वङ्ङन्या उत्क्रमणे भवन्ति' (छा० ८।६।६) इतिवत्। 'प्रजापतेः सभां वेश्म प्रपद्ये' (छा० ८।१४।१) इति तु पूर्वत्र कथाविच्छेदेन कार्येऽपि प्रतिपत्त्यभिसन्धिर्न विरुध्यते। सगुणेऽपि च ब्रह्मणि सर्वात्मत्वसङ्कीर्तनं सर्वकर्मा सर्वकाम इत्यादिवदवकल्पते। तस्मादपरविषया एव गतिश्रुतयः। केचित्पुनः पूर्वाणि पूर्वपक्षसूत्राणि भवन्त्युत्तराणि सिद्धान्तसूत्राणीत्येतां व्यवस्थामनुरुध्यमानाः परविषया एव गतिश्रुतीः प्रतिष्ठापयन्ति, तदनुपपन्नं गन्तव्यत्वानुपपत्तेर्ब्रह्मणः। यत्सर्वगतं सर्वान्तरं

பட்டன. அவற்றுள் * கத்யுபபத்யாதிகள் முக்யத்வாதிகளை ஆபாஸப்படுத்தக் கூடியனவே யொழிய முக்கியத்வாதிகள் கத்யுபபத்யாதிகளை ஆபாஸப்படுத்தக் கூடியனவன்று என்பதுபற்றி முதலிலுள்ளதே ஸித்தாந்தமென்றும், இரண்டாவதாகவுள்ளது பூர்வபக்ஷமென்றும் வியாக்கியானம் செய்யப்பட்டது. பொருத்தமில்லாவிடினுங்கூட முக்கியமான பொருளையே தான் கிரஹிக்க வேண்டுமென ஆக்ஞாபிப்பவர் இல்லையன்றோ. (வித்யையுடன் ஸம்பந்தப்பட்ட ஸுஷும்னு நாடியை ஸ்துதிக்கவேண்டி) "வேறுநாடிகள் நாநாவிதமான உத்க்ரமணத்தி லுபயோகப்படுகின்றன" என்று சொல்லப்படுவதுபோல பரவித்யாப்ரகரணத்திலுங்கூட அதை ஸ்துதிக்கவேண்டி வேறுவித்யை யாச்ரயித்த கதியைச் சொன்னது பொருத்தமுள்ளதாகவும் ஆகிறது. "ப்ரஜாபதியினுடைய ஸபையாகிற வீட்டை யடைவேனாக" என்றதோ முன்னுள்ள வாக்கியத்தின் விச்சேதத்தால் (முன்னுள்ள பரவித்யாப்ரகரணத்தை விடுத்து) காரியப்ரம்ஹவிஷயத்தில் வேச்மப்ராப்தித்யானஞ் செய்யப்பட்டதாகச் சொல்லுவதில் விரோதமெதுவு மேற்படாது. ஸகுணப்ரம்ஹத்திலுங்கூட "ஸர்வகர்மமுள்ளது ஸர்வகாமமுள்ளது" என்றதாதிபோல ஸர்வாத்மத்வம் சொன்னது பொருந்துகிறது. ஆகவே கதிச்ருதிகள் அபரவித்யாவிஷயங்களே யாகும்.

வேறு சிலரோ வெனில் முன்னுள்ள ஐந்தும் பூர்வபக்ஷஸூத்திரங்களென்றும், பின்னுள்ள மூன்றும் ஸித்தாந்த ஸூத்திரங்களென்றுமான இந்த வ்யவஸ்தையை அனுஸரித்தவர்களாய்க் கொண்டு கதிச்ருதிகள் பரவித்யாவிஷயங்களேயாகும் என ஸ்தாபிக்கின்றனர். அது பொருந்தாது. ப்ரம்ப்ரம்ஹமானது கந்தவ்யமாக (கதியினாலடையக் கூடியதாக) இல்லாததே அதன் காரணமாகும். "ஆகாசம் போல ஸர்வகதமும் நித்யமுமானது" "எது கௌணமில்லாததும்,

---

* कार्यं बादरिरस्य गत्युपपत्तेः என்றுதொடங்கி स्मृतेश्च என்ற 11-வதுஸூத்திரம் முடியவுள்ள 5 ஸூத்திரங்களால் சொல்லப்பட்டவை கத்யுபத்தியாதி என்றதாலும் 12, 13, 14 இந்த மூன்று ஸூத்திரங்களாலும் சொல்லப்பட்டது முக்யத்துவாதிகளென்றதாலும் சொல்லப்பட்டதாகக் கொள்ளவேண்டும்.

सर्वात्मकं च परं ब्रह्म 'आकाशवत्सर्वगतश्च नित्यः', 'यत्साक्षादपरोक्षाद्ब्रह्म' (बृ० ३। ४। १), 'य आत्मा सर्वान्तरः' (बृ० ३। ४। १), 'आत्मैवेदं सर्वम्' (छा० ७। २५। २), 'ब्रह्मैवेदं विश्वमिदं वरिष्ठम्' (मु० २। २। ११) इत्यादिश्रुतिनिर्धारितविशेषं तस्य गन्तव्यता न कदाचिदप्युपपद्यते। नहि गतमेव गम्यते। अन्यो ह्यन्यद्गच्छतीति प्रसिद्धं लोके। ननु लोके गतस्यापि गन्तव्यता देशान्तरविशिष्टा दृष्टा। यथा पृथिवीस्थ एव पृथिवीं देशान्तरद्वारेण गच्छतीति। तथानन्यत्वेऽपि बालस्य कालान्तरविशिष्टं वार्धकं स्वात्मभूतमेव गन्तव्यं दृष्टं तद्वद्ब्रह्मणोऽपि सर्वशक्त्युपेतत्वात्कथञ्चिद्गन्तव्यता स्यादिति॥

न। प्रतिषिद्धसर्वविशेषत्वाद्ब्रह्मणः। 'निष्कलं निष्क्रियं शान्तं निरवद्यं निरञ्जनम्' (श्वेता० ६। १९) 'अस्थूलमनण्वह्रस्वमदीर्घम्' (बृ० ३। ८। ८), 'सबाह्याभ्यन्तरो ह्यजः' (मु० २। १। २), 'स वा एष महानज आत्माऽजरोऽमरोऽमृतोऽभयो ब्रह्म' (बृ० ४। ४। २५), 'स एष नेति नेत्यात्मा' (बृ० ३। ९। २६) इत्यादिश्रुतिस्मृतिन्या-

---

எவ்விதமறைவுமில்லாததோ அது ப்ரம்ஹமாகும்" "யாதொரு ஆத்மாவுண்டோ அது ஸர்வாந்தரமானது" "இவையாவும் ஆத்மாவே" "இந்த விஶ்வம் யாவும் இந்தச் சிறந்த ப்ரம்ஹமே" என்றதாதி சுருதிகளால் நிஶ்சயிக்கப்பட்ட விசேஷத்தை யுடையதும், ஸர்வகதமும், (எங்கும் நீக்கமற நிறைந்ததும்) ஸர்வாந்தரமுமான யாதொரு பரப்ரம்ஹமுண்டோ அதற்குக் கந்தவ்யத்வமானது (கதியினல் அடையக்கூடியதாக இருத்தலானது)ஒருபொழுதும் ஸம்பவிக்கமாட்டாது. அடையப்பட்டதே திரும்பவும் அடையப்பட மாட்டாதன்றே. வேருகவுள்ளவன் வேருகவுள்ளதை அடைகிருன் என்றல்லவோ உலகில் ப்ரஸித்திபிருக்கிறது.

சங்கை—உலகில் அடையப்பட்டவற்றுக்குங்கூட வேறுதேசத்தை (அவயத்தை) யொட்டி கதியினல் அடையப்படுதல் காணப்படுகிறது. அதாவது:—பூமியிலிருப்பவனே வேறுதேசத்தை யொட்டி பூமியை அடைகிருன் என்றும். அவ்விதமே வேறுபடாவிடினுங்கூட பாலன் வேறுகாலத்தை யொட்டி யேற்படுவதும் தன்னிடமே உள்ளதுமான கிழத்தன்மையை யடைவதாகக் காணப்படுகிறது. அதுபோல ப்ரம்ஹமும் ஸர்வசக்தியுடனும் கூடியிருப்பதால் யாதானுமொருமுறையில் அதற்குக் கந்தவ்யத்வமானது ஸம்பவிக்கலாம் எனின்?

உத்தரம்—இல்லே. ப்ரம்ஹம் எத்தகைய விசேஷமுமற்றதெனச் சொல்லப்பட்டிக்கிறது. "அவயவமற்றது, கிரியையற்றது, சாந்தமானது, குற்றமற்றது, அழுக்கற்றது" என்றும், "ஸ்தூலத்தைவிட வேறுபட்டது, அணுவைவிட வேறுபட்டது, ஹ்ரஸ்வத்தைவிட வேறுபட்டது, தீர்க்கத்தைவிட வேறுபட்டது" என்றும், "உள்ளிலும் வெளியிலும் கலந்துள்ளது, ஜனனமற்றது" என்றும், "அந்த இந்த மஹானும் அஜனும் அஜரனும், அமரனும் அமிருதனும் அபயனுமான ஆத்மாவானது ப்ரம்ஹமாகும்" என்றும், "அந்த இந்த ஆத்மா இதில்லே இதில்லே எனவிலக்கிக் காணக்கூடியது" என்றுமாதிய ஶ்ருதிஸ்மிருதி நியாயங்களைக் கொண்டு தேசம் காலம் முதலிய எத்தகைய விசேஷத்தின் சேர்க்கையும்

येभ्यो न देशकालादिविशेषयोगः परमात्मनि कल्पयितुं शक्यते। येन भूप्रदेशवयोवस्थान्यायेनास्य गन्तव्यता स्यात्। भूवयसोस्तु प्रदेशावस्थादिविशेषयोगादुपपद्यते देशकालविशिष्टा गन्तव्यता। जगदुत्पत्तिस्थितिप्रलयहेतुत्वश्रुतेरनेकशक्तित्वं ब्रह्मण इति चेत्। न। विशेषनिराकरणश्रुतीनामनन्यार्थत्वात्। उत्पत्त्यादिश्रुतीनामपि समानमनन्यार्थत्वमिति चेत्। न। तासामेकत्वप्रतिपादनपरत्वात्। मृदादिदृष्टान्तैर्हि सतो ब्रह्मण एकस्य सत्यत्वं विकारस्य चानृतत्वं प्रतिपादयच्छास्त्रं नोत्पत्त्यादिपरं भवितुमर्हति। कस्मात्पुनरुत्पत्त्यादिश्रुतीनां विशेषनिराकरणश्रुतिशेषत्वं न पुनरितरशेषत्वमितरासामिति। उच्यते—विशेषनिराकरणश्रुतीनां निराकाङ्क्षार्थत्वात्। नह्यात्मन एकत्वनित्यत्वशुद्धत्वाद्यवगतौ सत्यां भूयः काचिदाकाङ्क्षोपजायते पुरुषार्थसमाप्तिबुद्ध्युपपत्तेः 'तत्र को मोहः कः शोक

பரமாத்மாவினிடத்தில் கல்பிக்கமுடியாது. அவ்விதமானலன்றே பூமியின்ப்ரதேசம், வயதின் அவஸ்தை இவற்றின் நியாயத்தைக் கொண்டு ப்ரஹ்மத்துக்கு கந்தவ்யத்வம் சொல்லுவது பொருந்தும். பூமிக்கும் வயதுக்குமோ ப்ரதேசம் அவஸ்தை முதலியவிசேஷயோக மிருப்பதால் தேசகாலவிசேஷத்தை யொட்டிக் கந்தவ்யத்வம் சொல்லுவது பொருந்தலாம்.

சங்கை—ஜகத்தின் உத்பத்தி ஸ்திதி, ப்ரளயம் இவற்றுக்குக்காரணமாக விருத்தலைச் சொல்லும் சுருதி யிருப்பதால் ப்ரம்ஹத்துக்கு அனேக சக்தியுள்ளதாக இருத்தல் ஸம்பவிக்கலாம் எனின்?

உத்தரம்—அது பொருந்தாது. எத்தகைய விசேஷத்தையும் மறுக்கும் சுருதிகளுக்கு வேறுபயன் ஸம்பவிக்காமலிருத்தலே அதன் காரணமாகும்.

சங்கை—உத்பத்தியாதிகளைச் சொல்லும் சுருதிகளுக்கும் வேறு பயன் ஸம்பவிக்காதிருத்தல் ஸமானமாகவே இருக்கிறது எனின்?

உத்தரம்—அவ்விதமில்லை. அந்த ஶ்ருதிகள் ஐக்கியத்தைச் சொல்லுவதாக ஏற்படுவதே அதன் காரணமாகும். மிருத் முதலியவற்றின் திருஷ்டாந்தங்களினால் ஸத்தும் ஏகமுமான ப்ரம்ஹத்துக்கு ஸத்யத்வத்தையும், காரியத்துக்கு அந்ருதத்வத்தையும் சொல்லுகிற சாஸ்திரமானது உத்பத்தியாதிகளைச் சொல்லவந்ததாகக் கொள்ளமுடியாது.

சங்கை—உத்பத்யாதிகளை சொல்லும் ஶ்ருதிகள் விசேஷத்தை மறுக்கும் (நிர்விசேஷ) ஶ்ருதிகளுக்கு அங்கமெனச் சொல்லவேண்டுமேயொழிய உத்பத்யாதிஶ்ருதிகளுக்கு நிர்விசேஷஶ்ருதிகள் அங்கமெனச் சொல்லமுடியாதென்பது எங்ஙனம் எனின்?

உத்தரம்—இவ்விஷயத்தில் சொல்லப்படுகிறது. விசேஷத்தை மறுக்கும் ஶ்ருதிகள் மற்றெதையும் எதிர்பாராது தனது பொருளை விளக்கக்கூடியனவாகவிருக்கின்றன. ஆத்மா ஏகனென்றும் நித்யனென்றும் சுத்தனென்றும் அறிவு ஏற்பட்டதும் திரும்பவும் வேறு அபேக்ஷை எதுவும் உண்டாவதில்லை. புருஷார்த்தமானது கிடைத்துவிட்டதென்ற எண்ணம் பொருந்தக்கூடியதாக வாவதே அதன்

एकत्वमनुपश्यतः' (ईशा० ७), 'अभयं वै जनक प्राप्तोऽसि' (बृ० ४। २। ४), 'विद्वान्न बिभेति कुतश्चन। एतं ह वाव न तपति किमहं साधु नाकरवं किमहं पापमकरवम्' (तैत्ति० २। ९। १), इत्यादिश्रुतिभ्यः। तथैव च विदुषां तुष्ट्यनुभवादिदर्शनात्। विकारानृताभिसन्धस्यापवादाच्च 'मृत्योः स मृत्युमाप्नोति य इह नानेव पश्यति' इति। अतो न विशेषनिराकरणश्रुतीनामन्यशेषत्वमवगन्तुं शक्यते। नैवमुत्पत्त्यादिश्रुतीनां निराकाङ्क्षार्थप्रतिपादनसामर्थ्यमस्ति। प्रत्यक्षं तु तासामन्यार्थत्वं समनुगम्यते। तथाहि 'तत्रैतच्छुङ्गमुत्पतितं सोम्य विजानीहि नेदममूलं भविष्यति' (छा० ६। ८। ३) इत्युपन्यस्योदर्के सत एवैकस्य जगन्मूलस्य विज्ञेयत्वं दर्शयति। 'यतो वा इमानि भूतानि जायन्ते। येन जातानि जीवन्ति। यत्प्रयन्त्यभिसंविशन्ति। तद्विजिज्ञासस्व। तद्ब्रह्मेति'

காரணமாகும். அவ்விதமே "ப்ரப்ஹாத்ம ஏகத்வத்தை ஸாக்ஷாத்கரிப்பவர்க்கு அந்நிலையில் மோஹமேது? சோகமேது? என்றும், "ஹேஜனக! அபயத்தையே யன்றோ யடைந்தவனாகின்றாய்" என்றும், "ஐக்யஸாக்ஷாத்காரத்தை யடைந்தவன் எதனின்றும் பயத்தை யடைவதில்லை. இத்தகைய ஆத்மக்ஞானியை நான் ஏன் புண்ணியத்தைச் செய்தேனில்லை. பாபத்தை ஏன் செய்தேன் என்ற எண்ணம் வாட்டுவதில்லை" என்றுமாதிய சுருதிகளுமிருக்கின்றன. அவ்விதமே ஐக்யஸாக்ஷாத்கரத்தை யடைந்தவித்வான்களுக்கு துஷ்டியனுபவாதிகள் (ஆத்மக்ஞானத்தைத் தவிர்த்து மற்றதில் பற்றின்மை) காணவும் படுகின்றன. பொய்யான காரியத்தில் அபிஸந்தி (பற்று) யுள்ளவனுக்கு இத்தகைய அனுபவம் மறுக்கவும் பட்டிருக்கிறது. அதாவது:—"எவன் இவ்விஷயத்தில் பேதமுள்ளது போலப் பார்க்கிறானோ அவன் மரணத்தினின்றும் மரணத்தை (ஜனனமரணாத்மகமான துக்கத்தை) அடைகிறான்" என்றும். உத்பத்தியாதி ஶ்ருதிகளுக்கோ இவ்விதம் எவ்வித ஆகாங்க்ஷையு மில்லாதபொருளைத் தெரிவித்தல் ஸம்பவிக்கமுடியாது. அந்த உத்பத்தியாதி ஶ்ருதிகளுக்கு வேறுபொருளைப் போதித்தலானது ப்ரத்யக்ஷமாகவே தொடர்ந்து காணவும்படுகிறது. அதாவது:—"அந்த மூலகாரணமான ப்ரம்ஹத்தினிடத்தில் இந்தச் சுங்கமானது (ஜகத்ரூபமான காரியமானது) உண்டாயிற்று என ஹே ஸோம்ய! நீ அறிந்து கொள்ளு. இந்தக்கார்யமானது காரணமில்லாது உண்டாகமாட்டாது" என்று சொல்லி முடிவில் ஜகத்காரணமான ஸத்பதப்பொருள் ஒன்றுக்கே விக்ஞேயத்வத்தைச் சுருதி தெரிவிக்கிறது. "எதிலிருந்தே இந்தப் பூதங்கள் உண்டாகின்றனவோ உண்டானவை எதனால் ஜீவிக்கின்றனவோ லயத்தையடையும் எவை எதில் லயத்தையடைகின்றனவோ அதை அறிந்து கொள்ள விரும்புவாயாக. அது ப்ரம்ஹமாகும்" என்றும் சொல்லுகிறது. இவ்விதம் உத்பத்தியாதி ஶ்ருதிகளுக்கு ஐகாத்ம்யக்ஞானத்தை உபதேசிக்கும் தன்மை காணப்படுவதால் ப்ரம்ஹத்துக்கு அனேக சக்தியுடன் சேர்க்கை ஸம்பவிக்கமாட்டாது. அதனால் கந்தவ்யமாக (கதியினாலடையக்கூடியதாக) இருத்தலும் பொருந்த மாட்டாது. "அவனுடைய ப்ராணன்கள் வெளிக்கிளம்புவதில்லை ப்ரம்ஹமாகவே இருந்துகொண்டு ப்ரம்ஹத்தை யடைகிறான்" என்று

(तै० ३।१।१) इति च। एवमुत्पत्त्यादिश्रुतीनामैकात्म्यावगमपरत्वान्नानेकशक्तियोगो ब्रह्मणः। अतश्च गन्तव्यत्वानुपपत्तिः। 'न तस्य प्राणा उत्क्रामन्ति ब्रह्मैव सन्ब्रह्माप्येति' (बृ० ४।४।६) इति च परस्मिन्ब्रह्मणि गतिं निवारयति। तद्व्याख्यातं 'स्पष्टो ह्येकेषाम्'' (ब्र० सू० ४।२।१३) इत्यत्र॥

गतिकल्पनायां च गन्ता जीवो गन्तव्यस्य ब्रह्मणोऽवयवो विकारो वाऽन्यो वा ततः स्यात्। अत्यन्ततादात्म्ये गमनानुपपत्तेः। यद्येवं ततः किं स्यात्। उच्यते। यद्येकदेशस्तेनैकदेशिनो नित्यप्राप्तत्वान्न पुनर्ब्रह्मगमनमुपपद्यते। एकदेशैकदेशित्वकल्पना च ब्रह्मण्यनुपपन्ना निरवयवत्वप्रसिद्धेः। विकारपक्षेऽप्येतत्तुल्यं विकारेणापि विकारिणो नित्यप्राप्तत्वात्। नहि घटो मृदात्मतां परित्यज्यावतिष्ठते परित्यागे वाऽभावप्राप्तेः। विकारावयवपक्षयोश्च तद्वतः स्थिरत्वाद्ब्रह्मणः संसारगमनमप्यनवक्लृप्तम्। अथान्य एव जीवो ब्रह्मणः। सोऽणुर्व्यापी मध्यमपरिमाणो वा भवितुमर्हति। व्यापित्वे गमनानुपपत्तिः।

மான ஸ்ருதியானது பரம்ப்ரம்ஹத்தினிடத்தில் கதியை மறுக்கிறது. அது "ஸ்பஷ்டோஹி ஏகேஷாம்" என்ற விடத்தில் வியாக்யானஞ் செய்யப்பட்டுமிருக்கிறது.

கதியைக் கல்பித்தாலோ அப்பொழுது கந்தாவான (போகிறவனான) ஜீவன் கந்தவ்யமான (போகவேண்டியதான) ப்ரம்ஹத்துக்கு அவயவமாகவோ, காரியமாகவோ வேறாகவோ ஆகவேண்டி வந்துவிடும். அத்யந்ததாதாத்மியம் (முற்றிலும் ப்ரம்ஹஸ்வரூபமாகவே இருத்தல்) சொன்னாலோ கமனமானது பொருந்தவும் மாட்டாது. இவ்விதம் சொன்னால் அதனின்றும் கிடைப்பது யாதென்னில்? சொல்லுகிறோம். ஜீவன் ப்ரம்ஹத்தினுடைய ஏகதேசம் (அவயவம்) ஆனாலோ அந்த அவயவமான ஜீவனால் அவயவியான ப்ரம்ஹமானது எப்பொழுதுமே அடையப்பட்டிருப்பதால் திரும்பவும் ப்ரம்ஹத்தை யடைவதாகச் சொல்லுவது பொருந்தாது. ப்ரம்ஹத்தினிடத்தில் அவயவாவயவிகல்பனை செய்வதும் பொருந்தாது. ப்ரம்ஹம் எவ்வித அவயவமும் அற்றது என்ற (ஸ்ருதி) ப்ரஸித்தியிருப்பதே அதன் காரணமாகும். ஜீவனை ப்ரம்ஹத்தின் காரியம் என்று சொல்லும் பக்ஷத்திலுங் கூட இந்தத் தோஷம் ஸமானமாகவே இருக்கிறது. காரியத்துடன் காரணப்பொருள் நித்யப்ராப்தமாகவே இருக்கிறது என்றும். குடமாகிற காரியமானது காரணமாகிற மண்ணினுருவத்தை விடுத்து தனித்து இருப்பதில்லையன்றோ. விட்டுத் தனித்திருக்குமாயின் காரியரூபத்துக்கே அபாவம் ப்ராப்த்தமாகவாகிவிடும். (ஜீவன்) ப்ரம்ஹத்தின் காரியமென்றோ அவயவமென்றோ சொல்லும் பக்ஷங்களிலும் அவ்விரண்டுமுள்ள ப்ரம்ஹமானது ஸ்திரமாக விருப்பதால் அதற்கு ஸம்ஸாரகமனஞ் சொல்லுவதும் பொருத்தமற்றதாக வாகிவிடத்தெரியும். ஜீவன் ப்ரம்ஹத்தைவிட வேறுபட்டவனே என்றாலோ. அந்த ஜீவன் அணுவாகவோ, வியாபியாகவோ, மத்யமபரிமாண முள்ளவனாகவோ தான் ஆகவேண்டும்,

मध्यमपरिमाणत्वे चानित्यत्वप्रसङ्गः। अणुत्वे कृत्स्नशरीरवेदनानुपपत्तिः। प्रतिषिद्धे चाणुत्वमध्यमपरिमाणत्वे विस्तरेण पुरस्तात्। परस्माच्चान्यत्वे जीवस्य 'तत्त्वमसि' (छा० ६। ८। ७) इत्यादिशास्त्रबाधप्रसङ्गः। विकारावयवपक्षयोरपि समानोऽयं दोषः। विकारावयवयोस्तद्वतोऽनन्यत्वाददोष इति चेत्। न। मुख्यैकत्वानुपपत्तेः। सर्वेष्वेतेषु पक्षेष्वनिर्मोक्षप्रसङ्गः। संसार्यात्मत्वानिवृत्तेः। निवृत्तौ वा स्वरूपनाशप्रसङ्गः। ब्रह्मात्मत्वानभ्युपगमाच्च। यत्तु कैश्चिज्जल्प्यते नित्यानि नैमित्तिकानि कर्माण्यनुष्ठीयन्ते प्रत्यवायानुत्पत्तये काम्यानि प्रतिषिद्धानि च परिह्रियन्ते स्वर्गनरकानवाप्तये सांप्रतदेहोपभोग्यानि च कर्माण्युपभोगेनैव क्षप्यन्त इत्यतो वर्तमानदेहपातादूर्ध्वं देहान्तरप्रतिसंधानकारणाभावात्स्वरूपावस्थानलक्षणं कैवल्यं विनापि ब्रह्मात्मतयैवंवृत्तस्य सेत्स्यतीति। तदसत्। प्रमाणाभा-

---

வியாபியாகச் சொல்லும் பக்ஷத்தில் அவனுக்கு கமனம் பொருந்த மாட்டாது. மத்யம பரிமாணம் சொன்னாலோ அநித்யத்வம் வந்து விடத்தெரியும். அணுத்வம் சொன்னாலோ முழுசரீரத்திலுமுள்ள அறிவு ஏற்படாமல் ஆகிவிடும். அணுத்வம் மத்யமபரிமாணத்வம் இரண்டும் முந்தி இரண்டாவது அத்தியாயத்தில் மறுக்கப்பட்டு மிருக்கிறது. ஜீவனைப் பரமாத்மாவைவிட வேறாகச் சொன்னால் "அதாக நீ இருக்கிறாய்" என்றதாதி சாஸ்திரத்துக்குப் பாதம் வந்துவிடும். விகாரம்(காரியம்) அவயவம் என்ற இரண்டுபக்ஷங்களிலும் கூட இந்தத்தோஷம் ஸமானமாகவே இருக்கிறது.

சங்கை—விகாரம் அவயவம் இவ்விரண்டுக்கும், அவையுள்ளவற்றுக்கும் அபேதமிருப்பதால் தோஷமில்லை என்கிறோம் எனின்?

உத்தரம்—அது பொருந்தாது. முக்கியமான ஏகத்வம் (அபேதம்) ஸம்பவிக்காததே அதன் காரணமாகும். இந்த எல்லாப்பக்ஷங்களிலும் மோக்ஷம் ஸம்பவிப்பதற்கு மில்லாமல் போகத்தெரியும். ஸம்ஸாரி ஆத்மத்தன்மைக்கு நிவிருத்தியில்லாதிருப்பதே அதன் காரணமாகும். (இவர்களால்) ப்ரம்ஹாத்மைக்யம் ஒப்பப்படாமலு மிருக்கிறது.

நித்யங்களும் நைமித்திகங்களுமான கர்மங்களை ப்ரத்யவாயத்தை(பாபத்தைப்) போக்கவேண்டி அனுஷ்டிக்கிறோம். ஸ்வர்க்கமோ நரகமோ வராமலிருக்கவேண்டி காம்யங்களும், சாஸ்திரநிஷித்தங்களுமான கர்மங்களை விலக்கி விடுகிறோம். இது போழ்துள்ள தேஹத்தினால் அனுபவிக்கத்தகுந்தகர்மங்களை அனுபவித்தே தேய்த்து விடுகிறோம். ஆனதுபற்றி இந்தத் தேஹம் போனபிறகு வேறுதேஹம் வருவதற்குரிய காரணமில்லாமையால் ப்ரம்ஹாத்மைக்யக்ஞானமில்லாமலே ஸ்வரூபாவஸ்தான ரூபமான கைவல்யமானது இம்மாதிரியுள்ளவனுக்குத் தானாகவே ஸித்தித்து விடலாம் எனச் சிலர் சொல்லுகின்றனர். அதுபொருந்தாது. ப்ரமாணமில்லாமையே அதன் காரணமாகும். மோக்ஷத்தில் விருப்பமுள்ளவன் இவ்விதம் செய்யவேண்டுமென ஒரு சாஸ்திரத்தினாலும் இது சொல்லப்படவில்லையன்றோ. யாது காரணத்தால் ஸம்ஸாரமானது கர்மமூலமேற்படுகிறதோ அதேகாரணத்தால்

वात्। नह्येतच्छास्त्रेण केनचित्प्रतिपादितं मोक्षार्थीत्थं समाचरेदिति। स्वमनीषया त्वेतत्तर्कितं यस्मात्कर्मनिमित्तः संसारस्तस्मान्निमित्ताभावान्न भविष्यतीति। नचैतत्तर्कयितुमपि शक्यते निमित्ताभावस्य दुर्ज्ञानत्वात्। बहूनि हि कर्माणि जात्यन्तरसंचितानीष्टानिष्टविपाकान्येकैकस्य जन्तोः संभाव्यन्ते। तेषां विरुद्धफलानां युगपदुपभोगासंभवात्कानिचिल्लब्धावसराणीदं जन्म निर्मिमते कानिचित्तु देशकालनिमित्तप्रतीक्षाण्यासत इत्यतस्तेषामवशिष्टानां सांप्रतेनोपभोगेन क्षपणासंभवान्न यथावर्णितचरितस्यापि वर्तमानदेहपाते देहान्तरनिमित्ताभावः शक्यते निश्चेतुम्। कर्मशेषसद्भावसिद्धिश्च "तद्य इह रमणीयचरणाः" "ततः शेषेण" इत्यादिश्रुतिस्मृतिभ्यः। स्यादेतत्। नित्यनैमित्तिकानि तेषां क्षेपकाणि भविष्यन्तीति। तन्न। विरोधाभावात्। सति हि विरोधे क्षेप्यक्षेपकभावो भवति। नच जन्मान्तरसञ्चितानां सुकृतानां नित्यनैमित्तिकैरस्ति विरोधः। शुद्धिरूपत्वाविशेषात्। दुरितानां त्वशु-

நிமித்தமில்லாவிடில் ஸம்ஸாரம் போய்விடும் எனத் தனது புத்தியால் இது ஊஹிக்கப்பட்டதே யாகும். நிமித்தமின்மையானது அறிதற்கியலாததாகையால் இது ஊஹிப்பதற்குக் கூடியது மன்று. ஒவ்வொருமனுஷ்யனுக்கும் சுகதுக்கபலனைத் தரக்கூடியனவும் வேறுபிறவியில் ஸம்பாதிக்கப்பட்டனவுமான வெகுகர்மங்கள் ஸம்பவிக்கக் கூடியனவன்றோ? விருத்தமான பலனையுடைய அந்தக்கர்மங்களுக்கு ஒரேஸமயத்தில் உபபோகம் ஸம்பவிக்காதாதலால் சிலகர்மங்கள் பலனைத்தர வாரம்பித்தனவாய் இந்தஜன்மத்தைத் தருகின்றன, சிலகர்மங்கள் தேசம் காலம் நிமித்தம் இவற்றை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றன, என்ற இக்காரணத்தால் மீதமாயுள்ள அந்தக்கர்மங்களுக்கு இந்தப் பிறவியிலுள்ள அனுபவத்தினால் தேய்தல் ஸம்பவிக்காதாதலால் முன்னர் வர்ணிக்கப்பட்ட ஆசாரமுள்ளவனுக்குங்கூட இப்பொழுதுள்ள தேஹம் போனபோதிலும் வேறுதேஹத்துக்குரிய நிமித்தத்தின் அபாவமானது நிஸ்சயிக்க முடியாததாக இருக்கிறது. மேலும் "அவர்களுள் எவர்கள் ரமணீயமான ஆசார முள்ளவர்களோ அவர்கள் ரமணீயமான பிறவியை யடைகின்றனர்" என்றும், "அனுபவிக்கப்பட்ட கர்மத்தைக் காட்டிலும் மீதமுள்ளகர்மத்தினால் (சிறந்த பிறவி முதலியவற்றை யடைகின்றனர்)" என்றுமாதிய சுருதிஸ்மிருதிகளைக் கொண்டு அனுபவிக்கப்பட்ட கர்மத்தைக் காட்டிலும் மீதமான கர்மத்தின் இருப்பானது ஸித்திக்கிறது.

இஃதிருக்கட்டும். நித்ய நைமித்திகங்களான கர்மங்கள் அந்த மீதமுள்ள கர்மங்களைத் தேய்க்கக்கூடியனவாகவாகலாமன்றோ எனின்? அது சொல்ல முடியாது. விரோதமில்லாமையே அதன் காரணமாகும். விரோதமிருந்தாலன்றோ ஒருகர்மாவினால் மற்றொரு கர்மம் தேய்க்கப்படுகிறது என்பது ஸம்பவிக்கும். வேறுபிறவியில் ஸஞ்சிதங்களான புண்ணியகர்மங்களுக்கு நித்தியநைமித்திக கர்மங்களுடன் விரோதமானது ஸம்பவிக்கமாட்டாதன்றோ. சுத்திரூபமாக இருத்தல் இரண்டுக்கும் ஸமானமாக இருப்பதால் என்றும். பாபகர்மங்களோ அசுத்திரூபமாக இருப்பதால் விரோதமேற்படுங்கால் நித்யநைமித்திகங்களால் அவற்றுக்குத் தேய்தல் ஸம்பவிக்கட்டும். அவ்வளவினால் மட்டும் வேறுதேஹம் வருவதற்குரிய

द्विरूपत्वात्सति विरोधे भवतु क्षपणं नतु तावता देहान्तरनिमित्ताभावसिद्धिः। सुकृतनिमित्तत्वोपपत्तेः। दुश्चरितस्याप्यशेषक्षपणानवगमात्। नच नित्यनैमित्तिकानुष्ठानात्प्रत्यवायानुत्पत्तिमात्रं न पुनः फलान्तरोत्पत्तिरिति प्रमाणमस्ति फलान्तरस्याप्यनुनिष्पादिनः संभवात्। स्मरति ह्यापस्तम्बः—'तद्यथाम्रे फलार्थे निर्मिते छायागन्धावनूत्पद्येते एवं धर्मं चर्यमाणमर्था अनूत्पद्यन्ते' इति। नचासति सम्यग्दर्शने सर्वात्मना काम्यप्रतिषिद्धवर्जनं जन्मप्रायणान्तराले केनचित्प्रतिज्ञातुं शक्यम्। सुनिपुणानामपि सूक्ष्मापराधदर्शनात्। संशयितव्यं तु भवति तथापि निमित्ताभावस्य दुर्ज्ञानत्वमेव। नचानभ्युपगम्यमाने ज्ञानगम्ये ब्रह्मात्मत्वे कर्तृत्वभोक्तृत्वस्वभावस्यात्मनः कैवल्यमाकाङ्क्षितुं शक्यम्। अग्न्यौष्ण्यवत्स्वभावस्यापरिहार्यत्वात्। स्यादेतत्। कर्तृत्वभोक्तृत्वकार्यमनर्थो न तच्छक्तिस्तेन शक्त्यवस्थानेऽपि कार्यपरिहारादुपपन्नो मोक्ष इति। तच्च न। शक्तिसद्भावे कार्यप्रसवस्य दुर्निवारत्वात्। अथापि स्यान्न केवला शक्तिः कार्यमारभतेऽनपेक्ष्यान्यानि निमित्तानि।

நிமித்தத்தின் அபாவமானது ஸித்திக்காதன்றோ? புண்ணியகர்ம நிமித்தமாக அவைஸம்பவிக்கக் கூடியதாக இருப்பதா லென்க. பாபகர்மத்துக்குங்கூட மீதமின்றி நாசமேற்பட்டதாக அறியவும் முடியாது. நித்தியநைமித்திக கர்மானுஷ்டானத்திலிருந்து ப்ரத்யவாயம் (பாபம்) மட்டுமுண்டாவதில்லையே யொழிய வேறுபலன் எதுவுமுண்டாகமாட்டாது என்பதில் ப்ரமாணம் கிடையாது. அவற்றையொட்டி யுண்டாகும் வேறுபலனும் ஸம்பவிக்கலாம். அவ்விதமே ஆபஸ்தம்பரும் "மாமரம் பழத்துக்கு வேண்டி நடப்பட்டபோதிலும் நிழலும் மணமும் ஏற்படுகின்றது எவ்விதமோ அவ்விதமே அனுஷ்டிக்கப்படும் தர்மத்தை யொட்டிப் பலன்களும் உண்டாகின்றன" என வுபதேசித்திருக்கிறார். ஸம்யக்தரிசனம் (ப்ரம்ஹாத்மைக்ய ஞ்ஞானம்) இல்லாவிடில் பிறவிக்கும் மரணத்துக்கும் இடையில் முற்றிலும் காம்யகர்மம் நிஷித்தகர்மம் இவற்றின் அபாவத்தை ஒருவனாலும் ப்ரதிக்ஞை செய்யமுடியாதன்றோ. மிக்கநுட்பமான புத்தியுள்ளவர்களுக்குங்கூட நுட்பமான அபராதம் (தவறு) காணவும் படுகிறது. ஸம்சயப்படகூடியதாகமட்டுமாகிறது, ஆயினும் நிமித்தமின்மையானது அறியமுடியாததாகவே யாகிறது. க்ஞானத்தினால் ஏற்படக்கூடிய ப்ரம்ஹாத்மைக்யத்தை யொப்பாவிடில் கர்த்ருத்வ போக்திருத்வத்தை ஸ்வபாவமாக வுடைய ஆத்மாவுக்குக் கைவல்யத்தை ஆகாங்க்ஷிக்க (எதிர்பார்க்க) வும் முடியாது. அக்னியின் சூடுகையானது போல ஸ்வபாவமானது விலக்கமுடியாததாகவே ஆகிவிடும்.

சங்கை—கர்த்ருத்வம் போக்த்ருத்வம் இவற்றின் காரியமானது அனர்த்தத்தைத் தருமே யொழிய அவற்றின் சக்தியானது அனர்த்தத்தைத் தரமாட்டாது. சக்தியானது இருந்தபோதிலுங்கூட காரியமானது இல்லாமலாகி விடுவதால் மோக்ஷமுண்டாவது பொருந்தலாம் எனின்?

உத்தரம்—அதுவும் பொருந்தாது. சக்தியிருக்குமாயின் அதன் மூலம் காரியமுண்டாவதைத் தடுக்கவே முடியாது.

अत एकाकिनी सा स्थितापि नापराध्यतीति। तच्च न। निमित्तानामपि शक्तिलक्षणेन संबन्धेन नित्यसंबद्धत्वात्। तस्मात्कर्तृत्वभोक्तृत्वस्वभावे सत्यात्मन्यसत्यां विद्यागम्यायां ब्रह्मात्मतायां न कथंचन मोक्षं प्रत्याशास्ति। श्रुतिश्च—'नान्यः पन्था विद्यतेऽयनाय' (श्वे० ३। ८) इति ज्ञानादन्यं मोक्षमार्गं वारयति। परस्मादनन्यत्वेऽपि जीवस्य सर्वव्यवहारलोपप्रसङ्गः प्रत्यक्षादिप्रमाणाप्रवृत्तेरिति चेत्। न। प्राक्प्रबोधात्स्वप्नव्यवहारवत्तदुपपत्तेः। शास्त्रं च 'यत्र हि द्वैतमिव भवति तदितर इतरं पश्यति' (बृ० २। ४। १४;४। ५। १५) इत्यादिनाऽप्रबुद्धविषये प्रत्यक्षादिव्यवहारमुक्त्वा पुनः प्रबुद्धविषये 'यत्र त्वस्य सर्वमात्मैवाभूत्तत्केन कं पश्येत्' (बृ० २। ४। १४; ४। ५। १५) इत्यादिना तदभावं दर्शयति। तदेवं परब्रह्मविदो गन्तव्यादिविज्ञानस्य बाधितत्वान्न कथञ्चन गतिरुपपादयितुं शक्या॥

சங்கை—வேறு நிமித்தங்களை யபேக்ஷிக்கமால் தனித்த சக்திமட்டும் காரியத்தை யாரம்பிக்கமாட்டாது. ஆகவே தனித்த அந்த சக்தியிருந்த போதிலுங் கூட கெடுதலை யுண்டுபண்ணிவிடாது எனின்?

உத்தரம்—அதுவும் பொருந்தாது. (சக்தியானது எந்த நிமித்தங்களை யபேக்ஷித்துக் காரியத்தை யுண்டாக்குமோ) அந்த * நிமித்தங்களும் சக்திரூபமான ஸம்பந்தத்தால் எப்பொழுதும் ஆத்மாவினிடம் ஸம்பந்தத்திருப்பதாலென்க. ஆகவே ஆத்மாவானவன் கர்த்ருத்வ போக்த்ருத்வ ஸ்வபாவமுள்ளவனாக விருக்குங்கால் வித்யைமூலம் ஏற்படக்கூடிய ப்ரம்ஹாத்மைக்யமானது இல்லாமல் போகவே மோக்ஷத்தைக் குறித்து ஆசைப்படக்கூட ஒருபொழுதும் முடியாது. சுருதியும் "மோக்ஷத்தையும் பொருட்டு (க்ஞானத்தைவிட) வேறான மார்க்கம் கிடையாது" என்றதால் க்ஞானத்தைக் காட்டிலும் வேறான மோக்ஷமார்க்கத்தை மறுக்கிறது.

சங்கை—ஜீவன் பரமாத்மாவை விட வேறுபட்டவனன்று என்றால் ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களுக்கு ப்ரவிருத்தியில்லாமல் போய்விடுவதால் எல்லா வியவஹாரங்களுக்கும் லோபம் (இன்மை) வந்துவிடும் எனின்?

உத்தரம்—அவ்விதமில்லை. ப்ரம்ஹாத்மைக்ய ஸாக்ஷாத்காரம் வரும்வரை ஸ்வப்பனவியவஹாரம் போல அது பொருந்தக்கூடியதாகவே ஆகிறது. சாஸ்திரமும் "எந்நிலையில் த்வைதம்போல வாகிறதோ அந்நிலையில் இதரனாக இருந்து கொண்டு இதரத்தைப் பார்க்கிறான்" என்றதாதியினால் க்ஞானமுண்டாகாதவன் விஷயத்தில் ப்ரத்யக்ஷாதி வியவஹாரத்தைச் சொல்லித்திரும்பவும் க்ஞானம் வந்தவன் விஷயத்தில் "எந்நிலையில் இவனுக்கு எல்லாம் ஆத்மாவாகவே ஆகுமோ அந்நிலையில் எதைக் கொண்டு எதைப்பார்ப்பான்" என்றதாதியினால் ப்ரத்ய

---

* கர்த்திருத்வ போக்திருத்வ சக்தி எப்படி நித்யமாக வொப்பப்படுகிறதோ அப்படியே நிமித்தங்களின் சக்தியும் நித்தியமாக இருப்பதால் இவ்விரண்டுக்கும் ஸம்பந்தமும் நித்யமாகவே ஆகக்கூடுமாதலால் மோக்ஷம் ஏற்படுவதற்கிடமில்லாமலாகிவிடும் என்பது கருத்து.

किंविषयाः पुनर्गतिश्रुतय इति। उच्यते—सगुणविद्याविषया भविष्यन्ति। तथाहि क्वचित्पञ्चाग्निविद्यां प्रकृत्य गतिरुच्यते क्वचित्पर्यङ्कविद्यां क्वचिद्वैश्वानरविद्याम्। यत्रापि ब्रह्म प्रकृत्य गतिरुच्यते यथा 'प्राणो ब्रह्म कं ब्रह्म खं ब्रह्म' (छा० ४। १०। ५) इति 'अथ यदिदमस्मिन्ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म' (छा० ८। १। १) इति च तत्रापि वामनीत्वादिभिः सत्यकामादिभिश्च गुणैः सगुणस्यैवोपास्यत्वात्संभवति गतिः। न क्वचित्परब्रह्मविषया गतिः श्राव्यते यथा गतिप्रतिषेधः श्रावितः 'न तस्य प्राणा उत्क्रामन्ति' (बृ० ४। ४। ६) इति। 'ब्रह्मविदाप्नोति परम्' (तै० २। १। १) इत्यादिषु तु सत्यप्याप्नोतेर्गत्यर्थत्वे वर्णितेन न्यायेन देशान्तरप्राप्त्यसंभवात्स्वरूपप्रतिपत्तिरेवेयमविद्याध्यारोपितनामरूपप्रविलयापेक्षयाऽभिधीयते 'ब्रह्मैव सन्ब्रह्माप्येति' बृ० (४। ४। ७) इत्यादिवदिति द्रष्टव्यम्। अपिच

க்ஷாதி வியவஹாரத்தின் அபாவத்தைக் காண்பித்திருக்கிறது. ஆகவே இவ்விதம் பரப்ரம்ஹ க்ஞானமுள்ளவர்க்கு கந்தவ்யாதி விக்ஞானத்துக்கு (செல்லவேண்டிய இடத்தைப்பற்றிய க்ஞானத்துக்குப்) பாதமேற்படுவதால் அவர்க்குக் கதியை எப்பாடுபட்டும் ஸாதிக்கமுடியாது.

கதியைச் சொல்லும் சுருதிகள் எதை விஷயமாகக் கொண்டன எனின்? சொல்லப்படுகிறது. ஸகுணப்ரம்ஹோபாஸனத்தை விஷயமாகக் கொண்டதாக ஏற்படுகிறது. அதாவது:—சிலவிடத்தில் பஞ்சாக்னிவித்யையையும், சிலவிடத்தில் பர்யங்கவித்யையையும், சிலவிடத்தில் வைஸ்வாநரவித்யையையும் சொல்லத் தொடங்கி மார்க்கம் சொல்லப்படுகிறது என்றும். எந்தவிடத்தில் ப்ரம்ஹத்தைச் சொல்லத் தொடங்கி "ப்ராணோ ப்ரம்ஹ கம் ப்ரம்ஹ க்கம் ப்ரம்ஹ" என்றும் "பிறகு இந்தச் சரீரத்தில் யாதொரு இந்த ஸூக்ஷ்மமான புண்டரீகமாகிற இடமுண்டோ" என்றுமாகத் தொடங்கி மார்க்கமானது சொல்லப் படுகிறதோ அவ்விடத்திலுங்கூட வாமனீத்வம் முதலியனவும், ஸத்யகாமத்வம் முதலியனவுமான குணங்களுடன் ஸகுணப்ரம்ஹத்துக்கே உபாஸ்யத்வமானது ஸம்பவிப்பதால் அவ்விஷயத்தில் மார்க்கமானது ஸம்பவிக்கலாம். "அவனுடைய ப்ராணன்கள் வெளிக்கிளம்புவதில்லை" என்பதாய் எவ்விதம் கதியின் மறுப்பானது சுருதியில் சொல்லப்பட்டிருக்கிறதோ இவ்விதம் பரப்ரம்ஹவிஷயமான மார்க்கமானது ஒருவிடத்திலும் சொல்லப்படவில்லை. "ப்ரஹ்மவித்தானவன் பரத்தை யடைகிறான்" என்றதாதி விடங்களிலோ வெனில் ஆப்நோதி என்றதற்குக் கதி என்ற அர்த்தமானதிருந்தபோதிலுங்கூட இதுவரை சொல்லப்பட்ட யுக்தியைக் கொண்டு தேசாந்தரப்ராப்தி யென்பது ஸம்பவிக்காதாகையால் அவித்யையினால் அத்யாரோபிதமான நாமரூபங்களின் ப்ரவிலயத்தை யொட்டி யேற்படும் இந்த ஸ்வரூபப்ராப்தி யேதான் "ப்ரம்ஹமாகவே இருந்து கொண்டு ப்ரம்ஹத்தை யடைகிறான்" என்றதாதி விடங்களில் போலவே சொல்லப்படுகிறது எனக் கண்டுகொள்ளவேண்டும்.

மேலும் பரப்ரம்ஹவிஷயமாகச் சொல்லப்படும் கதியானது ருசியையுண்டு பண்ணுவதற்கு வேண்டியோ, அதைத்யானிப்பதற்கு வேண்டியோ தானிருக்க வேண்டும். அவற்றுள் கதியைச் சொல்லுதல் மூலம் பரப்ரம்ஹவித்துக்கு ருசி

परविषया गतिर्व्याख्यायमाना प्ररोचनाय वा स्यादनुचिन्तनाय वा। तत्र प्ररोचनं तावद्ब्रह्मविदो न गत्युक्त्या क्रियते। स्वसंवेद्येनैवाव्यवहितेन विद्यासमर्पितेन स्वास्थ्येन तत्सिद्धेः। नच नित्यसिद्धनिःश्रेयसनिवेदनस्यासाध्यफलस्य विज्ञानस्य गत्यनुचिन्तने काचिदपेक्षोपपद्यते। तस्मादपरब्रह्मविषया गतिः॥

तत्र परापरब्रह्मविवेकानवधारणेनापरस्मिन्ब्रह्मणि वर्तमाना गतिश्रुतयः परस्मिन्नध्यारोप्यन्ते। किं द्वे ब्रह्मणी परमपरं चेति। बाढं द्वे 'एतद्वै सत्यकाम परं चापरं च ब्रह्म यदोङ्कारः' (प्र० ५।२) इत्यादिदर्शनात्। किं पुनः परं ब्रह्म किमपरमिति। उच्यते। यत्राविद्याकृतनामरूपादिविशेषप्रतिषेधादस्थूलादिशब्दैर्ब्रह्मोपदिश्यते तत्परम्। तदेव यत्र नामरूपादिविशेषेण केनचिद्विशिष्टमुपासनायोपदिश्यते 'मनोमयः प्राणशरीरो भारूपः' (छा ३।१४।२) इत्यादिशब्दैस्तदपरम्। नन्वेवमद्वितीयश्रुतिरुपरुध्येत। न। अविद्याकृत-

---

யை யுண்டுபண்ணுதலானது செய்யப்படுவதில்லை. ஸ்வஸம்வேத்யமும் (தன்னாலேயே அறியக்கூடியதும்) எவ்விதமறைவு மற்றதும், வித்யையினால் ஸமர்ப்பிக்க (அறிவிக்கப்) பட்டதுமான ஸ்வாஸ்த்ய (ஸ்வரூபாவஸ்தானத்) தினாலேயே அது ஸித்தித்து விடுவதே அதன் காரணமாகும். மேலும், நித்யஸித்தமான நிஸ்ஸ்ரேயஸத்தைத் தெரிவிப்பதும் ஸாத்யமான பலனற்றதுமான விக்ஞானத்துக்கு கதியை (மார்க்கத்தை) அனுசிந்தனம் செய்யும் விஷயத்தில் ஒருவிதமான அபேக்ஷையும் பொருந்துவதற்கில்லை. ஆகவே மார்க்கமானது அபரப்ரம்ஹ விஷயமானதேயாகும். அவ்விஷயத்தில் பரப்ரம்ஹம் இன்னது அபரப்ரம்ஹம் இன்னது எனப் பிரித்தறியாமை காரணமாக அபரப்ரம்ஹ விஷயமாகவுள்ள கதிஸ்ருதிகள் பரப்ரம்ஹத்தினிடத்தில் அத்யாரோபிக்க (ஏற்றிகூற) ப்படுகின்றன.

பரம் என்றும், அபரம் என்றுமாக ப்ரப்ஹம் இரண்டுண்டோ எனின்? ஆம். இரண்டுண்டு என்கிறோம் "ஹே ஸத்ரகாம! ஓங்காரம் என்பது யாதுண்டோ இதுவேதான் பரமும் அபரமுமான ப்ரப்ஹமாகும்" என்றதாதி சுருதிநிர்த்தேசம் காணப்படுவதே அதன் காரணமாகும். பரப்ரப்ஹம் என்பது எது? அபரப்ரம்ஹம் என்பது எது? எனின். சொல்லப்படுகிறது. எந்நிலையில் அவித்யையினால் செய்யப்பட்ட நாமரூபாதி விசேஷங்களை மறுக்கும்வாயிலாக "அஸ்தூலம்" முதலிய சப்தங்களினால் ப்ரம்ஹமானது உபதேசப்படுகிறதோ அது பரம்ப்ரப்ஹமாகும், அந்த பரம்ப்ரம்ஹமே எந்நிலையில் சிலநாமரூபாதி விசேஷத்துடன் கூடினதாக "மனோமய: ப்ராணசரீர: பாரூப:" என்றதாதி சப்தங்களினால் உபாஸனைக்கு வேண்டி உபதேசிக்கப்படுகிறதோ அது அபரப்ரம்ஹமாகும்.

சங்கை—அங்ஙனமாயின் அத்விதீயம் (இரண்டாவதற்றது) என்றுகூறும் சுருதி வீணாகிவிடுமன்றோ எனின்?

உத்தரம்—இல்லை. அவித்யையினால் செய்யப்பட்ட நாமரூபோபாதியுள்ளதாக இருப்பதுபற்றி அந்தத்தோஷம் பரிஹரிக்கப்பட்டதாக வாகிவிடுகிறது. அந்த அபரப்ரம்ஹோபாஸனத்துக்கு அவ்விடத்தில் "அவன் பிதிருலோகத்தில்

नामरूपोपाधिकतया परिहृतत्वात् । तस्य चापरब्रह्मोपासनस्य तत्संनिधौ श्रूयमाणम् 'स यदि पितृलोककामो भवति' (छा० ८।२।१) इत्यादि जगदैश्वर्यलक्षणं संसारगोचरमेव फलं भवति । अनिवर्तितत्वादविद्यायाः । तस्य च देशविशेषावबद्धत्वात्तत्प्राप्त्यर्थं गमनमविरुद्धम् । सर्वगतत्वेऽपि चात्मन आकाशस्येव घटादिगमने बुद्ध्याद्युपाधिगमने गमनप्रसिद्धिरित्यवादिष्म 'तद्गुणसारत्वात्' (ब्र० सू० २।३।२९) इत्यत्र । तस्मात् 'कार्यं बादरिः' (ब्र० सू० ४।३।७) इत्येष एव स्थितः पक्षः । 'परं जैमिनिः' (ब्र० सू० ४।३।१२) इति तु पक्षान्तरप्रतिभानमात्रप्रदर्शनं प्रज्ञाविकासनायेति द्रष्टव्यम् ॥ १४ ॥

६ अप्रतीकालम्बनाधिकरणम् । सू० १५–१६

अप्रतीकालम्बनान्नयतीति बादरायण उभयथाऽदोषात्तत्क्रतुश्च ॥ १५ ॥

காமனையுள்ளவனுக ஆவானேயாஞல்" என்றதாதியால் சொல்லப்படும் ஜகதைஶ்வர்ய ரூபமான பலனுனது ஸம்ஸாரத்துக்குள் சேர்ந்ததேயாகும். அவித்யையானது போக்கப்படாததாக விருப்பதே அதன் காரணமாகும். அத்தகைய பலன், தேச விசேஷ ஸம்பந்தமுள்ளதாக இருப்பதுபற்றி அதை யடைவதற்குவேண்டி கதியானது விரோதப்படமாட்டாது. ஆத்மாவானது ஸர்வகதமாக (எங்கும் நீக்கமற நிறைந்துள்ளதாக) இருந்தபோதிலுங்கூட குடம்முதலியவற்றின் கமனத்தில் ஆகாசத்துக்குப் போல புத்தி முதலிய உபாதியின் கமனமேற்படும் பொழுது (ஆத்மாவுக்கும்)கமனப்ரஸித்தி யேற்படுறது என "தத்குணஸாரத்வாத்" (ப்ர–ஸூ–2, 3, 29) என்றவிடத்தில் சொல்லியிருக்கிறோம். ஆகவே "கார்யம் பாதரி:" என்றதாதியாற் சொல்லப்பட்டதே நிலைத்த பக்ஷமாகும் (ஸித்தாந்தமாகும்.) "பரம்ஜைமினி:" என்றதாதியாற் சொல்லப்பட்டதோவெனில் அறிவு விரிவுபடுவதற்கு வேண்டி வேறுபக்ஷத்தின் (பூர்வபக்ஷத்தின்) தோற்றத்தைக் காட்டியதாகவாகும் எனக் கண்டுகொள்ளவேண்டும். (14) (எ–று)

ஐந்தாவது கார்யாதிகரணம் முற்றிற்று.

அப்ரதீகாலம்பனுதிகரணம் 6.

(ஸூ) அப்ரதீகாலம்பநான் நயதீதி பாதராயண: உபயதா அதோஷாத் தத்க்ரது: ச (15)

(ப–ரை) [**अमानवः पुरुषः** (அமானவ: புருஷ:)=முகூறிய அமானவபுருஷனுனவன் **अप्रतीकालंबनान्** (அப்ரதீகாலம்பநான்)=ப்ரதீகோபாஸ்தி செய்தவர்களைத் தவிர்த்து வேறு உபாஸனஞ்செய்தவர்களை **नयतीति** (நயதீதி)=ப்ரம்ஹலோகத்தை யடைவிக்கிறுன் என **बादरायणः** (பாதராயணஃ) = பாதராயணர் எண்ணுகிறுர் **उभयथा** (உபயதா)=இவ்விதம் இரண்டுவிதமாக (ப்ரதீகோபாஸகர்களை ப்ரம்ஹ

प्रतीकोपासकान् ब्रह्म लोकं नयति वा नवा । अविशेषश्रुतेरेतान् ब्रह्मोपासकवन्नयेत् ॥ १ ॥

ब्रह्मक्रतोरभावेन प्रतीकार्हफलश्रवात् । न तान्नयति पञ्चाग्निविदो नयति तच्छ्रुतेः ॥ २ ॥

स्थितमेतत्कार्यविषया गतिर्न परविषयेति । इदमिदानीं संदिह्यते किं सर्वान्विकारालम्बनानविशेषेणैवामानवः पुरुषः प्रापयति ब्रह्मलोकमुत कांश्चिदेवेति । किं तावत्प्राप्तं सर्वेषामेवैषां विदुषामन्यत्र परस्माद्ब्रह्मणो गतिः स्यात् । तथाहि—'अनियमः सर्वासाम्—'(ब्र० सू० ३ । ३ । ३१) इत्यत्राविशेषेणैषा विद्यान्तरेष्ववतारितेति। एवं प्राप्ते प्रत्याह—अप्रतीकालम्बनानिति । प्रतीकालम्बनान्वर्जयित्वा सर्वानन्यान्विकारालम्बनान्नयति ब्रह्मलोकमिति बादरायण आचार्यो मन्यते । नह्येवमुभयथाभावाभ्युपगमे कश्चिद्दो-

---

லோகஞ்சேர்ப்பதில்லை என்றும், மற்றவுபாஸகர்களை ப்ரம்ஹலோகம் சேர்ப்பிக்கின்றனரென்றும்) சொல்லுவதில் **अदोषात्** (அதோஷாத்)=தோஷம் ஸம்பவிக்கவும்மாட்டாது **तत्क्रतुश्च** (தத்க்ரதுஶ்ச)=இவ்விஷயத்தில் தத்க்ரது நியாயமும் உபோத்பலகமாகவிருக்கிறது. (15) (எ—று)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) அமானவபுருஷன் ப்ரதீகோபாஸகர்களை ப்ரம்ஹலோகத்தை சேர்ப்பிக்கின்றனா? அல்லது இல்லையா? என்பது ஸந்தேஹம். விசேஷஶ்ருதி ஒன்றுமில்லாதிருப்பதால் ப்ரம்ஹோபாஸகர்களைப் போல இந்த ப்ரதீகோபாஸகர்களையும் ப்ரம்ஹலோகத்தில் சேர்க்கவேசெய்கின்றான் என்பது பூர்வபக்ஷம். ப்ரம்ஹ விஷயகமான தியானமில்லாதிருப்பதாலும், ப்ரதீகத்யானத்துக்குரிய பலன் சொல்லப்பட்டிருப்பதாலும் ப்ரதீகோபாஸகர்களை ப்ரம்ஹலோகம் சேர்ப்பிப்பதில்லை பஞ்சாக்னிவித்யோபாஸகர்களையோ ப்ரம்ஹலோகம் சேர்ப்பிக்கின்றான். அவ்விதம் சாஸ்திரம் சொல்லியிருப்பதே அதன் காரணமாகும் என்பது **ஸித்தாந்தம்.**

பாஷ்யம்.—கதியானது கார்ய ப்ரம்ஹவிஷயமானதே யொழிய பரப்ரம்ஹ விஷயமானதன்று என்பது நிலைத்தது. இப்பொழுது அமானவ புருஷன் விகாரோபாஸனஞ் செய்பவர் யாவரையும் பொதுவாகவே ப்ரம்ஹலோகம் சேர்ப்பிக்கின்றனா? அல்லது சிலரையேதான் சேர்ப்பிக்கின்றனா? என்ற இது ஸந்தேஹித்து நிஸ்சயிக்கப்படுகிறது. முதலில் கிடைப்பதாவது:—பரப்ரம்ஹத்தைத் தவிர்த்து எல்லாவுபாஸகர்களுக்கும் இந்தக் கதியானது உண்டு. அதாவது:— "அநியம: ஸர்வாஸாம்" என்ற விடத்தில் பொதுவாகவே இந்தக் கதியானது வேறுவித்யைகளிலும் சொல்லப்பட்டிருக்கிறது என்றும். என இவ்விதம் பூர்வ பக்ஷம் ப்ராப்தமாகவே "அப்ரதீகாலம்பநான்" என்றதாதியால் பதில் சொல்லுகிறார். ப்ரதீகோபாஸனஞ் செய்கின்றவர்களைத் தவிர்த்து மற்ற எல்லா விகாரோபாஸகர்களையும் (அமானவபுருஷன்) ப்ரம்ஹலோகத்தைச் சேர்ப்பிக்கிறான் என பாதராயண ஆசிரியர் எண்ணுகிறார். இவ்விதமுபயதாபாவம் ஒப்புக்கொள்ளுவதில் (இரண்டுவிதமாகப் பொருள் கொள்ளுவதில்) ஒருதோஷமுமில்லை யன்றோ. முன்னர் சொன்ன அநியம நியாயமானது ("அநியமஸ்ஸர்வாஸாம்" என்ற ஸூத்

षोऽस्ति । अनियमन्यायस्य प्रतीकव्यतिरिक्तेष्वप्युपासनेषूपपत्तेः । तत्क्रतुश्चास्योभयथाभावस्य समर्थको हेतुर्द्रष्टव्यः । यो हि ब्रह्मक्रतुः स ब्राह्ममैश्वर्यमासीदेदिति श्लिष्यते 'तं यथा यथोपासते तदेव भवति' इति श्रुतेः । ननु प्रतीकेषु ब्रह्मक्रतुत्वमस्ति प्रतीकप्रधानत्वादुपासनस्य । नन्वब्रह्मक्रतुरपि ब्रह्म गच्छतीति श्रूयते यथा पञ्चाग्निविद्यायाम् 'स एनान्ब्रह्म गमयति' (छा० ४ । १५ । ५) इति । भवतु यत्रैवमाहत्यवाद उपलभ्यते तदभावे त्वौत्सर्गिकेण तत्क्रतुन्यायेन ब्रह्मक्रतूनामेव तत्प्राप्तिर्नेतरेषामिति गम्यते ॥ १५ ॥

विशेषं च दर्शयति ॥ १६ ॥

नामादिषु प्रतीकोपासनेषु पूर्वस्मात्पूर्वस्मात्फलविशेषमुत्तरस्मिन्नुत्तरस्मिन्नुपासने दर्शयति—'यावन्नाम्नो गतं तत्रास्य यथाकामचारो भवति' (छा० ७ । १ । ५) 'वाग्वाव

திரத்தால் நிரூபித்த நியாயமானது) ப்ரதீகத்தை விட வேறான உபாஸனங்களிலும் பொருந்தக் கூடியதாகவே ஆகிறது. தத்க்ரது நியாயமும் இந்த இரண்டு விதமான பொருள்கொள்ளுவதைச் சாதிக்கக்கூடிய ஹேதுவாக (காரணமாக) வும் காணப் படுகிறது. எவன் ப்ரம்ஹவிஷயமான ஸங்கல்பமுள்ளவனோ அவன் ப்ரம்ஹஸம் பந்தியான ஐஸ்வரியத்தை அடைவான் என்பது பொருந்துகிறது. "அதை எந் தெந்த விதமாக உபாஸிக்கின்றனரோ அவ்விதமே ஆகின்றனர்" என ஶ்ருதியு மிருக்கிறது. ப்ரதீகங்களில் (சாளக்ராவசிலை முதலியன ப்ரதீகங்களெனப்படும்) ப்ரம்ஹக்ரதுத்வமானது (ப்ரம்ஹமென்ற ஸங்கல்பமானது) கிடையாது. அவ் வுபாஸனமானது ப்ரதீகத்தை ப்ரதான (முக்கிய) மாகக்கொண்டிருப்பதே அதன் காரணமாகும்.

சங்கை—பஞ்சாக்னிவித்யையில் "அந்த அமானவபுருஷன் இவர்களை ப்ரம் ஹத்தை யடைவிக்கிறான்" என்பதாய் ப்ரம்ஹத்யானமில்லாதவன் கூட ப்ரம்ஹத் தை யடைவதாகச் சுருதியில் கூறப்படுகின்றதன்றோ எனின்?

உத்தரம்—எங்கு இவ்விதம் ப்ரதீகோபாஸகன் விஷயத்தில் தனியான உப தேசம் காணப்படுகிறதோ அங்கு இவ்விதமிருக்கட்டும். அவ்விதம் சொல்லப் படாத விடத்திலோ பொதுவாகவே உள்ள தத்க்ரது நியாயத்தினாலேயே ப்ரம்ஹ விஷயமான தியானஞ் செய்பவர்க்கு ப்ரம்ஹப்ராப்தியே யொழிய மற்றவர்க் கில்லை என்பது அறியப்படுகிறது. (15) (எ—று)

(ஸூ) விசேஷம் ச தர்சயதி (16)

(ப—ரை) **विशेषञ्च** (விசேஷஞ்ச)=முன்முன்னுள்ள நாமாதிப்ரதீக உபாஸ னங்களை விட மேல்மேலுள்ளவாகாதிப்ரதீக உபாஸனங்களில் பலவிசேஷத்தை யும் **दर्शयति** (தர்ஶயதி)=சுருதியானது காண்பித்து மிருக்கிறது. (16) (எ—று)

பாஷ்யம்.—நாமாதிகளான ப்ரதீகோபாஸனங்களில் முன் முன்னுள்ளதைக் காட்டிலும் மேன் மேலுள்ள ப்ரதீகோபாஸனத்தில் பலவிசேஷத்தைச் சுருதி காண்பித்திருக்கிறது. அதாவது: "நாமாவுக்குக் கதியானது எதுவரையுண்டோ

नाम्नो भूयसी' (छा० ७।२।१) 'यावद्वाचो गतं तत्रास्य यथाकामचारो भवति' (छा० ७।२।२) 'मनो वाव वाचो भूयः' (छा० ७।३।१) इत्यादिना। स चायं फलविशेषः प्रतीकतन्त्रत्वादुपासनानामुपपद्यते। ब्रह्मतन्त्रत्वे तु ब्रह्मणोऽविशिष्टत्वात्कथं फलविशेषः स्यात्। तस्मान्न प्रतीकालम्बनानामितरैस्तुल्यफलत्वमिति ॥ १६ ॥

इति श्रीगोविन्दभगवत्पूज्यपादशिष्य श्रीमच्छङ्करभगवत्पादकृतौ श्रीशारीरकमीमांसाभाष्ये चतुर्थाध्यायस्य तृतीयः पादः ॥ ३ ॥

चतुर्थाध्याये चतुर्थः पादः।

[अत्र पादे ब्रह्मप्राप्ति–ब्रह्मलोकस्थितिनिरूपणम्]

१ संपद्याविर्भावाधिकरणम्। सू० १–३

संपद्याविर्भावः स्वेन शब्दात् ॥ १ ॥

அவற்றில் இவனுக்கு (நாமோபாஸகனுக்கு) தனதிஷ்டப்படி நடத்தல் ஏற்படுகிறது” என்றும் “வாக்கே நாமாவைக் காட்டிலும் மேலானது” “வாக்குக்கு எவ்வளவு தூரம் கதியுண்டோ அவ்விடத்தில் இவனுக்கு (வாகிந்திரியோபாஸகனுக்கு) தனதிஷ்டப்படி நடத்தல் ஏற்படுகிறது. “மனஸ்ஸே வாக்கைக் காட்டிலும் மேலானது” என்றதாதியாம். அந்த இந்தப் பலவிசேஷமும் உபாஸனமானது (வாகாதி) ப்ரதீகத்தை யொட்டியதாக இருப்பதால் பொருந்தக் கூடியதாகவாகிறது. ப்ரம்ஹாதீனமாக உபாஸன மிருந்தாலோ ப்ரம்ஹமானது எங்கும் ஒரேமாதிரியாக இருப்பதால் பலவிசேஷமானது எவ்விதம் ஏற்படும். ஆகவே ப்ரதீகோபாஸகர்களுக்கு மற்றவுபாஸகர்களுடன் துல்யமானபலன் ஏற்படமாட்டாது என்றேற்பட்டது. (16) (எ–று)

ஆறுவது அப்ரதீகாலம்பனுதிகரணம் முற்றிற்று.

ஸ்ரீகோவிந்தபகவத்பூஜ்யபாத சிஷ்யர்களான ஸ்ரீமத்சங்கரபகவத்பாதர்களின் கிருதியான ஸ்ரீசாரீரகமீமாம்ஸாபாஷ்யத்தில் நன்காவது அத்தியாயத்தின் மூன்றுவதுபாதம் முற்றிற்று.

நான்காவது அத்தியாயத்தின் நான்காவதுபாதம்.

ஸம்பத்யாவிர்ப்பாவாதிகரணம் 1.

(அ–கை) முந்தின மூன்றுபாதங்களிலும் நிர்க்குண ப்ரம்ஹஸாக்ஷாத்காரமுள்ளவர்களுக்கு புண்ணியபாபகர்மங்கள் யாவும் தேய்ந்ததும் இவ்விடத்திலேயே ப்ராணன்களுக்கு லயமேற்படுகிறதேயொழிய உத்க்ராந்தியானது கிடையாது என்பது சொல்லப்பட்டது. அத்துடன் ஸகுண ப்ரம்ஹோபாஸகர்களுக்கு

புண்ணியபாபங்கள் தேய்ந்ததும் தலையிலுள்ள ஸுஷும்ணநாடிவழியாக வெளிக்கிளம்பி அர்ச்சிராதிமார்க்கமாக ஸகுணப்ரம்ஹப்ராப்த்தி யேற்படுவதாகச் சொல்லப்பட்டது. 22 ஸூத்திரங்களும் 7 அதிகரணங்களுமுள்ள இந்நான்காவது பாதத்தில் நிர்க்குணப்ரம்ஹ ஸாக்ஷாத்காரத்தை யடைந்து அதிலேயே ஒடுங்கின ப்ராணனுள்ளவர்களுக்கு இயற்கையாக வுள்ளதும் விசுத்த சித்ரூபமுமான ப்ரம்ஹாபேதத்துடனும், ஆரோபிதமான ஸர்வக்ஞத்வாதிரூபத்துடனும் அவஸ்தானமும், ஸகுண ப்ரம்ஹோபாஸனஞ் செய்து ஸகுணப்ரம்ஹத்தை யடைந்தவர்களுக்கு ஸகுணப்ரம்ஹ ஸாயுஜ்யத்துடன் அவஸ்தானமும் நிரூபிக்கப்படுகிறது.

சாந்தோக்கியத்தில் "**एवमेवैष संप्रसादोऽस्माच्छरीरात् समुत्थाय परं ज्योतिरुपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते**" எனப் படிக்கப்படுகிறது. **एवमेव** (ஏவமேவ) இவ்விதமே, **एष संप्रसादः** (ஏஷஸம்ப்ரஸாத:) அவித்யாதிதோஷங்களினின்றும் விடுபட்ட இந்தச் சுத்தஜீவன், **अस्मात् शरीरात्** (அஸ்மாத் சரீராத்) இந்தச் சரீரத்தினின்றும் (அழியக் கூடிய, அதாவது: அநிருத ஜடதுக்காத்மகமான ஸ்தூல ஸூக்ஷ்ம காரணசரீரத்தினின்றும் என்றும்.) **समुत्थाय** (ஸமுத்தாய) வெளிக்கிளம்பி (ஸ்தூலஸூக்ஷ்மகாரணசரீராபிமானத்தை விலக்கிக் கொண்டு) **परंज्योतिरुपसंपद्य** (பரம்ஜ்யோதிருபஸம்பத்ய) பரமானஜ்யோதிஸ்ஸை யடைந்து, **स्वेन रूपेण** (ஸ்வேந ரூபேண) சொந்தமான ரூபத்துடன், **अभिनिष्पद्यते** (அபிநிஷ்பத்யதே) அபிவ்யக்தனுக வாகிருன். என்பது ஸித்தாந்தப்படி அதன் பொருளேற்படுகிறது.

இவ்விடத்தில் "**स्वेन रूपेणाभिनिष्पद्यते**" என்றதால் தேவலோகாதி உபபோகஸ்தானங்களில் போல ஆகந்துகமான (புதிதாக ஏற்படுகின்ற) வேறு ரூபத்துடன் சேருகிருன் என்று பொருள் கொள்ளுவது நியாயமா? அல்லது தனது சொந்தமான ஸ்வரூபத்துடன் மட்டும் பிரகாசத்தையடைகிருன் என்று பொருள் கொள்ளுவது நியாயமா? எனஸந்தேஹித்து சொந்த ரூபத்துடன் மட்டும் ப்ரகாசிக்கிருன் என்றுதான் பொருள் கொள்ளவேண்டும் என்று ஸித்தாந்தப்படுத்த வேண்டி 3 ஸூத்திரங்கள்கொண்ட இந்த அதிகரணமரனது ஆரம்பிக்கப் படுகிறது. அதன்முதல் ஸூத்திரம் பின்வருமாறு—

(ஸூ) ஸம்பத்யாவிர்ப்பாவ: ஸ்வேந சப்தாத் (1)

(ப—ரை) ["**अस्माच्छरीरात्समुत्थाय परं ज्योतिरुपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते** (அஸ்மாத்சரீராத் ஸமுத்தாய பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணுபிநிஷ்பத்யதே)" எனமோக்ஷத்தைச் சொல்லும் சுருதியில்] **संपद्य** (ஸம்பத்ய)=பரமான ஜ்யோதிஸ்ஸை யடைந்து அபேதஸாக்ஷாத்காரத்தை யடைந்து, **आविर्भावः** (ஆவிர்ப்பாவ:)=முன்னரே இருக்கின்ற சொந்தஸ்வரூபத்தின் பிரகாசமானது ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஏன்? **स्वेन शब्दात्** (ஸ்வேந பப்தாத்)=சுருதியில் ஸ்வேந என்றதால் ஸ்வரூபபோதகமான சப்தம் பிரயோகிக்கப்பட்டிருப்பதே அதன் காரணமாகும். (1) (எ—று)

नाकवन्नूतनं मुक्तिरूपं यद्वा पुरातनम्। अभिनिष्पत्तिवचनात् फलत्वादपि नूतनम् ॥ १ ॥

स्वेन रूपेणेति वाक्ये स्वशब्दात्तत्पुरातनम्। आविर्भावोऽभिनिष्पत्तिः फलञ्चाज्ञानहानितः ॥ २ ॥

"एवमेवैष संप्रसादोऽस्माच्छरीरात्समुत्थाय परं ज्योतिरुपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यत" इति श्रूयते। तत्र संशयः—किं देवलोकाद्युपभोगस्थानेष्विवागन्तुकेन केनचिद्विशेषेणाभिनिष्पद्यत आहोस्विदात्ममात्रेणेति। किं तावत्प्राप्तम्। स्थानान्तरेष्विवागन्तुकेन केनचिद्रूपेणाभिनिष्पत्तिः स्यात्। मोक्षस्यापि फलत्वप्रसिद्धेः। अभिनिष्पद्यत इति चोत्पत्तिपर्यायत्वात्। स्वरूपमात्रेण चेदभिनिष्पत्तिः पूर्वास्वप्यवस्थासु स्वरूपानपायाद्विभाव्येत। तस्माद्विशेषेण केनचिदभिनिष्पद्यत इति। एवं प्राप्ते ब्रूमः—केवलेनैवात्मनाविर्भ-

---

வையாஸிக நியாயமாலை.

(க-ரை) முக்தி ஸ்வரூபமானது ஸ்வர்க்கமானது போல புதிதாக ஏற்படுகிறதா? அல்லது முன்னரே உள்ளதா? என்பது ஸந்தேஹம். "அபிநிஷ்பத்யதே" என்ற வசனமிருப்பதைக் கொண்டும், பலனாக வாவதைக் கொண்டும் முக்திஸ்வரூபமானது புதிதாக ஏற்படுவதாகத்தான் சொல்லவேண்டும் என்பது பூர்வபக்ஷம். "ஸ்வேந ரூபேண" என்ற வாக்கியத்தில் ஸ்வேந (சொந்தமான=முன்னரே யுள்ள) என்ற சப்தமிருப்பதைக் கொண்டு முக்திஸ்வரூபத்தை முன்னருள்ளதாகவேதான் கொள்ளவேண்டும். அபிநிஷ்பத்யதே=என்றதாற் சொல்லப்படும் அபிநிஷ்பத்தியானது ஆவிர்ப்பாவமாகவேதான் ஏற்படுகிறது. அக்ஞான நிவிருத்தியானது பலனாகவாகிறது என்பது **ஸித்தாந்தம்.** (எ-று)

